741

# தமிழ் உள்ளம்

ஆசிரியர் :

வித்வான் ஜி. சுப்பிரமணிய பிள்ளை M. A., B. L.,.

நியூ புக்ஸ்டால்,

சிதம்பரம்.

Acc. No. 14011.

# தமிழ் உள்ளம்

ஆக்கியோன்

சித்தாந்தச் செந்நாவலர்

வித்வான் ஜி. சுப்பிரமணிய பிள்ளை M. A., B. L.,
தமிழ் ஆராய்ச்சித் தலைமைப்பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

வெளியிட்டோர்
நியூ புக்ஸ்டால்,
சிதம்பரம்.
கிளை :- அண்ணாமலை நகர்.

உரிமை ஆசிரியருக்கு. ரூ. 2—0—0.

முதற் பதிப்பு--ஜுலை 1950.

இரண்டாம் பதிப்பு—ஜுன் 1952.

PRINTED AT CROSSWORD PRESS, CHIDAMBARAM.

Acc. No. 14011
T 274

# முதற்பதிப்பின் முகவுரை

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியரும் தமிழ்த் துறைத் தலைவரும் ஆகிய டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள், எம், ஏ , எழுதியது.

'தமிழ் உள்ளம்' என்னும் இந்நூல் சங்க காலத்தே வாழ்ந்த தமிழ் மக்களின் உள்ளத்துணர்ச்சிகளையும் அவ்வுணர்ச்சிகளால் விளைந்த பயன்களையும் எடுத்து விளக்குகின்றது. சங்கத் தொகை நூல்களுள் ஒன்றாகிய புறநானூற்றிலுள்ள செய்யுட்களை அடியொற்றி இந்நூல் எழுதப்பட்டுள்ளது. என் நண்பரும், இப்பல்கலைக் கழகத்துணைப் பேராசிரியருமாகிய திரு கோ சுப்பிரமணிய பிள்ளை பண்டைத் தமிழ் வேந்தர், குறுநில மன்னர், வள்ளல்கள், தறுகண் மறவர், புலவர் என்போரின் சிறப்புடை நாகரிகப் பண்புகளை அரசியல், சமூகநிலை முதலிய கண்கொண்டு நோக்கிப் பண்டைத் தமிழர் உரிமை வாழ்வின் இயல்பினை இந்நூலகத்தே விளக்கும் முறை மிகவும் சுவை பயப்பதாகும். புறநானூற்றுப் பாடல்கள் சிலவற்றிற்கு இவர் தரும் சூழ்நிலைப் புனைவுகள் அக்காலத் தமிழ் மக்களின் வாழ்க்கைச் செயல்முறைகளைத் தெளிவாகப் புலப்படுத்தும் பான்மையுடையன. புறப்பாடல்கள் சிலவற்றிற்கு இவர் கூறும் சில புதுப்பொருள் விளக்கங்கள் இந்நூலுக்கு அழகு செய்கின்றன. செறிவும் இனிமையும் பொருந்திய எதுகை நயத்துடன் இந்நூலின் சொன்னடை சிறப்புற்று விளங்குகிறது. பிறநாட்டு வரலாற்றுச் செய்திகள் சிலவற்றையும், வழக்கவொழுக்கங்கள் சிலவற்றையும் நம்மவற்றோடு ஒப்புமை செய்து நமது பழைய அரசியல் வாழ்வின் உயர்வினைப் புலப்படுத்தும் முறை பாராட்டத்தக்கது இந்நூல் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நம் நாட்டில் வாழ்ந்த தமிழ் முன்னோர்களின் நல் வாழ்வினையும், அறிவின் திறத்தையும், அரசியல் மேம்பாட்டையும் நன்கு தெரிவிப்பதாகலின் பண்டைத் தமிழிலக்கியங்களின் உயர்ந்த சுவை நலங்களை அறிய விரும்புவோர் இதனைப் பேணுவர் என்னும் நம்பிக்கையுடையேன்.

அண்ணாமலை நகர்,
14—7—1950.

அ. சிதம்பரநாதன்.

T. 2741

# 1. தமிழர் அரசியல்

ஆன்றோர்கள் நம் அருமைத் தமிழ்மொழியை, "ஆயுந் தொறுந்தொறு மின்பந் தருந்தமிழ்" என்று போற்றினர். அவ்விதம் நாம் ஆராய்வதற்கும், அம்மொழி தழைத்தோங்கி மேல் செழித்து வளர்வதற்கும் அடிப்படையாகவுள்ள மூல இலக்கியம் சங்க இலக்கியமேயாகும். அச் சங்க இலக்கியத்தின் ஒரு பகுதியாய் விளங்குவது எட்டுத்தொகை. எட்டுத் தொகை நூல்கள் சொட்டச் சொட்டச் சுவை பெருக்கும் என்பர். எட்டுத்தொகை நூல்களுள் தலை சிறந்திலங்குவது புறநானூறு என்னும் தொகைநூல். இந்நூல் இற்றைக்குச் சற்றேறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நமது முன்னோர்கள் தமிழ்நாட்டில் நடத்திவந்த தினசரி வாழ்க்கையைத் தெளிவாகவும் விரிவாகவும், பசுமரத்தாணிபோல், நம் உள்ளத்திற் பதியும் வண்ணம் சித்திரித்துக் காட்டுகின்றது. அக்காலத்தில் அவர்களுக்கு நேர்ந்த இன்பங்கள் பல, துன்பங்களும் பல. அவ்வின்பங்களில் எவ்வாறு இலங்கினார்கள்? துன்பங்களில் எவ்வாறு துலங்கினார்கள்? அம் முதல் நூற்றாண்டு மூதாதையர்க்கும் இருபதாம் நூற்றாண்டினராகிய நமக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் யாவை? இப் பழங் கதைகளால் நாம் எய்தும் பயன் ஏதேனும் உண்டா? என்ற பல கேள்விகளுக்கும், நேரான வகையில் ஐயந்திரிபின்றி புறநானூறே விடையிறுக்க வல்லது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் உலக சரித்திரம் எவ்வாறு இருந்தது என்பதை நாம் உற்று நோக்குவோமானால், அப்பொழுது அமெரிக்காக் கண்டம் கண்டுபிடிக்கப் படவில்லை. அதனால் உலகத்திற் பாதி இருளால் மூடப்பட்டிருந்தது. அங்குச் செந்நிறமும் பரட்டைத் தலையுங்கொண்ட ஒருவகைக் காட்டு மிராண்டிகள் வனாந்தரங்களில் விலங்குகள் போல் வாழ்ந்து வந்தனர். இப்பொழுதும் சிற்சில இடங்க

ளில் அவ்வாறே வாழ்ந்து வருகின்றனராம். ரோம தேசத்து முடிசூடா மன்னனான ஜூலியஸ் ஸீஸர் (Julius Caesar) என்பவன் ஆங்கில நாட்டைப் படையெடுத்துச் சென்று பார்த்தான். அங்கு கெல்ட்ஸ் (Kelts) என்னும் ஒருவகை அநாகரிகர் குகைகளில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் கல்லினாலே ஆயுதங்கள் செய்து பிழைத்தவர்கள். இவர்களைத் திருத்துவது என்றும் இயலாத காரியம் என்று மனமுடைந்து ஸீஸர் ரோமுக்குத் திரும்பிவிட்டான். வட ஐரோப்பா முற்றிலும் கரடு முரடான மனிதர்கள் சஞ்சரித்து வந்த காடாகவே யிருந்தது. கிரீஸ் நாட்டிலும் ரோம நாட்டிலும், பின்னும் நம் இந்திய தேசத்திற்கு இடைப்பட்ட சில நாடுகளிலுமே சிறிதளவு நாகரிகம் தோன்றி, மனிதர்கள் விலங்கினின்றும் பிரித்தெண்ணும் திறம் வாய்ந்து வாழ்ந்து வந்தனர். ஆனால் அக்காலத் தமிழரின் தன்மை என்ன? அரசியலின் ஆற்றல் என்ன? போர் முறையின் போக்கென்ன? மங்கையரின் மணப்பான்மை யாது? என்றிவை போன்ற கேள்விகளுக்குப் புறநானூறு கூறும் விடைகள் யாவை என்று சற்று ஆராய்வோம்.

புறநானூற்றுப் பாக்கள் ஒவ்வொன்றிலும் பழந்தமிழின் இள நலம் பொங்கிப் பொலிகின்றது. உணர்ச்சி ததும்பும் பாக்கள் நம் உள்ளத்தை உருக்குகின்றன. தொன்மைப் புலவர்கள் தொடை, எதுகை, மோனைகளைக் கவனியாது, உள்ளத் துணர்ச்சிகளைக் கள்ளங் கபடமின்றி உள்ளது உள்ளவாறே உருப்பெற்றெழும் வண்ணம் பாக்களை யாத்தனர். அவைகள், கைபுனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பெய்தி, அரிய கருத்துக்களை யகத்தடக்கி, கற்போர்க்குக் களிபெருவகையை ஊட்டுகின்றன. சிலர் அவற்றை வழக்கொழிந்த தமிழென்றும், இருப்புக் கடலையென்றும் எள்ளி நகையாடுவர். இதற்குக் காரணம் ஒன்றுண்டு. அநேகருக்கு எழுதத்தெரியும், பேசவும் தெரியும். ஆனால் படிக்கத் தெரியாதென்றே சொல்லிவிடலாம். ஒரு கவியைப் படித்தால் அதைப் பாடிய புலவனது உள்ளத்திற் கிளர்ந்தெழும் உணர்ச்சிகள் எவை?

அவன் கருத்து என்ன? அவன் குறிப்பது யாது? அவன் எடுத்தாளும் வார்த்தைகளின் உண்மைப் பொருள் யாது? என்றிவை யெல்லாம் நன்கு தெரிந்துகொண்டாலே, அக் கவியை நாம் நன்கு தெரிந்து படித்தவர்களாவோம். புற நானூற்றில் இருநூற்று அறுபத்தாறு பாடல்களுக்கு ஒரு சிறந்த பழையவுரை இருக்கிறது. அவ்வுரையாசிரியர் பெயர் தெரியவில்லை. ஒவ்வொரு பாட்டிலுமுள்ள அழகுகளையெல் லாம் நாம் நன்கு உணரும் விதத்தில் விளக்கமாய் எழுதியிருக் கிறார். அவரது உரை நயத்தையும் புலவர்களது கவி நயத் தையும் நாம் தெரிந்துகொள்வதற்கு, ஒரு சிறு பாட்டைக் கவனிப்போம்.

பாரி என்னும் ஒரு சிற்றரசன் ஒரு சிறு மலையின்மீது தலைநகர் அமைத்து ஆண்டுவந்தான். அம்மலையைப் பாரியின் பறம்பு என்று வழங்குவர். பாரி ஒரு சிறந்த கொடையாளி; வரையாது ஈயும் வள்ளன்மைக்கு எடுத்துக்காட்டாகவுள்ள வன். அவன்மீது பொறாமை கொண்ட சில மன்னர் கூடி அவனை வஞ்சனையால் வென்று கொன்றுவிட்டனர். அவனோடு நெடுங்காலம் நட்புப் பூண்டு அவன் நலத்தை நுகர்ந்துவந்த கபிலர் என்னும் பெரும் புலவர் பாரியின் மகளிர் இருவரையும் அழைத்துக்கொண்டு அம்மலையை விட்டு நீங்கினார். அப்பொழுது ஆற்றொணாத் துயரம் அவர் ஆவியைப் பிடித்தீர்த்தது. கீழே நின்று அம்மலையைப் பார்த்துச் சில வார்த்தைகளைச் சொன்னார். இந்த மலை இங்கு நின்று பார்ப்பவர்களுக்கும் தெரியும், இன்னும் சிறிது தூரம் தள்ளிச் சென்று பார்ப்பவர்களுக்கும் தோன்றும்" என்னும் பொருள்பட அவர் பாடிய பாடல்:—

"ஈண்டுநின் றோர்க்குந் தோன்றுஞ் சிறுவரை
சென்றுநின் றோர்க்குந் தோன்றும் மன்ற
களிறுமென் றிட்ட கவளம் போல
நறவுப்பிழிந் திட்ட கோதுடைச் சிதறல்
வாருஞ் பொழுகு முன்றிற்
றேர்வீ சிருக்கை நெடியோன் குன்றே."

(புறநானூறு—114)

இதைப் படித்ததும் நாம் பெரிதும் ஏமாற்றம் அடைகின்றோம். இவருக்குப் பாடத் தெரியாதா? உள்ளத்தில் உணர்ச்சியே கிடையாதா? தம் துயரத்தை ஒன்றும் தெரிவித்தாரில்லையே! பாரி பிரிந்ததைப் பகர்ந்தாரில்லையே! ஒரு மலையைச் சற்று தூரத்தில் நின்று பார்த்தால் தெரியும் என்ற உண்மையை விளக்க ஒரு கபிலர் வேண்டுமா? அதற்கு ஒரு கவியும் வேண்டுமா? இப்படித்தான் பழம் பாடல்கள் எல்லாம் இருக்குமா? என்றெல்லாம் சிலர் உள்ளம் உளையக் கூடும். உரையில் என்ன சொல்கின்றார் என்று பார்ப்போம். "நெடியோன் குன்று தோன்றுமென்றது, புகழான் உயர்ந்து காணாதார்க்கும் செவிப்புலனாகத் தோன்றும், அவன் உளனாய காலத்து; இப்பொழுது பிறமலை போலக் கட்புலனாகத் தோன்றும் அளவாயிற்றெனக் கையற்றுக் கூறியவாறாகக் கொள்க." என்பது விசேடவுரை. இதைப் படித்ததும் நமக்குக் கண்ணைத் திறந்து விட்டதுபோலிருக்கிறது. இப்பாட்டின் உண்மையுணர்ச்சி வெளியாகி நம் உள்ளத்தைக் கவரச் செய்கிறது. பாரி உயிரோடிருந்தபோது அவன் வாழ்ந்த மலையினின்றும் விரிந்த புகழானது எங்கும் பரந்திருந்ததால் அம் மலையைக் காணாதோரும் பாரியின் புகழைக் கேட்டு அம் மலையையும் தெரிந்து கொண்டிருந்தார்கள். மற்ற மலைகளுக்குக் கண்ணுற் காணப்படுவதன்றி, புகழின்மையால் சேய்மையிலுள்ளோர்க்கும் புகழானே தோன்றிக்கொண்டிருக்க முடியவில்லை. அம் மலைகளின் நிலைமைக்குப் பாரி மலையும் அவன் இறந்தபின், இறங்கிவிட்டது என்று இரங்கி வருந்துகிறார் கபிலர். ஒருமுறைக்குப் பன்முறையும் பாட்டைப் படிக்கின்றோம் இனிது சுவைக்கின்றோம். இப்பாட்டிலுள்ள பாவங்கள் எல்லாம் இனிது உருவெடுத்து இன்பக்களியூட்டுகின்றன. பாரியின் பாரடங்காப் புகழும், அவன் காலத்தில் அம் மலைக்கிருந்த பெருமையும், அவனழிந்த பின் அம்மலைக்கு நேர்ந்த சிறுமையும் எல்லாம் சொல்லாமலே நமக்கு விளங்கிவிடுகின்றன. சில சொற்களிற் பல பாவங்களும் பாரி எழு[illegible]வரின் இறந்தான் என்னே!

பண்டைப் பனுவல்கள் பலவும் இவ்வண்ணம் குறிப்பிற் பொருள் தரும் பெருமை பொலிந்திலங்கியே நிற்கும். ஆனால் அப்பாக்களைக் களங்கமறத் தெரிந்து கொள்வதற்குச் சிறிது உழைப்பு எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும். அதற்கு மனம் குன்றியவர்களாயிருந்தால் அப்பாக்கள் இருப்புக் கடலைதான். ஆதன் கைப்பொருளாகவே முடியும். அதற்காகப் பாக்களைக் குறைசொல்லிப் பயனென்ன? இதனால் புறநானூற்றுரை யாசிரியரின் உய்த்துணர்ந்து கருத்துக்களை வெளிப் படுக்குந்திறன் நன்கு விளங்கும். அவ்வுரையில்லாவிடில் இப்பாட்டைப் பலரும் படித்து இன் புற முடியாதென்றே சொல்லலாம்.

இன்னும் ஒரு தனிச் சிறப்பு புறநானூற்றிற்கு உண்டு. அக்காலத்திருந்த புவியரசர் பலரும் கவியரசராயும் விளங்கினார்கள். அவர்கள் பாடிய பாட்டுக்கள் பல புறநானூற்றிற் காணக்கிடக்கின்றன. அப்பாக்களில் அக்கால வரசர்களின் குறிக்கோள்கள் பலவும் பொறித் தெழுதப்பட்டிருக்கின்றன. பூதப்பாண்டியன், நெடுஞ்செழியன், இளம்பெருவழுதி, நலங்கிள்ளி, கோப்பெருஞ்சோழன், இளந்திரையன், பாலைபாடிய பெருங்கடுங்கோ, சேரமான் கணைக்காலிரும்பொறை, முதலிய மன்னர்கள் பாடியிருக்கும் பாக்கள் எல்லாம் நமக்குக் கிடைத்தற்கரிய மணிக்குவைகள் ஆகும். அப்பாக்களின் பெருமையை விரிப்பிற் பெருகும், தொகுப்பின் எஞ்சும். தமிழ் மன்னரின் வீரமும் ஈரமுமே புறநானூற்றின் சாரம் என்று சொல்லலாம்.

நமக்குக் கிடைத்திருக்கும் சான்றுகளின் மூலம் ஆராயுங் கால், தமிழ் நாட்டில் தொன்றுதொட்டு முடியரசே தழைத்து வந்தது. அவ்விதம் முடிதரித்துச் செங்கோல் செலுத்தி ஆண்டவர்கள் சேர, சோழ, பாண்டியர்கள் என்னும் மூவ ராவர். இம் மூவேந்தரில் ஒருவருக்குக் கீழ்ப்பட்டவராய் பல சிற்றரசர்கள் ஆங்காங்கு ஒரு சிறு பகுதியை ஆண்டு வந்தனர். அவர்கள் குறுநிலமன்னர் என்று வழங்கப்பட்டனர். அக்

குறுநிலமன்னர்களிற் சிலர் முடியுடை வேந்தர்க்குத் திறை கொடுத்து வந்தனர். சிலர் அவர்களுடைய படைத்தலைவராய் விளங்கினர். இன்னும் சிலர் தனியாட்சியுடனும் ஆண்டு வந்ததாகத் தெரிகிறது. அவ்விதம் அடுத்தடுத்து நெருங்கினாற் போல் பல அரசர்கள் தோன்றி விளங்கினமையால் அவர்களிடையே அடிக்கடி போர்கள் நிகழ்ந்துவந்தன. அதனால் நெறி முறை பிழைத்து மெலிகோல் செய்த வேந்தரும், நலிவெய்தி வலிகுன்றினோரும், அரசராய்த் தோன்றித் தலைமை கொள்ளுவது இயலாததாயிற்று. அடுத்தடுத்துப் பகைமை விளைந்து வந்ததனால், தமிழ் மக்களும் மறமும் வீரமும் படைத்து, போரென்னுஞ் சொல் தேனினுங் களிப்புச் செய்யும் சிந்தையராய், அச்சமென்பதறியாத தீரர்களாய்த் திகழ்ந்தார்கள்.

முடியரசைத் தவிர வேறு எவ்விதமான அரசியல் வாழ்க்கையையும் தமிழ் மக்கள் விரும்பவில்லை. அரசனும் தமிழனாய்ப் பிறந்தவன், குடிகளும் தனித் தமிழ் மக்கள். அரசனுக்குத் தன்னாட்டின் மீது பக்தியும் குடிகள் மீது அன்பும் நிறைந்திருந்தன. அரசையும் குடியையும் அகலவிடாது தாய் மொழியாகிய தமிழ் மொழி இறுக்கிப் பிணைத்தது. இருவரிடையும் ஒன்றுபட்ட உணர்ச்சிகளே உள்ளத்தூறித் ததும்பின. குடிமக்களின் வாழ்க்கை 'நலனை'த்தவிர வேறு எதையும் அரசன் கனவிலுங்கூட கண்டறியான். இவ்வித மன்னனின்கீழ் குடிகளும், தண்புனற்பூசலல்லது கண்புனற் பூசல் கொள்ளாது, புலிபுறங்காக்கும் குருளைபோல, ஏம வாழ்வை யெய்தினர். 'கொடுங்கோலன்' என்னும் பழிச் சொல் தனக்கு நேருமாயின், அதைவிடத் தனக்கு வேறு கேடு உளதாகத் தமிழரசன் கொள்வானல்லன். நெடுஞ்செழியனின் நெடுமொழியால் நாம் இதை அறியலாம்:-

> "என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணாது
> கொடியனெம் மிறையெனக் கண்ணீர் பரப்பிக்
> குடிபழி தூற்றுங் கோலே னாகுக."
>
> (புறநானூறு—72)

இங்கு, ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் என்னும் மற்றோர் அரசன் கூறியுள்ள உரிமை வாய்மொழியைத் தமிழன்பர்கள் நன்கு தெரிந்திருத்தல் வேண்டும். ஒவ்வொரு நாட்டிலும் அந்நாட்டுமக்கள் தங்கள் அரசர் தமக்குக் கொடுத்துள்ள உரிமைப் பத்திரத்தை அதிக ஆவலுடனும், அபிமானத்துடனும் போற்றிப் பாராட்டுகிறார்கள். உதாரணமாக, ஆங்கில நாட்டில் மாக்னு கார்ட்டா (Magna Carta) அல்லது பெரிய சுதந்திரப்பத்திரம் (The Grate Charter) என்று ஒன்றிருக்கிறது. சுமார் எண்ணூறு ஆண்டுகளுக்குமுன் அந்நாட்டுத் தலைவர்களாயுள்ளார் ஒருங்கு கூடிக் கொடுங்கோல் புரிந்து வந்த ஜாண் (King John) என்னும் அரசனை வற்புறுத்தி, ஒரு சுதந்திர பிரகடனத்திற் கையெழுத்துப் பெற்றனர். அதற்கு மாக்னு கார்ட்டா என்று பெயர். அதை ஆங்கில நாட்டு மக்களின் சுதந்திரத்திற்கு உயிர் அளித்த மூலாதாரப்பத்திரம் என்று கொண்டாடுகிறார்கள். ஆங்கிலர் அம்மன்னன் மனங்கலங்கிக் கொடுத்த வாக்குறுதியைத் தம் உயிரினும் மேலாகப் போற்றுகின்றனர். அவ்விதமிருப்ப, நம் தமிழ் நாட்டில் ஒரு தமிழரசன் தமிழ் மக்களுக்கு, பல வந்தம் ஒன்றும் இல்லாத நிலையிலே, தன்குடிகள் ஒன்றும் கேளாதிருக்கவும், தானாகவே உள்ளம் பூரித்து, தனது அரசியல் கோட்பாட்டை இனிது விளக்கி, நடு நின்று அறநெறி பிழையாது முறை செலுத்தும் தனது ஆற்றலையும், குடிகளிடத்துத் தனக்குள்ள கடமையையும் ஒரழகிய கவியாக வெளியிட்டானாகில் அக்கவியை அம்மக்கள் எவ்வாறு போற்றவேண்டும்! அப்பாடல் நம்முன்னோர்கள் செய்த தவப்பயனாலும், நம்முடைய புண்ணியவசத்தாலும் நமக்குக் கிடைத்திருக்கும் நிலையில் நாம் அதைத்தினமும் நம்உச்சிமேல் வைத்துப் பூசித்து உள்ளங்குளிர வேண்டுமல்லவா?

அப்பூதப் பாண்டியன் என்னும் அரசன் பாண்டிய மரபிலே மிகவும் பழைய காலத்துள்ளவன் என்பது ஆராய்ச்சியாற் போதரும். இவ்வரசன் அக நானூற்று 25-வது பாடலில், பொதியில் செல்வனாகிய திதியன் என்னும் அரசனைப்

பாராட்டிப் பாடியிருப்பதே இவனது தொன்மையை உணர்த்துவதற்குத் தக்கசான்ருகும். பூதப்பாண்டியன் சிறந்த போர் வீரனுக விளங்கினன். தன் தோள்வலியால் ஒல்லையூர் என்னும் நாட்டை வென்று பாண்டிய நாட்டைப் பெருகச்செய்தான். கற்பிற் சிறந்த அறிவாட்டியாகிய பெருங்கோப் பெண்டைத் தன் வாழ்க்கைத் துணையாகக் கொண்டவன். ஒருநாள் தன் தேவியுடன் இராசமண்டபத்திற் கொலுவீற்றிருந்தான். அரசவையில் தன் இணைபிரியா அன்பர்களான மாவன், ஆந்தை, அந்துவஞ்சாத்தன், ஆதனழிசி, வீரம் செறிந்த இயக்கன் முதலியோரும், மந்திரிகளும், படைத் தலைவர்களும், மற்றும் குடிமக்களிற் சிறந்தோரும் கூடியிருந்தனர். அவ்வமயம் தன் அரசியலின் குறிக்கோளை ஒரு கவியாகப்பாடி வெளியிட்டான். அக்கவியில, அவனது வீரம் செறிந்த போர் வலியும், அவன் தனது மனைவியிடத்துக் கொண்டுள்ள காதலும், அவன் தன் நாட்டில் நீதி செலுத்திவந்த முறையும், அந்நீதியின் இறைதிறம்பா நெறிமுறையும் அவன் தன் கண்போன்ற நண்பருடன் அளவளாவி மகிழ்ந்ததும், அவனது என்றும் மாருத தேசபக்தியும், (Patriotism) தன் குடிகளிடம் கொண்டிருந்த அன்பும், செறிந்து மிளிர்கின்றன. அச்செய்யுள் தமிழ்நாட்டின் சுதந்திரத்திற்கே ஓர் அடிப்படைக்கல் என்னலாகும். அச்செய்யுள் வருமாறு ;—

"மடங்கலிற் சினைஇ மடங்கா வுள்ளத்
தடங்காத் தானை வேந்த ருடங்கியைந்
தென்னொடு பொருது மென்ப வவரை
ஆரம ரலறத் தாக்கித் தேரொடு
அவர்ப்புறங் காணே னாயிற் சிறந்த
பேரம ருண்கண் இவளினும் பிரிக
அறனிலை திரியா வன்பி னவையத்துத்
திறனில் ஒருவனை நாட்டி முறைதிரிந்து
மெலிகோல் செய்தேன் ஆகுக மலிபுகழ்
வையை சூழ்ந்த வளங்கெழு வைப்பிற்
பொய்யா யாணர் மையற் கோமான்

மாவனும் மன்னெயில் ஆந்தையும் உரைசால்
அந்துவஞ் சாத்தனும் ஆதன் அழிசியும்
வெஞ்சின இயக்கனும் உளப்படப் பிறரும்
கண்போல் நண்பிற் கேளிரொடு கலந்த
இன்களி மகிழ்நகை யிழுக்கியான் ஒன்றோ
மன்பதை காக்கும் நீள்குடிச் சிறந்த
தென்புலங் காவலின் ஒரீஇப்பிறர்
வன்புலங் காவலின் மாறியான் பிறக்கே."

(புறநானூறு—71).

இதனுல், அவன் தன் நாட்டிற் பல இடங்களிலும் நீதி மன்றங்களை நியமித்துத் தக்க சான்றோர்களைத் தெரிந்தெடுத்து நீதிபதிகளாக ஏற்படுத்தித் தன் குடிகளுக்கு அறங்கடவாது முறை செலுத்தினன் என்பதும், அச் செயலில் தான் அதிக கவலையெடுத்துக் கொண்டான் என்பதும் தெரியவரும். தான் அவ்விதம் இயல்பாகவே ஒழுகி வருவதை, ஒரு வாக்குறுதி அளிப்பதுபோல், பிறர் வேண்டாமல் தானுகவே களங்கமின்றி வெளிப்படுத்தித் தன் குடிமக்களை மகிழவைத்தான் என்பது மிகையாகாது. தொன்று தொட்டு வாழையடி வாழையாகத் தழைத்துவரும் பாண்டியர் பரம்பரையில், தானும் தோன்றித் தென் பாண்டி நாட்டைப் புறங்காத்து வரும் பேறு தனக்குக் கிடைத்ததைப் பாராட்டி யிருக்கிருன். உற்ருர் உறவினருடன் கலந்து, ஆருயிர்த் தோழர்களிடையே நகை விளைவித்துத் தாய் நாட்டில் வாழும் பேறே தனக்குப் பெருமகிழ்வாகக் கொண்டிருந்தான். தன் குடிமக்களை மகிழ்வித்துச் செங்கோல் செலுத்தித் தாய் நாட்டைப் பேணுவதே தன் தவப்பயன் எனக்கொண்டவன். 'அவ்விதம் முறை செய்வதிற் பிழைத்துப் பகைவர்க்கஞ்சி, அவர்களை வென்று வாகைசூடாது புறங்கொடுப்பேனுகில், யான் ஆளும் என் அருமைத் தாய் நாட்டில் மறுபிறப்பிற் பிறவாது, பிறர் ஆளும் வன்புலங்களிற் போய்ப் பிறக்கக் கடவேன்." என்று வஞ்சினங் கூறினன். என்னே அவனுடைய தேச பக்தி! இப்பிறப்பில் தான் பிறந்த தமிழ் நாட்டிற்கு அற்புக்,

கடம் பூண்டு ஒழுகுவதன்றி, மறுபிறப்பிலும் இத் தாய் நாடாகிய தமிழ்த்திருநாட்டிலே மாறிப் பிறந்து சேவை செய்யும் பேறு தனக்குக் கிடைக்க வேண்டுமே என்னும் அவனது ஆவலும் தவிப்பும் உணர்ச்சியற்ற கயவர் மனத்தையும் உருக்கிப் பிணிப்பதொன்றாகும். இவ்வித தேசபக்தி வேறு எவ்விடத்தும் யாரிடத்தும் காண்டற்கரியதொன்று. பூதப் பாண்டியனுடைய இவ்வரியவாக்கே தமிழ் மக்களுடைய மாக்ஞ கார்ட்டா.

இவ்விதம் வஞ்சினங் கூறிய அரசர்களுள் மற்றொருவன் சோழன் நலங்கிள்ளி. அவன் கூற்றில் ஒரு பகுதியை நாம் ஆராய்தல் வேண்டும். "என் பகைவரை யானையின் காலில் அகப்பட்ட மூங்கிலின் முளைபோல வளைத்து அழியாது விடுவேனாகில் என் மாலை பொதுப்பெண்டிரது பொருந்தாத புணர்ச்சியிடைத் துவள்வதாக." என்கின்றான்

"நீதில் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தல் மகளிர்
ஒல்லா முயக்கிடைக் குழைகவென் தாரே."
(புறநானூறு—73)

பரத்தையர் தோள்களைத் தான் தோய்வதாகச் சொல்வதுகூட இழுக்காதலால் சொல்வதற்கு வாய்கூசி, தன்மாலை குழைவதாக என்று அவன் தன் மாலைமேலேற்றிக் கூறுங் கருத்து அறிந்து மகிழ்வதற்கொன்றாகும். இதனால் அரசர்களுக்கு நன்னடக்கையான ஒழுக்கம் இன்றியமையாததொன்றென்பது புலனாகும். தமிழ் மக்கள் பரத்தமை தீதென்று கண்டித்தொதுக்கினர் என்பதும் இதனால் தெளிவாகும். உண்மை இங்ஙனம் இருப்பவும், சிலர் அகப்பொருள் பாடல்களிலிருந்து, தமிழ்மக்கள், தம் மனைவிமார் கர்ப்பிணிகளாயிருந்த காலத்தில், பரத்தையர் வீடுகளுக்குச் சென்று பொழுது போக்குவர் என்று முடிவு கட்டி விடுவார்கள். அகத்திணைப் பாடல்களெல்லாம், சில கவி மரபுகளைக் கொண்டு அச்சுவார்த்தது போல், அமைக்கப்பட்டவை.

அவற்றை ஆதாரமாகக் கொண்டு அவ்விதம் ஆராயலுறுவது தவறாகவே முடியும். உவாநாளன்று திங்களின் முழுவடிவை யுங்கண்ட ஒருவன் உலகில் ஒவ்வோர் இரவும் திங்கள்நிறை வடிவுடனேயே தோன்றும் என்று தேற்றமுறுவதில் எவ் வளவு உண்மையிருக்குமோ அவ்வளவு உண்மைதான் அத் துறை ஆராய்ச்சியிலுமுண்டு.

தமிழ் நாட்டில் அரச பதவியானது தந்தையிடத்தி லிருந்து தலைமகனுக்கிறங்கித் (Law of Primogeniture) தலை முறை தலைமுறையாகத் தொடர்ந்து வந்தது. கோப்பெருஞ் சோழன் தன் குமாரர்களை எதிர்த்துச் சண்டை செய்யத் தொடங்கிய காலத்தில், எயிற்றியனார் என்னும் புலவர் அவன் சண்டை செய்வதைத் தடுத்து,

"பார்த்துபடு நல்லிசை யெய்தி மற்றுநீ
உயர்ந்தோர் உலகம் எய்திப் பின்னும்
ஒழித்த தாயம் அவர்க்குரித் தன்றே
.............................................
எண்ணில் காட்சி யிளையோர் தோற்பின்
நின்பெருஞ் செல்வம் யார்க்கெஞ் சுவையே."

(புறநானூறு—216)

என்று கூறியிருப்பதிலிருந்து தாயமுறையை நாம் ஒருவாறு ஊகித்தறியலாம். இவ்விதம் தாயமாகக் கொண்டு, ஊழ் வசத்தால் தமக்குக் கிடைத்த அரசபதவியை வலியுடை யொருவன் பெற்று ஆறிலொரு கடமை கொண்டு, குடிகளைத் துன்புறுத்தாது, பகைவரை வென்று வாழ்வானாயின், அவன் அவ்வரச பதவியைத் துன்பமின்றித் தாங்கலாம். அரசபாரம் கிடேச்சுப்போல் அவனுக்கு எளிதாகவிருக்கும். அவ்வித மின்றி, முடி தலை யேறியவுடன் தருக்கடைந்து தலைசுற்றி, அறநெறியிற் பிழைத்துக் குடிகளைத் துன்புறுத்திப் பொருள் பறிக்கத் தொடங்குவானேல், அவன் தன் பதவியைத்தாங்க முடியாமல் அழிந்து கெடுவான். பகைவரை வெல்லும் ஆண்மையற்று மனஞ் சுருங்கிய சிறியோரே அவ்வாறு, வேலி

பயிரை மேய்வதுபோல், குடிமக்களைத் துன்புறுத்திக் கொடுங்கோல் புரிவர் என்னும் பொருள்பட, சோழன் நலங்கிள்ளி கூறுகிறான் :—

"மூத்தோர் மூத்தோர்க் கூற்ற முய்த்தெனப்
பால்தர வந்த பழவிறற் றாயம்
எய்தின மாயின் எய்தினஞ் சிறப்பெனக்
குடிபுர விரக்குங் கூரி லாண்மைச்
சிறியோன் பெறினது சிறந்தன்று மன்னே
மண்டமர்ப் பரிக்கு மதனுடை நோன்றாள்
விழுமியோன் பெறுகுவ னாயின் ஆழ்நீர்
அறுகய மருங்கிற் சிறுகோல் வெண்கிடை
என்றூழ் வாடுவறல் போல நன்றும்
நொய்தா லம்ம தானே மையற்று
விசும்புற வோங்கிய வெண்குடை
முரசுகெழு வேந்தர் அரசுகெழு திருவே."
(புறநானூறு—75.)

இதனால் அரசன் ஆறின்றி அதிகமான பொருள் குடிகளிடம் வாங்கலாகாதென்பதும், அவ்விதம் வாங்கும் சிறுமையை யுடைய அரசனுக்கு அரச பாரம் பளுவாகக் கனத்து அவனை நசித்துவிடும் என்பதும், பகைவரை வென்று பொருளீட்டும் வன்மையை யுடைய அரசன் தன் குடிகளை வருத்தான் என்பதும், போர்வலிமை அரசர்க்கு இன்றியமையாதென்பதும், குடிகள் சிந்திய கண்ணீர் அரசனை அழிக்கும் படை என்பதும் விளக்கமாகும். அறநெறிப்படித் தன் பகுதிக்கேற்பட்ட இறைப் பொருளுக் கதிகமாக, எப்பொருளை யேனும் அரசன் இரந்துபெற்றாலுங் கூட, அதுவுங் கொடுங் கோன்மையே யாகும் என்று நம் முன்னோர்கள் கருதியிருந்தனர். அவ்விதம் அதிகமான பொருளை இரந்து பெறும் அரசனுக்கும், வேலேந்தி நின்று ஆறலைக்கும் கள்வனுக்கும் வேற்றுமையில்லை என்கிறார் திருவள்ளுவரும் :—

"வேலொடு நின்றான் இடுவென் றதுபோலுங்
கோலொடு நின்றான் இரவு."

அரசன் குடிமக்கள் தாங்கும் அளவிற்கு மேலாக வரி விதிக்காது முறையளவிலே பகுதிப்பொருளை வாங்குதல் வேண்டும். ஓர் அரசு நிலைத்து நிற்பது அதன் வரி முறைத் திட்டத்தைப் பொறுத்தேயிருக்கிறது. எடுத்ததற் கெல்லாம் வரி வரி யென்று மக்களை வருத்தினுல் அரசனும் நாடும் ஒருங்கே அழிந்து விடுவது திண்ணம். வயலில் விளைகின்ற நெல்லை அறுத்து வைத்துக்கொண்டு, யானைக்கு வேண்டும் உணவறிந்து கவளம் கவளமாகக் கொடுத்து வந்தால் ஒருமா நிலத்தில் விளையக்கூடிய நெல்லும் பலநாட்களுக்கு யானைக்கு உணவு கொடுத்து வரும். அங்ஙனமன்றி, யானை கட்டுக் கடங்காது வயல்களினுள்ளே புகுந்து தானே நெற்கதிர்களை மேய ஆரம்பித்தால் நூறுமா நிலமாக இருந்தாலுங்கூட ஒரே நாளையில் அழித்துவிடும். அதன் வாயினுட் புகுந்த நெல்லை விட மிகுதியான நெல் அதன் காலால் அழிபட்டு, யானைக்கும் உதவாமல் பிறர்க்கும் பயன்படாமல், சேற்றிலும் மண்ணிலும் சிதைந்துவிடும். மறுநாள் யானைக்கும் உணவிருக்காது. நிலமும் பாழாய்க்கிடக்கும். அதுபோல், அரசனும் திறனுடைய் அமைச்சர் சொல்வழி நின்று, அறிவோடு நெறி முறைப்படி வரி வாங்கி நீதி செலுத்தினுல், அவன் ஆட்சிக்கு ஒருநாளும் குறைவு வராது; குடிகளும் மகிழ்ச்சியுடன் வாழ்வர் நாடும் செல்வநிலையில் செழித்தோங்கும். அரசன் வருமானமும் அளவிற் பெருகிவரும். இதற்கு அரசன் நலத்தையும் குடிகளின் நலத்தையும் சீர்தூக்கி ஆராய்ந்து இடித்துரைக்கும் அமைச்சர்கள் அமையவேண்டும். அது வன்றி, அரசன் போக்குப்படியே நடந்து மந்திரிகள், பேசா மடந்தையராகவும் கைதூக்கிக் கழுமரங்களாகவும் தலை யாட்டிப் பொம்மைகளாகவும் அமைந்துவிட்டால், அரசன் தன் மனம்போனபடியெல்லாம் வரிகளை விதித்துக் குடிகளைத் துன்புறுத்துவான். நாடும் அழிந்துவிடும். அரசனும் வீழ்ந்து விடுவான். இவ்வுண்மையை நம் நாட்டு மந்திரிகளும், சட்ட சபை அங்கத்தினர்களும் ஊன்றிக் கவனித்தால், நாட்டுக்கு நலம் உண்டாகும் :

"காய்நெல் அறுத்துக் கவளங் கொளினே
மாநிறை வில்லதும் பன்னாட் காகும்
நூறுசெறு வாயினுந் தமித்துப்புக் குணினே
வாய்புகு வதனினுங் கால்பெரிது கெடுக்கும்
அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்
மெல்லியன் கிழவ னாகி வைகலும்
வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்க புலம் போலத்
தானு முண்ணான் உலகமுங் கெடுமே."

(புறநானூறு—184).

அரசனுக்கு அறிவுறுத்தும் அமைச்சர் குழாம் மந்திரச் சுற்றம் என்னப்படும். அமைச்சராவோர் முக்காலச் செய்திகளையும் சீர்தூக்கி ஆராய்ந்து நாட்டுக்கும் அரசனுக்கும் நல்லனவற்றையே கூறவேண்டும். அதனால் தங்களுக்கு வரும் நலம் தீங்குகளையே கருதி, அரசன் சொன்னதற்கெல்லாம் ஆமாப் பாட்டுப் பாடுதல் கூடாது. பால் தன் இனிய சுவையையொழிந்து புளிப்பினும், ஞாயிறு தன் விளக்கமொழிந்து இருளினும் நூல்களிற் கூறிய ஒழுக்கம் வேறுபடினும், வேறுபாடில்லாத சூழ்ச்சியையுடைய மந்திரச் சுற்றமே ஒரு நாட்டின் அரசை மேம்பாடுறச்செய்து, ஒழியாது நெடுங்காலம் விளங்கித் துளக்க மின்றி நிற்கச் செய்யும்:—

"பாஅல்புளிப்பினும் பகலிருளினும்
நாஅல்வேத நெறிதிரியினும்
திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளங்கி
நடுக்கின்றி நிலியரோ."

(புறநானூறு—2.)

ஒரு சகடம் போன்றது அரசாட்சி. உருளையும் பாரும் கோத்துச் செலுத்தப்படுகின்ற சகடமானது, அதனைச் செலுத்துவோன் திறனைச் செலுத்தினால், யாதொரு ஊறு

Acc-No.14011



பாடுமின்றி வழியை இனிதாகச் செல்லும். ஓட்டத் தெரியாதவன் கையிலே வண்டியைக் கொடுத்தால், அது மேட்டிலே மோதிப் பள்ளத்திலே விழுந்து சேற்றிலே அழுந்திவிடும். அதுபோல, ஒரு நாட்டை யாளுகின்ற அரசனும், ஆட்சி முறைகளைத் தெளிந்து மாட்சிமைப்பட்டவனாய் ஆண்டுவந்தால், அரசாட்சி இனிது நடக்கும். இல்லாவிடில், நாள்தோறும் எதிர்ப்புக்களும் புரட்சிகளும் தோன்றிப் பகையாகிய செறிந்த சேற்றிலே யழுந்தி மிகப்பல தீய துன்பத்தை மேன்மேலும் உண்டாக்கிவிடும் :—

"கால்பார் கோத்து ஞாலத்து இயக்கும்
காவற் சாகாடு உகைப்போன் மாணின்
ஊறின் றாகி ஆறினிது படுமே
உய்த்தல் தேற்றா னாயின் வைகலும்
பகைக்கூ ழள்ளற் பட்டு
மிகப்பல் தீநோய் தலைத்தலைத் தருமே."

(புறநானூறு—185)

பண்டைத் தமிழ் மன்னர் ஆட்சிபுரிந்த வெற்றித்திறனை யெல்லாம் ஏட்டில் எழுதிமுடியாது. அக்காலத்திருந்த கவிஞர்களும் தங்கள் கவிபாடும் ஆற்றல் அளவின் எல்லையுள் நின்றே கவிபாடிச் சென்றனர். அவர்கள் பாடியன தவிரப் பாடாது விட்டனவே பலவாகும். தமிழ் மன்னர் செஞ் ஞாயிற்று நிலவு வேண்டினும், வெண்திங்களுள் வெயில் வேண்டினும், வேண்டியது விளைக்கும் ஆற்றலையுடையராய்த் திகழ்ந்தனர். இந்திய நாட்டின் அரசியல் தமிழ் மன்னர் குறித்த குறிப்பின் வரையிலே நின்றது. குயச்சிறுவன் சுழற்றும் சக்கரத்தில் வைத்தமண் அவன் கருதிய பாத்திரமாக உருப்பெற்று வருவது போல், இந்திய அரசியலும் தமிழ் மன்னர் கையிலே இருந்தது:—

"வேட்கோச் சிறுஅர் தேர்க்கால் வைத்த
பசுமட் குரூஉத்திரள் போலவவன்
கொண்ட குடுமித்தித் தண்பணை நாடே".

(புறநானூறு—32).

தமிழ் வேந்தர் உடன்று நோக்கும் வாய் எரி தவழ்ந்தது : நயந்து நோக்கும் வாய்ப் பொன் பூத்தது கடலின் ஆழத்தையும், உலகத்துப் பரப்பையும், காற்றியங்கும் திசையையும், வடிவின்றி நிலைபெற்ற ஆகாயத்தையும் வரையறுத்து அளந்துவிடலாம். . ஆனால் தமிழ்மன்னர் உள்ளத்தை அளவிட்டறிய முடியாது அவ்வளவு அறிவும் அன்பும் மிக்க கண்ணோட்டமும் நிறைந்திருந்தனர். அவர்களது குடைநிழற்கீழ் வாழ்ந்த குடிமக்கள், சோற்றை ஆக்கும் நெருப்புடனே கதிரவனின் வெம்மையை யல்லது வேறு வெம்மை அறியார்; இந்திரவில் அல்லது பகைவருடைய கொலைவில்லை அறியார்; உழுகின்ற கலப்பை அல்லது வேறு படைக்கலமும் அறியார்; தமிழ் நாட்டு மண்ணானது சூலுற்று வேட்கை நோய் கொண்ட மகளிரும் சூழுற்றுக் கிடக்கும் கடலும் அல்லது பகைவரால் உண்ணப்படாதிருந்தது புதுப்புள் வரினும் பழம்புட் போகினும் விதுப்புறலறியா ஏமக்காப்பினை அரசர் குடிகளுக்கு அளித்துவந்தனர்.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனாற் சிறையிலிடப்பட்டுப் பின் வலிதிற் சிறையினின்றும் நீங்கிப் போய்த் தன் அரசுகட்டிலேறிய யானைக் கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை என்னும் மன்னனின் நாட்டைக் குறுங்கோழியூர் கிழார் என்னும் புலவர் சென்றுகண்டார் அம்மன்னன் தனது நாட்டைத் தேவலோகமாக விளங்கும்படி ஆட்சிபுரிந்து வந்தான் : —

“ மாந்தரஞ்சேர லிரும்பொறை யோம்பிய நாடே
புத்தே ளுலகத் தற்றெனக் கேட்டுவந்து
இனிது கண்டிசின் பெரும . ”

(புறநானூறு—22).

அவ்வரசனை யடைந்த குறுங்கோழியூர் கிழார் அவனது குடிவழிப் பெருமையைப் பின்வருமாறு கூறத்தொடங்கினார்:—

“ தென்குமரி வடபெருங்கல்
குணகுட கடலா வெல்லை

குன்றுமலை காடுநாடு
ஒன்றுபட்டு வழிமொழியக்
கொடிதுகடிந்து கோல்திருத்திப்
படுவதுண்டு பகலாற்றி
இனிதுருண்ட சுடர்நேமி
முழுதாண்டோர் வழிகாவல."

(புறநானூறு—17)

இதன் பொருள் ;— "தென்றிசைக்கட் கன்னியும் வட திசைக் கண் இமயமும் கீழ்த்திசைக் கண்ணும் மேற்றிசைக் கண்ணும் கடலும் எல்லையாக நடுவுபட்ட நிலத்துக் குன்றும் மலையும் காடும் நாடும் என இவற்றையுடையோர் ஒரு பெற்றிப்பட்டு வழிபாடு கூறத் தீத்தொழிலைப் போக்கிக் கோலைச் செவ்விதாக்கி ஆறிலொன்றாகிய இறை உண்டு நடுவு நிலைமையைச் செய்து தடையின்றாக உருண்ட ஒளியையுடைய சக்கரத்தால் நில முழுவதையும் ஆண்டோரது மரபைக் காத்தவனே!" இதனால் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழ் மன்னர் குமரிமுதல் இமயம்வரை ஒரு மொழி வைத்து உலகாண்ட செய்தி புலனாகும். ஆரியப்படை கடந்த நெடுஞ் செழியன், இமயவரம்பன் போன்ற காரணப் பெயர்களும் இச்செய்தியை வலியுறுத்தும். சேரன் செங்குட்டுவன் கங்கைக் கரையில், குயிலாலுவம் என்னும் இடத்தில், கனகவிசையரையும் மற்ற ஆரிய மன்னர்களையும் வென்று, இமயத்தில் பத்தினிப் படிவத்திற்குக் கல் எடுத்துக் கங்கையில் நீராட்டிக் கொண்டுவந்த வரலாறு சிலப்பதிகாரத்தில் முழங் கப்படுகிறது.

மன்னனாய் இருப்பவனுக்கு இன்றியமையாத குணங் கள் பல அமைந்திருக்கவேண்டும் என்று நம் பண்டையோர் கருதினர். அவற்றுட் சிலவற்றை இங்கே குறிப்பிடலாம். தீயோரைத் தண்டஞ் செய்வதற்கும் நடுவு நிலைமை யுடை யோர்க்கு அருள் பண்ணுதற்கும் அரசன் மனம் தளரலாகாது. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலப் பகைவர் பிழை செய் தால் அப்பிழையைப் பொறுத்தல் வேண்டும். அப்பிழை

பொறுக்கும் அளவல்லவாயின் அவரை அழித்தற்கு வேண்டிய சூழ்ச்சித்திறன் விசும்பினைப் போன்று அகன்றிருக்க வேண்டும். அவ்விசும்பினைத் தடவி வரும் காற்றினைப் போன்று பகைவரை அழித்தற்கேற்ற மனவலியும் படைவலியும் வேண்டும். அக்காற்றின்கண் தலைப்பட்ட தீயினைப் போலத் தன் வலியாற் பகைவரை அழித்தல் வேண்டும். பகைவர் தன்னை வந்து வழிபட்டால் தண்ணீரினைப்போல் அவர்க்குச் செய்யும் அருளும் உடையனாதல் வெண்டும். இவ்வாறு ஐம்பெரும் பூதத்தியற்கையும் அரசனிடம் அமைந்து காணப்பட வேண்டும். நிலம் பிறழினும் அரசனது ஆணையாகிய சொல் பிறழலாகாது. அரசன் முறை செலுத்தும் பொழுது பொருள்களை அளக்கும் துலாக்கோலின்கட் சமன் வாய்போல ஒருபக்கம் கோடாது நடு நின்று செலுத்துதல் வேண்டும்.

அரசன் தன்னை வழிபட்டொழுகுவோரை விரைந்து அறிதல் வேண்டும். பிறருடைய குற்றங்களையே எடுத்துப் பேசும் புறங்கோளர்களுடைய சொற்களை அவன் நம்பலாகாது. தான் மெய்யாக மனத்தான் ஆராய்ந்து அறுதியிடப்பட்ட கொடுமையை ஒருவன்பாற் காணின் அதனை நீதிநூற்குத் தக ஆராய்ந்து அத்தீமைக்குத் தக்க தண்டனையை விதித்தல் வேண்டும். பிழை செய்தோர் வந்து தன் அடியினையடைந்து முன்னே நிற்பாராயின் அவர் பிழை செய்வதற்கு முன் தான் செய்யும் அருளினும் பெரிதாக அருள் புரிந்து அவர்க்குரிய தண்டத்தையும் தவிர்த்தல் அரசனுக்கு நன்மை தரும். வானநூல் வல்லுநர்களாலும் அறியமுடியாத அடக்கத்தை உடையவனாய் இருக்கவேண்டும். யானை தன் கதுப்பின்கண் அடக்கிய எறியும் கல்லைப்போல மறைத்த வலிமையை யுடையவனாதலும் வேண்டும். உழுது உழைத்த எருது நல்லனவற்றை யெல்லாம் பிறர்க்குக் கொடுத்துத் தான் வைக்கோலைத் தின்பது போல், தன் முயற்சியாற் கிடைக்கும் பொருளில் நல்லனவற்றைப் பிறர்க்கு வழங்கி எஞ்சியதைத் தான் உண்ணும் மனப்பான்மை மன்னனுக்கு வேண்டும்.

குடிமக்கள் தங்கள் குறைகளை அரசனிடம் நேரில் தெரிவித்துக்கொள்வதற்கு இடைஞ்சல் ஒன்றும் இல்லாத விதத்தில், அரசன் காட்சிக்கெளியனாய், தாயினுந் தயாவுடைய வள்ளலாய், உழவுத்தொழிலை வளர்க்கும் உத்தமனாய் விளங்க வேண்டும். வானம் வறப்பினும் மக்கள் தானம் தவறினும், இயற்கைமுறை பிறழினும் அரசனையே உலகத்தார் குறை கூறுவர். அரசன் செங்கோல் நேரிதாய் இருந்தால் மட்டுமே மழைவளங்குறையாது உலகம் செழிப்புறும். செங்கோல் நேரிதாய் இருக்கவேண்டுமாகில், அரசன் நேரில் தன் குடிகளின் குறைகளைக் கேட்கும் சித்தமுள்ளவனாய், அவர்கள் அவனை எளிதில் அணுகி முறையிடுவதற்குத் தக்க வசதிகள் அளிக்கும் அன்பு உடையவனாய் இருக்கவேண்டும். இவ்விதம் வேண்டியகாலத்தில் அரசனைச் சந்தித்துப் பேசும் பாக்கியம் பெற்ற குடிகள் நீர் வேண்டிய காலத்தில் மழையைப்பெற்றவர்கள் போன்று பெரிதும் மகிழ்வெய்துவர். இக்கருத்துக்களை வெள்ளைக்குடி நாகனார் வெகு நயமுடன் உரைத்திருக்கின்றார்:—

"அறம்புரிந் தன்ன செங்கோ னாட்டத்து
முறைவேண்டு பொழுதிற் பதனெளி யோரீண்
டுறைவேண்டு பொழுதிற் பெயல்பெற் றோரே.
ஞாயிறு சுமந்த கோடுதிரள் கொண்மூ
மாக விசும்பி னடுவுநின் றாங்குக்
கண்பொர விளங்குநின் விண்பொரு வியன்குடை
வெயின்மறைக் கொண்டன்றோ வன்றே வருந்திய
குடிமறைப் பதுவே கூர்வேல் வளவ
வெளிற்றுப்பனந் துணியின் வீற்றுவீற்றுக் கிடப்பக்
களிற்றுக்கணம் பொருத கண்ணகன் பறந்தலை
வருபடை தரூஉங் கொற்றமும் உழுபடை
ஊன்றுசான் மருங்கி னீன்றதன் பயனே
மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கை யல்லன செயற்கையிற் றோன்றினும்
காவலர்ப் பழிக்குமிக் கண்ணகன் ஞாலம்
அதுநற் கறிந்தனை யாயி னீயும்

நொதும லாளர் பொதுமொழி கொள்ளாது
பகடுபுறந் தருநர் பார மோம்பிக்
குடிபுறந் தருகுவை யாயினின்
அடிபுறந் தருகுவ ரடங்கா தோரே.''

(புறநானூறு—35)

இதனால் அரசன் தன் நாட்டில் பயிர்த்தொழிலை வளரச் செய்யவேண்டுமென்பதும் பெறப்படும். அரசன் கொடுங்கோலனாய் இருப்பானாயின் மழைவளங் குறைந்து நாட்டிற் பஞ்சமுண்டாகிவிடும். ஆகவே உயிரையாக்கும் நெல்லும் நீரும் உளவாவது மன்னன் முறைசெய்து காத்தலினாலே உண்டாவதாம். இதனைக் குடிகள் நன்குணர்ந்து தம் அரசனைத் தம் உயிராக மதித்துப் போற்றிவந்தனர். அரசனும், தன் வேலின் வென்றியை நோக்கியும் கோலின் கருணையை நோக்கியும் தன் குடிகள் வாழ்வதை எண்ணி, நாடாகிய உடலுக்குத் தான் உயிராயிருப்பதை உணர்ந்து, குடிகளிடத்து அன்பு பூண்டு ஆட்சிபுரிந்தான்.

''நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
அதனால், யானுயி ரென்ப தறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே.''

(புறநானூறு—185)

இக்காலத்தில் நீரைப் பராமரிப்பதற்கென்று ஒரு தனி இலாகா (P. W. D.) அரசாங்கத்தார் ஏற்படுத்தியிருக்கின்றனர். வானம் எவ்வளவு மழையைப் பொழிந்தாலும், அதைச் சீர்பெற நீர்நிலைகளில் தேக்கிக் காலா காலங்களிற் பயிர்களுக்கு உபயோகப்படுத்தாதுபோனால் நாட்டிற் கருப்பு மலிந்துவிடும். உணவுப்பொருள்கள் கிடையாது மாந்தர் வருந்தவேண்டிவரும். ஆகவே நாட்டில் நீரைப் பெருக்க வேண்டியது வேந்தனது முதற் கடமையாகும். இதை நம் முன்னோர் நன்கு தெரிந்து அதன்படி நீரைப் பேணிவந்தனர் என்பதைப் புறநானூறு-18வது பாடலால் நாம் அறிகிறோம்.

இவ்விதம் செய்வதால், அரசன் மறுமையில் வானுலகம் எய்துதலு மல்லாமல் இம்மையிலும் பகைவரை வென்று நல்ல புகழை நிலைநாட்டுவதற்கு முக்கிய ஏதுவாகும் என்பதை அறிவாளிகள் அவ்வப்போது அரசர்க்குப் போதித்து வந்தனர். அரசரும் அதன்படி நடந்து வந்தனர்;—

"செல்லு முலகத்துச் செல்வம் வேண்டினும்
ஞாலங் காவலர் தோள்வலி முருக்கி
ஒருநீ யாகல் வேண்டினு மற்றதன்
தகுதி கேளினி மிகுதி யாள
நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே
உண்டி முதற்றே யுணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே
நீரு நிலனும் புணரி யோரீண்
டுடம்பு முயிரும் படைத்திசி னோரே
வித்திவா னோக்கும் புன்புலங் கண்ணகன்
வைப்பிற் றாயினு நண்ணி யாளும்
இறைவன் தாட்குத வாதே யதனால்
அடுபோர்ச் செழிய விகழாது வல்லே
நிலனெளி மருங்கி னீர்நிலை பெருகத்
தட்டோ ரம்ம விவட்டட் டோரே
தள்ளா தோரிவட் டள்ளா தோரே."

(புறநானூறு—18)

தற்கால அரசியல் வாதிகள், வாணிகம், உழவு, (Trade and Agriculture) ஆகிய இரண்டு தொழிலும் ஒரு நாட்டில் செழித்து வளர்ந்தால் மட்டுமே அந்நாடு முன்னேற்றமடையும் என்று இரவும் பகலும் அறிக்கை செய்து வருகிறார்கள். இதிற் புதுமை ஒன்றும் இல்லை. அக்காலத் தமிழ் மக்கள் தம் நாட்டிற் செல்வம் வளர்வதற்கு இவ்விரு தொழிலும் மேன்மையுற வேண்டும் என்பதை நன்கறிந்து உழவையும் வாணிகத்தையும் விருத்திசெய்து வந்தார்கள். மதுரைக் காஞ்சியில்,

"வியன்மேவல் விழுச்செல்வத்து
இருவகையான் இசைசான்ற
சிறுகுடிப் பெருந்தொழுவர்."

என்று வந்துள்ள அடிகளாலும் அதற்கு நச்சினர்க்கினியர் எழுதியிருக்கும் உரையாலும் இது விளக்கமுறும். உள் நாட்டு வியாபாரமன்றி, வெளி நாடுகளுக்கும் தமிழர் கடலைக் கடந்து சென்று வியாபாரம் செய்து வந்தனர். இதற்கு வேண்டிய மரக்கலப் படைகளையும் தமிழரசர் பலப்படுத்தி வைத்திருந்தனர். சேரரசர் பொன்னைத் தரும் மரக்கலங்களை மேல் கடலிற் செலுத்திவந்தனர் என்றும், அங்கு வேறொருவருடைய மரக்கலங்கள் செல்வதற்கியலாதபடி சேரர் ஆணை அங்குப் பரவி யிருந்ததென்றும் புறநானூற்றால் நாம் தெரிகின்றோம்.

"சினமிகு தானை வானவன் குடகடற்
பொலந்தரு நாவா யோட்டிய வவ்வழிப்
பிறகலஞ் செல்கலா தனையேம்."

(புறநானூறு—126).

அரசன் தன் மந்திரிகளுடனும், படைத்தலைவர்களுடனும், தக்க சான்றோருடனும் கலந்து தீர ஆராய்ந்தே ஒவ்வொரு காரியத்தையும் செய்து வந்தான். தன் அரசவைக்கு வரும் கல்விமான்களையும், புலவர்களையும் அதிக வணக்கத்துடன் பரிந்தேற்றுச் சிறப்புச்செய்தான். புலவர்களும் அரசனைக் கண்டால், கால்நடுங்கிக் கைகட்டிக் கருத்தழியாமல் மிகவும் பழகிய உயிர்த்தோழர் போல் அளவளாவி வந்தனர் புறநானூறு—14வது பாடலால் அரசன புலவருக்குக் கைகொடுத்து முகமன் கூறும் வழக்கம் (Shakehands) இருந்ததாகத் தெரிகிறது புறநானூறு—19வது பாடலாலும், 151வது பாடலாலும் அரசரும் புலவரும் மார்போடு மார்பு பொருந்தக் கட்டிக் கொண்டு முகமன் வழங்கினர் என்பதும் தெரியவரும்.

நரிவெரூஉத்தலையார் என்றொரு புலவர் இருந்தார். இவருக்குத் தம் உடம்பு மாறிச் சற்று விகார முற்றதுபோல் தலையில் ஒரு நோய் தோன்றியது. அதைக்கண்ட பலரும் ஓர் அரசன் திருமுன்பு சென்று கண்டால் அந்நோய் தீர்ந்து மீண்டும் பழைய உடம்பு பெறலாம் என்று கூறினர். அதன்படி அவர் சென்று சேரமான் கருவூரேறிய ஒள்வாட் கோப் பெருஞ் சேர லிரும்பொறையைக் கண்டார். அவ்வரசனைக் கண்டவுடன் நோய்தீர்ந்து தம் உடம்பு பெற்றார். இதனால் அக்காலத்தில் அரசனுடைய திருமுன்னர் சில நோய்கள் தீரும் என்ற நம்பிக்கை தமிழ் நாட்டில் இருந்ததாகத் தெரிகிறது. இவ்விதமான நம்பிக்கைகள் பல தேசங்களிலும் பலவாறாகக் காணப்படுகின்றன. சில குழந்தைகளுக்குக் கழுத்தின் இருபக்கமும் சில கட்டிகள் காணப்படும். இதை ஸ்க்ரோபியூலா (Scrolula) என்று ஆங்கிலத்திற் சொல்வர். ஆங்கிலநாட்டில், இந்நோய்கண்ட பிள்ளைகளைத் தாய்மார் எடுத்துச் சென்று அரசனுக்குக் காட்டுவர். குழந்தைகளுக்கு நோய் தீர்ந்துவிடும். அதனால் இந்நோய்க்கு 'கிங்ஸ் ஈவில்' (King's Evil) என்றொரு பெயருமுண்டு. டாக்டர் ஜான்ஸன் (Dr. Johnson) என்னும் ஆங்கிலப் பெரியார் சிறு குழந்தையாய் இருந்த பொழுது, இந்த 'கிங்ஸ் ஈவில்' என்னும் நோய் அவருக்குக் கண்டதாகவும், அவரை அரசனிடங்கொண்டு காட்டினதாகவும், பாஸ்வெல் (Boswell) என்பவர் எழுதிய சரித்திரத்திற் காணலாம். நரிவெரூஉத்தலையாருக்கும் இவ்விதமானதொரு நோய் ஏற்பட்டு அது அச்சேரவரசன் முன்னிலையிற் குணப்பட்டிருக்க வேண்டுமென்று இதனால் ஊகிக்கலாம். அவ்விதம் பிணி தீர்ந்து பெருமகிழ்வெய்திய புலவர் அவ்வரசனுக்குச் சில நீதிமொழிகளைக் கூறியிருக்கிறார். அவர் கூறியது:— "அருளையும் அன்பையும் நீக்கிப் பாவம் செய்பவர் நரகத்தில் விழுந்து அழுந்துவர். அன்னவருடைய உறவை நீ கொள்ளாது, நீ காத்துவரும் நாட்டைக் குழவியை வளர்க்கும் தாய்போலப் பாதுகாப்பாயாக. அக்காவல் அளிக்கத் தக்கதொன்று. அது பெறுதற்கரியதாகும்".

"அருளு மன்பும் நீக்கி நீங்கா
நிரயங் கொள்பவரொ டொன்றாது காவல்
குழவி கொள்பவரி னோம்புமதி
அளிதோ தானேயது பெறலருங் குரைத்தே."
(புறநானூறு—5)

இவ்விதம், குடிகள் நலத்தையே கருதும் முடியரசு நிலை பெற்றுத் தமிழ் நாடெங்கும் நிகழ்ந்து வந்தமையால் வேறு விதமான, குடியரசு (Democracy) பொதுவுடைமை (Communism) முதலிய அரசியல் வாழ்க்கைகளைத் தமிழ் மக்கள் அக்காலத்துத் தெரிந்திருந்தனரோ என வினவில், அவர்கள் நன்கு தெரிந்திருந்தார்கள் என்றே கொள்ளலாம். பொதுவுடைமை என்னும் அரசியல் இயக்கம் தற்காலத்தில் தானே தலை எடுத்திருக்கிறது என்று சிலர் ஐயுறவெய்தலாம். பொதுவுடைமைக் கொள்கைப்படி, பிரபு ஏழை என்ற வேற்றுமையே நாட்டில் இருத்தல் கூடாது. "எல்லோரும் செல்வர்களாய் இன்பம் எய்தி ஏன் இருத்தல் கூடாது?" என்பர். அவ்விதம் ஏழை, தனவான் என்னும் வேற்றுமை யில்லாது போய்விடில், ஒரு நாடு என்னுகும் என்பதை, அழகிய குறளொன்றில் திருவள்ளுவர் குறித்திருப்பது யாவருக்கும் தெரிந்த செய்தியாகும்.

"இரப்பாரை யில்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று"

ஊக்கம் என்பதே நாட்டிற் குன்றிவிடும். உழைப்பிற்குக் காரணம் பொருள் திரட்ட வேண்டுமென்னும் எண்ணம். எல்லாரும் ஓரே நிலையிற் செல்வம் எய்துவர் என்னும் தன்மை வாய்ந்துவிட்டால் ஒருவனுக்குப் பொருளீட்ட வேண்டுமென்ற எண்ணம் பிறவாது. மனத்தோடு பொருந்திய உழைப்பென்பது இல்லையாகவும், உலகில் மாந்தர் உயிரிலா ஓவியங்களாய், கலைநேர்ச்சியும் கைத்திறத் தேர்ச்சியுமற்று வறிதாவர். உலக வாழ்வே பசையற்றொழியும். வறியராேனோர் தம் புத்தியின் கூர்மையை வெளிப்படுத்து, வீறுகொண்டு வேலை செய்தலின்றாய், ஒத்துழைத்தலின்றிப் பொருளீட்டுங் கோட்பாடற்று

வீணேகழிவர். செல்வராயுள்ளார் ஈத்துவக்கு மின்பமெய்துதலின்றி, அறப்வளர்த்தற்குரிய ஈகையைச் செவ்வனே நடத்துதலின்றி, உலகவாழ்க்கையே பயனின்றிக்கழியும். இவ்வுண்மையை ஆலூர் மூலங்கிழார், புறநானூறு—38வது பாடலில் வெகு அழகாக எடுத்துமொழிகின்றார், அங்கு, பொதுவுடைமைக்குப் பதில் துறக்க உலகத்தைக் குறித்துப் பேசுகிறார். இவ்வுலகில் ஒருவன் தான் செய்யும் புண்ணியத்தின் பயனால் துறக்கத்தையடைந்து அங்கு இன்பந் துய்க்கிறான். ஆனால் அங்கு உடையோர் (the Haves), இல்லோர் (the Havenots), என்ற வேற்றுமையில்லை. அதனால் அங்கு ஈகைக்கு வழியில்லை. "மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று" என்னும் கொள்கையையுடைய தமிழ் மக்களுக்கு, ஈகைக்கு இடமில்லாத அத்தேவலோகமும் சிறப்பாகத் தோன்றுவதில்லை. ஒருவன் பாடுபட்டுப் பணத்தைத்தேடி மனையாளொடு இல்லறம் நடத்தி இவ்வுலகில் வாழ்வதெல்லாம் ஈதலின் பொருட்டேயாகும் அவ்வீகைக்கு எங்கு இடமில்லையோ அவ்விடம் தமிழ்மக்களுக்கு வேண்டற்பாலதொன்றன்று; ஆகையால் அவ்வித தேவலோக நுகர்ச்சியுடன் ஈகையும் சிறந்து விளங்கும் கிள்ளிவளவன் நாடே மிகச் சிறந்ததென்கிறார் புலவர்:—

"பொலம்பூங் காவி னன்னாட் டோரும்
செய்வினை மருங்கி னெய்த லல்லதை
உடையோ ரீதலு மில்லோர் இரத்தலும்
கடவ தன்மையிற் கையற வுடைத்தென
ஆண்டுச்செய் நுகர்ச்சி யீண்டுங் கூடலின்
நின்னா டுள்ளுவர் பரிசிலர்
ஒன்னார் தேஎத்து நின்னுடைத் தெனவே."

(புறநானூறு—38).

இதனால் பொதுவுடைமைக் கொள்கையைத் தமிழ் மக்கள் துருவி யாராய்ந்து அது பயனற்றது என்று கைவிடுத்தனர் என்பது ஒருவாறு தெரியவரும்.

இவ்வித முடியரசைக்கொண்ட பண்டைத் தமிழ் நாடு செல்வமும் வளனும் படைத்துச் செழித்தோங்கி வளர்ந்து மிகவும் உன்னத நிலையை அடைந்திருந்தது (The Golden Age of the Tamils). தமிழ் மக்களும் பலவித உரிமைகளையும் பெற்று உவப்பெய்தி உள்ளங்குளிர்ந்தனர். பாவலர் பாராட்டவும் காவலர் தாலாட்டவும் கற்றறிந்தோர் சீராட்டவுமாய், தாய்மொழியாகிய தமிழ்மொழி கதிர்த்தெழுந்து களிநடம் புரிந்தது. இக்காலத்தில் மாந்தர் நாடுசெழிக்க மழைவேண்டி வானைநோக்கி வாடுகின்றனர். அக்காலத்தில் மழைவளங் குன்றினும் வெள்ளி நிலை பிறழினும், அரசன் கோல் கோடாது செம்மையுற்றிருந்ததால், நாடுசெழித்து மாந்தர் இன்பவாழ்க்கை எய்தினர். ஆகையால் குடிகள் அரசனது செங்கோலையே வாழ்த்திப்போற்றினர். விலங்குகள்கூட அச்செங்கோலின் பயனைத் துய்த்து வாழ்ந்தன. சான்றோர் நிறைந்து நாடு அமைதி பெற்றது.

"மைம்மீன் புகையினுந் தூமந் தோன்றினும்
தென்றிசை மருங்கின் வெள்ளி யோடினும்
வயலக நிறையப் புதற்பூ மலர
மனைத்தலை மகவை யீன்ற வமர்க்கண்
ஆமா நெடுநிரை நன்புல் ஆரக்
கோஒல் செம்மையிற் சான்றோர் பல்கிப்
பெயல்பிழைப் பறியாது."

தமிழ்நாடு இன்ப வாழ்வை அடைந்திருந்தது.

---

# 2. தமிழர் போர்முறை.

உலகம் தோன்றிய காலம் முதல் இன்றுவரை மனித னுக்கு உடல் வலிமையே சிறப்புக்கொடுத்து நிற்கிறது. போர் வலிமையே மனிதனுக்குப் புகழ் கொடுத்து வருகிறது. சிலர் இதை ஒப்புக்கொள்வதில்லை. போர் வலிமை விலங் குத்தனம் என்பர். விலங்குத்தனமேயாயினும், மனிதன் விலங்கின் நிலையைவிட்டு விலங்கும்வரையிலும் அவ்விலங்குத் தனம் வேண்டியதாகவேயிருக்கிறது. எழுதுகோலின் வலி பெரிதா? பொருவாளின் வலம் பெரிதா? என்று மேடை களிற் சொற்போர் நிகழ்த்திப் போர்வலியைப் பழித்துரைப்பர். ஆயினும், நாம் இவ்வுலகில் இனிது உயிர்வாழ வேண்டுமா னல் உடல் வலியும் படைத்து அச்சம் என்பதே அணுவும் அறியாத வீரம் உடையவர்களாய் இருத்தல் அவசியமாகும். அதிலும் அரசர்க்கு எவ்வாற்ருனும் பகையின்மை கூடாமை யின், திருவள்ளுவர்கூட, மேற் பொதுவகையான் விலக்கப் பட்ட இகலைத் திரும்பவும் சிறப்பு வகையால் விதித்துப் பகை மாட்சி என்ருெரு அதிகாரம் அமைத்தனர். மனிதனுக்கு இவ்வுலகில் ஆசையிருக்கும்வரை போரும் இருந்தே தீரும். அதனல், போரால் மூடப்பட்ட இவ்வுலகில் ஒருவன் அமைதி யடைய வேண்டுமானல், அவனும் போர் வலிகொண்டே நிகழவேண்டும். இதுபற்றியே மேல்நாட்டுப் பெரியார் ஒருவர், "அமைதி வேண்டுமானல் அமருக்கு ஆயத்தமாகுங் கள்." (If you want peace prepare for war) என்று கூறி னர். இது முற்றிலும் முரண்படுவதுபோலத் தோன்றினும், நம் அநுபவத்திலிருந்து இதன் உண்மையை நாம் அறிந்து வருகின்றோம்.

தமிழில் 'போர்' என்னும் பெயர்ச்சொல் காரண இடு குறிப்பெயராக வழங்கப்படுகிறது. பிற மொழிகளிற்

போரைக் குறிக்கும் பெயர்களுக்குச் சிறப்பாக வேறு ஒரு பொருளும் அமைந்திருப்பதாகத் தெரியவில்லை. தமிழில் 'போர்' என்னும் சொல் 'பொரு' என்னும் வேர்ச்சொல் அடியாகப் பிறந்த பெயர்ச்சொல். 'பொரு' அல்லது 'பொருவுதல்' என்பதற்கு, ஒப்புதல் ஒத்திருத்தல் என்று பொருள். அதனால் 'பொருநன்'' என்பதற்கு, "தனக்குப் பிறர் உவமமாவதன்றித் தான் பிறர்க்கு உவமிக்கப்படுவான்." என்று நச்சினார்க்கினியர் உரை எழுதியிருக்கிறார். ஆகவே, 'போர்' என்னும் சொல் ஒத்திருத்தல் என்னும் பொருளைத் தன் அகத்தடக்கி நிற்கிறது. இதிலிருந்து தமிழர்களுடைய 'போர்' முறையைப் பற்றிய ஓர் அரிய செய்தி வெளியாகலாம். தமிழ் மக்கள் ஒத்த திறலுடையாரையும் ஒத்த படையுடையாரையும் எதிர்த்துப் பொருவதே போராகும் என்ற கொள்கையை உடையர். மெலியாரிடை வலியார்வலி என்னுகுவதென்று கடிந்தொதுக்கினார்கள். ஒரு வீரன் போர்க்களத்திற் படைதாங்கிப் போர்த்தினவெடுத்து நின்றான். ஒரு யானை தன்னைச் செலுத்துவோனை இழந்து தனியே நின்றது. யானையைக் கண்டவுடன் வீரனுக்கு அதனோடு போர்புரிய எண்ணம் உண்டாயிற்று. சற்றுத் தீர ஆராயலுற்றான். யானை தன்னந்தனியே உதவி புரிவோரின்றி நின்றது. அதனை ஏறி நடத்தும் மேலாளும் இறந்து பட்டான். அது தானாகப் போர்புரியும் நினைவின்றிப் பிறனுடைய கட்டுக்கு அடங்கி நிற்பதாகத் தோன்றிற்று. இவ்விதக் காரணங்களால் அவ்வியானையைக் கொல்வது இளிவு என்று அவ் வீரன் கருதுகிறான். இதைத் தவிர, இன்னுமொரு காரணம் அவன் கற்பித்துக் கூறியது விந்தையே. யானைக்குத் துதிக்கை ஒன்றுதானுண்டு. அதனால் அது ஒரு கையையுடையது. மனிதனுக்கோ இரண்டு கைகள் உள்ளன. ஒரு கையையுடைய விலங்கோடு இரு கைகளையுடைய மனிதன் போர் தொடுக்கலாமா? அதனால், அவ் வீரன் யானையை எறியாது பிழைத்துப் போக விடுகிறான்

"தானால் விலங்கால் தனித்தாற் பிறன் வரைத்தால்
யானை யெறிதல் இளிவரவால்—யானை
ஒருகை யுடைய தெறிவலோ யானும்
இருகை சுமந்துவாழ் வேன்." T. 274

இதனால் பொருதற்குரியாரிடமல்லாமல் ஒவ்வாதவரோடு பொருவது அறமன்று என்று தமிழர் கண்டிருந்தனர் எனலாம்.

பண்டைத்தமிழர், வீரமே தம்புகழாகக்கொண்டு விளங்கினர். போரில் அஞ்சாது உயிர் கொடுத்த வீரர்களுக்குக் கல் நட்டு அதைத் தெய்வமாக வணங்கினர். ஒரு சிற்றரசன் நாடு மிகவும் எளிய நாடாக இருந்தது. அங்குக் குருந்து, முல்லைபோன்ற நான்கு பூக்கள் அல்லது வேறு நறுமணமுள்ள மலர்கள் கிடையா. வரகு, தினை, கொள், அவரை என்ற நான்கு உணவுப் பொருள்களே அங்கு உள்ளன. துடியன், பாணன், பறையன், கடம்பன் என்ற நால்வகைக் குடிகளே அங்கு வாழ்ந்தனர்.

ஆனாலும், அவ்வூர் மக்கள், பகைவரைப் போரில் எதிர்த்து நின்று விலக்கி யானையை எறிந்து களத்தில் உயிர் நீத்துக் கல்லாயின வீரர்களைத் தெய்வமாக வணங்குவதல்லது, பிறர்போல், வேறு நெல்லைத்தூவிப் பரவும் கடவுளை வணங்குவதில்லை என்று தங்களைப் பெருமைப் படுத்திக் கொண்டனர். போரின் வீறுகொண்டு எவ்வளவு பெருமிதத்துடன் இப்பாடல் பாடப்பட்டுள்ளது பாருங்கள் :—

"......................குருந்தே முல்லையென்
றிந்நான் கல்லது பூவு மில்லை;
கருங்கால் வரகே யிருங்கதிர்த் தினையே
சிறுகொடிக் கொள்ளே பொறிகிளர் அவரையொ
டிந்நான் கல்லது உணவு மில்லை;
துடியன் பாணன் பறையன் கடம்பனென்

றிந்நான் கல்லது குடியு மில்லை;
ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி
ஒளிரேந்து மருப்பிற் களிறெறிந்து வீழ்ந்தெனக்
கல்லே பரவி னல்லது
நெல்லுகுத்துப் பரவுங் கடவுளு மிலவே."

(புறநானூறு—335).

போர்க்களத்தில் வீரர் தம் முகத்தினும் மார்பினும் கொள்ளும் புண்களை 'விழுப்புண்' என்று ஆன்றோர் வழங்குவர். அவ்விதம் விழுப்புண் படாத நாளைப் பிறவாத நாளாகக் கொண்டு தமிழ் வீரர்கள் பேதுறுவர். அரசன் தன் வீரர்களுக்குப் பகைவர்களைக் குறித்துக் காட்டிப் போருக்கு ஏவாமல், காலம் வாய்க்கவில்லை யென்று மடிந்திருப்பானாகில், வீரர்கள் தம்மிற் பொருதாயினும் சாகலா மென்று ஆர்ப்பரித்துத் தம்முடைய பூரித்த தோள்களைத் தட்டி உடற் கரிப்பர்.

"உட்பகை யொருதிறம் பட்டெனப் புட்பகைக்
கேவா னாகலிற் சாவேம் யாமென
நீங்கா மறவர் வீங்குதோள் புடைப்ப,"

(புறநானூறு—68).

போரெனும் பெயரைக் கேட்பினும், "எங்கே? எங்கே?" என்று உள்ளங் களித்து உடனெழுவர். உலகில் எப்பகுதியிற் போர் கிடைப்பினும் தூரம் தொலைவென்று வீரம் மலை வெய்தார்.

"போரெனிற் புகலும் புனைகழல் மறவர்
காடிடைக் கிடந்த நாடு நனி சேய
செல்வே மல்லே மென்னார்."

(புறநானூறு—31).

இவ்வடிகள் கம்பரது உள்ளத்தில் ஊறிக் கிடந்தே, அவர் அரக்கர் படைத் திறம் கூறும் பொழுது,

"நாணில மதனினுண்டு போரென நவிலினச்சொல்
தேனினுங் களிப்புச் செய்யும் சிந்தையர்."

எனத் தேனிலுங் களிப்புச் செய்யும் தென்றமிழிற் குமிழி யிட்டுக் குதித்து வரப்பாடினர். போர் என்றால் போதும் என்ற கருத்து, அது வைக்கோற் போரா, அக்கப்போரா என்றெல்லாம் இருந்து கருதாது, வீரப் போர் எனவே கொண்டு வீறிட்டெழுவர் என்பதாம்.

தோயன்மாறன் என்னும் சிற்றரசன் ஈர்ந்தூரை ஆண்டு வந்தான். போரில் அஞ்சாது முனைந்து சென்று பொருபவனாகையால் அவன் மேனியிற் பல இடத்தும் வாளால் அறுக்கப்பட்டுப் புண் ஆறித் தழும்புகள் நிறைந்து மருந்து வாங்கிக் கொள்ளப்பட்ட மரம் போலக் காணப்படும். அவ்வடுக்களே உடம்பிற்கு அழகு கொடுத்து நின்றன. அவ்வழகும் குற்ற மற்ற ஆண்மை நிறைந்த அழகு.

"இறையுறு விழுமந் தாங்கி யமரகத்
திரும்பு சுவைக்கொண்ட விழுப்புணோய் தீர்ந்து
மருந்துகொள் மரத்தின் வாள்வடு மயங்கி
வடுவின்று வடிந்த யாக்கையன்."

(புறநானூறு—180).

இதனால், விழுப்புண்படாத உடம்பைக் குற்றமுடையதாய், அழகொழிந்த உடம்பென்றே தமிழர் கருதினர் என்பது நன்கு பெறப்படும்.

திருக்கிள்ளி என்பவன் ஒரு சிற்றரசன். போரிற் புறங் கொடாப் பெருந்தகையாளன். அவன் உடம்பு முழுவதும் போரிற் புண்பட்டு ஆறிய தழும்புகள் நிறைந்து அருவருக்கத் தக்க தோற்றமுடையன். ஆனால் தமிழ் மக்கள் அவனைப்

பன்மடங்கு புகழ்ந்து போற்றினர் மாடலன் மதுரைக் குமர ஞர் என்னும் புலவர், ஆசியச் சுவை ததும்ப அவன் புகழைத் தோற்றுவிப்பது மிக்க இன்பம் விளைப்பதாகும். அவர் அவ்வீரனைப் பார்த்து, "நீ பகைவரை எதிர்த்து அஞ்சாது முன்நிற்பதனுல் உடல் எங்கும் படையறுத்த புண்கள் தாங் கிக் கோர உருவத்தனுய் இருக்கிருய். உனது காட்சி எங்கள் கண்ணுக்கு இனிமை அளிப்பதில்லை. ஆனுல் உனது புகழைக் கேட்க எங்கள் காதுக்கு இனிமையாய் இருக்கிறது. உன் னுடைய பகைவர் உன் எதிர் நிற்றற்கு அஞ்சிப் போரில் முதுகு காட்டி ஓடிப் பிழைக்கின்றனர். அதனுல் அவர்களது மாசற்ற மேனி வழு வழுவென்று வடுவொன்று மில்லாது கண்ணுக்குப் பார்க்க அழகாயிருக்கின்றது. எங்கள் காதாலே தான் அவர்கள் வசையைக் கேட்க முடிவதில்லை. ஆனுல், உன் பகைவரை எல்லாரும் பழிக்கின்றனர், உன்னைப் புகழ்கின்றனர். நீ கேள்விக்கினியை; அவர் காட்சிக்கினியர். ஆகையால் நீயும் ஒன்றில் இனியவனுயிருக்கிருய், அவர்களும் ஒன்றில் இனியவர்களாயிருக்கிருர்கள். இவ்வித ஒற்றுமை உங்களிடை இருக்கவும், உங்களிடை ஒவ்வாததுதான் எது? பின், எதற்காக மக்கள் உன்னைமட்டும் உயர்த்தி, மற்றும் உன் பகைவரை இழிக்கிருர்கள்?" என்று பழிப்பதுபோன்று புகழ்ந்து பாடியுள்ளார்:-

"நீயே, அமர்காணின் அமர்கடந்தவர்
படைவிலக்கி யெதிர்நிற்றலின்
வாஅள் வாய்த்த வடுவாழ் யாக்கையொடு
கேள்விக் கினியை கட்கின் ஞயே
அவரே, நிற்காணிற் புறங்கொடுத்தலின்
ஊறறியா மெய்யாக்கையொடு
கண்ணுக் கினியர் செவிக்கின் ஞரே
அதனுல், நீயுமொன் றினியை அவருமொன் றினியர்
ஒவ்வா யாவுள மற்றே வெல்போர்க்
கழல்புனை திருந்தடிக் கடுமான் கிள்ளி

நின்னை வியக்குமிவ் வுலகமஃது
என்னோ பெரும வுரைத்திசி னெமக்கே''.

(புறநானூறு—167)

இதனால் போர் வீரருக்குப் புண்ணே பூண்கலம் என்பதும், நம் முன்னோர் விழுப்புண்களை வீறுடன் தம் மேனியிற் புனைந்து வான்புகழெய்தினர் என்பதும், அதை நம் நாட்டினர் போற்றிப் புகழ்ந்தனர் என்பதும் நன்கு விளங்கும்.

நமது எண்சாண் உடம்பிற்கும் மிகவும் சிறப்பாக விளங்கும் உறுப்பு கண்ணேயாகும். அதில் ஒரு தூசியோ, துரும்போ, துளியோ, அல்லது காற்றில் அலைந்து வீசி வரும் மயிர் நுனியோ பட்டுவிட்டால் அக்கண் என்ன பாடு படுகிறது! உடல் முழுதும் துடிதுடித்துத் துன்புற்று நடுங்குவோம். அவ்வளவு நுண்ணியதாய் இருக்கும் அக்கண்ணை நோக்கி ஒரு வேலாயுதம் பாய்ந்து வந்தாலும் தன் கண்ணிமைகளைச் சற்றே அசைப்பதும் ஒரு வீரனுக்குக்குற்றமாகுமென்று நம் முன்னோர் கொண்டிருந்தனர்.

''விழித்தகண் வேல்கொண் டெறிய வழித்திமைப்பின்
ஓட்டன்றோ வன்க ணவர்க்கு.''

என்பது பொய்யா மொழியன்றோ!

வீரர்கள் களத்திற் போர்புரியும்பொழுது தமது நலத்தையும் கவனியாது தமது தோழர்களுக்கு வரும் இடுக்கணைத் தடுக்கவே முயன்று நிற்பர் ஒரு வீரன் போரில் நெருக்கமான இடமொன்றில் பொருது நின்றான். போர் முனையில் நின்ற அவனது தோழனைப் பகைவர் சூழ்ந்துகொண்டு பெரும் போர் புரிந்தனர். அவனுக்குத் தான் உடனே சென்று உதவி புரியாவிடில் தோழன் இறந்துவிடுவான் என்பதை வீரன் தெரிந்தான். தான் நின்றதோ போரில் நெருக்கடியான இடம். பகைவர் கூட்டமாய்ச் சூழ்ந்து நெருங்கி

பொருதனர். அப்பொழுது ஒரு வேலும் தன் வயிற்றினுட் பாய்ந்து குடரும் சரிந்து காலிற் படும்படித் தொங்கி கிடந்தது. அவன் அடியெடுத்து நடக்கும்பொழுது சரிந்த குடர் காலிற் பின்னிக்கொண்டு அவன் போக்கிற் கிடையூறு விளைத்தது. இரும்புச் சங்கிலி காலில் மாட்டிய யானை எவ்வாறு நடக்குமோ அதுபோல் நடந்துசென்றான். தன்னை எதிர்த்து மண்டிய பகைவர் பக்கம் நோக்கித் தன் கூரிய வேலை ஓச்சி, "ஓம்புமின்! ஓம்புமின்!" என்று கூவிக்கொண்டே, தன் உயிரை ஓம்பாது, பகைவர் அஞ்சி ஒதுங்கும்படி. கூட்டத்தைப் பிளந்துகொண்டு, கன்றை நினைத்துக் கதறிவரும் பசுவினைப்போல், விரைவில் தன் தோழனுக்கு உதவியாய்ப் போர்முனைக்குச் சென்றான். எவ்வளவு அழகாக அவ் வீரனின் செயல் இக்கவியில் கூறப்பட்டிருக்கிறது!

"..................செற்றிய
திணிநிலை யலறக் கூவை போழ்ந்துதன்
வடிமா ணெஃகம் கடிமுகத் தேந்தி
ஓம்புமின் ஓம்புமின் இவணென ஓம்பாது
தொடர்கொள் யானையிற் குடர்கால் தட்பக்
கன்றமர் கறவை மான
முன்சமத் தெதிர்ந்ததன் தோழற்கு வருமே."

(புறநானூறு—275)

மற்றொரு போரில் நடந்ததொரு செய்தியைக் கவனிப் போம். முதல்நாள் நடந்த போரில் ஒரு வீரனின் தமையனை பகைவனொருவன் கொன்றுவிட்டான். அதைக் கேட்ட வீரனுக்குக் கோபம் பொங்கியெழுந்தது. அகலிடத்துப் பெய்த குன்றி மணியைப்போல் அவன் கண் சிவந்துவிட்டது. மறுநாட் காலையில் அவ்வீரன் போர்க்களம் முழுவதும் தன் தமையனைக் கொன்ற பகைவனைத் தேடி அவன் பக்கல் விரைந்து வந்தான். அதைக்கண்ட பகைவன் பயந்து தன் அருகில் நின்றோரை ஒரு கேடகம் தேட்டு மன்றாடினான்.

அதற்கு அருகிலிருந்தோர் 'நீ தோல் தா, தோல் தாவென்று பஞ்சரிக்கிறாயே, அவன் வரும் வேகத்தைப் பார். ஒரு கட்குடியன் ஊரிற் சமைத்த கள்ளைக் கோறிக் குடிப்பதற்கு வேண்டும் கலயத்தை அது இருக்கும் வீட்டினுள்ளே எவ்வாறு துருவிக் கண்டுபிடிப்பானோ, அதுபோல், அவ்வீரன் விடாது உன்னை நெருங்கி வருகிறான். நீ கேடயத்துள் மறைந்து உயிர் பிழைக்கலாமென்று நினைக்கிறாய் போலும்! கேடயமேயன்று, ஒரு பெரிய குண்டுக்கல்லின் பின்னே போய் ஒளித்தாலும் நீ உயிர் பிழைக்கப் போவதில்லை" என்று கூறியதாக வரும் பாடல்:—

''தோல்தா தோல்தா என்றி தோலொடு
துறுகல் மறையினும் உய்குவை போலாய்
நெருநல் எல்லைநீ யெறிந்தோன் தம்பி
அகற்பெய் குன்றியிற் சுழலுங் கண்ணன்
பேரூர் அட்ட கள்ளிற்கு
ஓரிற் கோயிற் றேருமால் நின்னே''

(புறநானூறு—300)

தமிழர் போர்க்களத்திற் காட்டிய தோள் வலிமையும், மனவுறுதியும், எண்ணியது முடிக்கும் ஆற்றலும், போர்க்கு அஞ்சினோரைப் பழித்து நகையாடியதும் இக்கவியிலிருந்து நாம் தெள்ளிதின் உணரலாம்.

இவ்வாறு போர்க்களத்திற் பகைவர்க்கு அஞ்சாது எதிர்த்து நின்று அவர் விடும் படைக்கலங்களை மார்பில் ஏற்று உடம்பில் விழுப்புண்படாது மறவர் குடியிற் பிறந்தோர் இறக்க நேருமாயின், அவர் உயிர் துறக்கம் எய்துவதில்லை என்ற நம்பிக்கையை அக்காலத்திற் கொண்டிருந்தனர். அவ் விதம் விழுப்புண் தன் உடம்பில் எய்தும் பெருமையை அடையாது ஓர் அரசன் இறந்துபடின் வாளாற்படாத குற் றத்தை அவனிடமிருந்து நீக்கவேண்டி, அவனுடலைத் தருப்

யைப் புல்லிலே கிடத்தி, அந்தணர் கூடிநின்று, "போரில் மடிந்தோர் சேரும் துறக்கத்தை இவனும் சென்றடைக!" என்று வாளால் அவன் உடலை வடுச்செய்து பின் அவ்வுடலை அடக்கம் செய்வர். இவ்வரிய வழக்கம் வேறு எந்நாட்டினரிடையும் நிகழ்ந்து வந்ததாக எம்மொழியிலுங் கூறப்படவில்லை இச்செய்தியை ஔவையார் பாடலிலிருந்து நாம் அறிகின்றோம்:—

> "ஓடல் மரீஇய பீடில் மன்னர்
> நோய்ப்பால் விளிந்த யாக்கை தழீஇக்
> காதல் மறந்தவர் தீதுமருங் கறுமார்
> அறம்புரி கொள்கை நான்மறை முதல்வர்
> திறம்புரி பசும்புற் பரப்பினர் கிடப்பி
> மறங்கந் தாக நல்லமர் வீழ்ந்த
> நீள்கழல் மறவர் செல்வுழிச் செல்கென
> வாள்போழ்ந் தடக்கலு முய்ந்தனர் மாதோ."
>
> (புறநானூறு—93).

இதிலிருந்து, போர்க்களத்திற் பொருது மடியாமல் இல்லிலிருந்து நோய்வாய்ப்பட்டுக் கூற்றுவன் கையில் வீழ்வதுகூட அரசர்க்கு இழிபென்று தமிழர் கருதியிருந்தனர் என்பதும், போர்க்களத்தில் இறப்பைவேண்டி எதிர்நோக்கினர் என்பதும் புலனாகும். செங்கணான் என்னும் சோழ அரசனால் தளைப்பட்டுச் சிறையிற் கிடந்த சேரன், கணைக்கால் இரும்பொறை என்பவன், வேட்கையால் தண்ணீர் கேட்டுப் பெறாது, பின் சற்றுக் காலம் தாழ்த்துக் கொடுக்கப்பட்ட நீரைக் குடிக்க மறுத்து உயிர் விட்டபொழுது பாடிய பாடலில்,

> "குழவி யிறப்பினும் ஊன்தடி பிறப்பினும்
> ஆளன் றென்று வாளிற் றப்பார்."
>
> (புறநானூறு—74).

என்று பாடியுள்ளான். அரசகுலத்தில் பிள்ளை, சாக்குழவி யாகவேனும் ஊன்பிண்டமாகவேனும் பிறந்தாலும், இது ஆளன்று என்று நீக்காது, அதையும் வாளோச்சி வடுச் செய்தே அடக்கம் செய்வார் என்பது இதன் பொருள்.. இத ஞல் உயிரோடுபிறந்து பின் இறக்கும் குழந்தைகளுக்கு அடுப்பதைப் பற்றிச்சொல்ல வேண்டியதில்லை. ஆண்மையே பற்றுக்கோடாகப் போரிலே வீழ்ந்திறவாது தப்பி, மூப்பி னும் பிணியினும் இறத்தல் அரசர்க்குச் சிறவாது என்னும் இக்கருத்தை, மணிமேகலையினுள்ளும்,

"தருப்பையிற் கிடத்தி வாளிற் போழ்ந்து
செருப்புகன் மறவர் செல்வுழிச் செல்கென
மூத்து விளிதலிக் குடிப்பிறந் தோர்க்கு
நாப்புடை பெயராது நாணுத்தக வுடைத்தே."

என்று கூறப்பட்டுள்ளது. இவ்வழக்கம், 'வீரர்க்கழகு விழுப் புண் தாங்குதல்' என்னும் கொள்கையை வற்புறுத்துவதே யாகும்.

இவ்விதம் போரில் ஒருவன் புண் எய்தும் பொழுது அவன் முதுகில் ஒருவடுவேனும் படுமாகில் அவன் உயிர் வாழமாட்டான். அவன் போரில் அஞ்சிப் புறங்கொடுத்தான் என்று பெரிய பழி நேர்ந்துவிடும். அப்பழியைப் பெறுவதை விட உயிர்விடுவது மேலென்று தமிழர் கருதியிருந்தனர். வெண்ணி என்னும் போர்க்களத்திற் கரிகால் வளவனுடன் பெருஞ்சேரலாதன் என்னும் சேரவரசன் அதிக வீரத்துடன் எதிர்த்துப்போர் செய்தான். அப்பொழுது ஓர் அம்பு அவன் மார்பிற் பாய்ந்து முதுகைத் துளைத்து ஊடுருவிச் சென்றது: சேரன் தன் முதுகிற் புண்ணைத் தடவி உணர்ந்தான். அந்தோ! என் செய்வான்! அவன் எதிரிக்குப் புறங்கொடுத்து பெறப்பட்ட வடு அன்று. ஆயினும் அவன் மனம் குழைந்து வாடினன், நாணினன், இம்மண்ணின் வாழ்க்கையைத்

துறந்தான். புறப்புண் நாணி வடக்கிருந்து உயிரை நீத்தான். வடக்கிருத்தல் என்பது, துறக்கவுலகத்தை நாடி வடக்குத் திசையையே நோக்கி, உண்ணு நோன்பிருந்து, ஊனை வாட்டி உயிர் நீத்தல். இதை வீரத்தின் ஓர் உயர்நிலை யென்பர்.

> "களிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
> மிகப்புகழ் உலக மெய்திப்
> புறப்புண் ணாணி வடக்கிருந் தோனே."
>
> (புறநானூறு—66).

இவ்வித வீரம் செறிந்த தமிழ் மறவர்கள் போரில் முதுகுகாட்டி ஓடினோரையும், மயிர் குலைந்தோரையும், ஒத்த படை எடாதோரையும், பெண்பெயர் புனைந்தோரையும், பேடியரையும் எதிர்த்துச் சண்டை செய்யார். ஒரு நாட்டைத் தாக்கிப் போர் தொடுக்குமுன், அந்நாட்டில் வாழ்பவருக்கு, முன் எச்சரிக்கை கொடுத்து, போர்க்குரியரல்லாத அந்தணரையும், மாதரையும், குழந்தைகளையும், பிணியுடையோரையும், தங்களுக்கு ஈமக்கடன் கழிப்பதற்குப் பொன்போற் புதல்வர்ப் பெறாதோரையும் அந்நாட்டை விட்டு ஒதுங்கச்செய்வர். இவ்வித விளம்பரத்தை யறிந்து தாமாகத் தப்பிப் பிழைக்க இயலாத பசுத்திரளைக் களவாடிச் சென்று உயிர்காப்பர். இச் செய்தி "ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்" என்னும் புறநானூறு 9-வது பாடலால் நாம் அறியலாம். இதனால் தமிழர்க்கு மறத்தினிடையிலும் அறமே திகழ்ந்ததென்பது நன்கு விளங்கும். இத்தகைய அறப்பண்பும் மறப்பண்பும் வாய்ந்து இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் திகழ்ந்த தமிழ் மிலேச்சர்களோடு, இரவில் அறியாது இன்றுயில் கொள்ளும் பெண்டு பிள்ளைகளின் மேல் விசும்பினிவர்ந்து குண்டுமாரி பொழியும் இருபதாம் நூற்றாண்டினராகிய நாகரிக மக்களை ஒப்பிட்டு, அறிவாளிகள் உண்மையை யோர்ந்து தெளிவார்களாக.

தமிழர் போர்க்கு அஞ்சி வெளி வாராது பதுங்கும் அரசனுடன் போர் புரிவது வீரத்திற்கு இழுக்கென்று கொண்டிருந்தனர். கிள்ளி வளவன் என்னும் சோழன் கருவூரை முற்றுகையிட்டான். சேரவரசன் பயந்து கோட்டை வாயிலை அடைத்துக்கொண்டு வெளிவராது உள்ளிருந்தான். அவ்வூர் இளமகளிர் கழங்காடும் வெண் மணலையுடைய ஆன் பொருநை நதிக்கரையிலுள்ள சேரனது காவல் மரங்களையெல்லாம் சோழன் வெட்டி யழித்தான். அவ்வோசையைக் கேட்டும் பொருவதற்குப் பயந்து சேரன் கோட்டையின் உள்ளேயே குமைந்திருந்தான். இதைக் கண்ட ஆலத்தூர்கிழார் என்னும் புலவர், "இவ்விதம் பேடியா யிருக்கும் அரசனுடன் நீ போருக்கெழுந்ததே நாணத்தக்க தாகும்" என்று நயந்து பேசிச் சோழனை முற்றுகையைக் கைவிடச் செய்தார் என்ற செய்தி புறநானூறு—36-வது பாடலிற் காணப்படும். இதில் இளமகளிர் கழங்காடும் அணுமையதான இடத்திற்கும் சேரன் வர அஞ்சி வலியின்றி ஒடுங்கினன் என்ற கருத்தின் நயம் கண்டு சுவைத்தற்காம்.

இவ்விதம் போருக்கஞ்சிப் பதுங்குவோரைத் தமிழ் மக்கள் ஏளனஞ்செய்து நகைக்குள்ளாக்குவர். சோழன் நலங் கிள்ளி போர்க்கெழுந்தபொழுது அவனுடைய தாயாதியான நெடுங்கிள்ளி என்பவன் ஆவூரின்கண் கோட்டையை அடைத்துக் கொண்டு உள்ளிருந்தான். அதனைக் கண்ட கோவூர் கிழார் என்னும் புலவர்,

"அறவை யாயின் நினதெனத் திறத்தல்
மறவை யாயின் போரொடு திறத்தல்
அறவையு மறவையும் அல்லை யாகத்
திறவா தடைத்த திண்ணிலைக் கதவின்
நீண்மதில் ஒருசிறை யொடுங்குதல்
நாணுத்தக வுடைத்திது காணுங் காலே."

(புறநானூறு—44)

என்று இடித்துக் கூறி அவனுடைய வீரமற்ற செய்கையை வெளிப்படுத்தினர்.

ஒரு சமயம் தொண்டைமான் என்னும் அரசன் மிகச் செருக்குக் கொண்டிருந்தான். அவனுக்குத் தக்க புத்தி புகட்டக் கருதி அதிகமான் ஒளவையாரை அவன்பால் தூது அனுப்பினன். தொண்டைமான் தன்னுடைய போர் வலிமையை ஒளவையாருக்குக் காட்டக் கருதித் தன் படைக்கலக் கொட்டிலைத் திறந்து அவரைக் காணச் செய்தான். அங்கு வேண்டும் படைகள் எல்லாம் நன்ருக மினுக்கித் தீட்டப் பட்டு வரிசை வரிசையாக அடுக்கியிருந்தன. அவற்றை அணி செய்திருந்த முறையே ஒரு தனிச் சிறப்பு வாய்ந்திருந்தது. ஒவ்வொரு படைக் கருவிக்கும் மயிற் பீலி சூட்டி மாலை தூக்கப்பட்டிருந்தது. திரட்சியான வேல்களுக்கும் வாள்களுக்கும் நெய்தடவி விளக்கப்பட்டிருந்தது. கண்ணைப் பறிப்பதுபோற் பளீர் பளீர் என்று ஒளி வீசி ஆயுதங்களெல்லாம் புத்தப் புதியவையாகக் காணப்பட்டன. இவற்றைக் கண்டு ஒளவையார் பயந்து போய்விடுவார் என்று தொண்டைமான் நினைத்தான். "அம்மையே! எப்படி என் படை வலிமை?" என்ருெரு கேள்வியும் விடுத்தான். ஒளவையார் அவன் பெருமிதத்தை அடக்கி அதிகமானின் போர்த்திறனைக் கூற எண்ணினர் அதி நுட்பமாகவும், குறிப்பாகவும், குத்தலாகவும் அவனுக்குக் கோபம் வராத முறையில் விடை கூறலானர்: 'அரசே! மிகவும் மெச்சினேன். படைக் கருவிகளை வைக்கவேண்டிய முறை இதுதான். கண்ணுக்கு அழகாகவும் இருக்கும்; அவற்றிற்கும் ஒரு பழுதுவராது. கட்டுக் காவலிற் பெட்டகத் திட்டதுபோல் இச்சாலையினுள்ளேயே அகலாதிருக்கும். நன்ருய்ப் பூசிக்கலாம். ஆனல் அந்த அதிகமானுடைய ஆயுதங்களோ சுத்த மோசம். அவற்றின் நிலையை என்னென்று சொல்வது! அவன் தன் படைகளைப் பகைவர் மேல் எப்பொழுதும் ஏவிக்கொண்டேயிருக்கிருன். அவைகள் பகைவர் மார்பைப் பிளந்து பிளந்து தேய்ந்து கொண்டேயிருக்கின்றன. அதனல் அடிக்கடி கூர்மை மழுங்கி நுனிவாய் இற்றுச் சிதைகின்றன. பின் எவ்வாறு இது போல் அழகாகக் கொட்டிலில் அணிந்து வைப்பது? அவை

களின் கதி கொல்லன் உலைக்களத்திலேயே கிடக்க வேண்டி யது தான்" என்று கூறினர். இப்பொருள் பொதிந்த இனிய பாடல் வருமாறு:—

" இவ்வே, பீலி யணிந்து மாலை சூட்டிக்
கண்டிரள் நோன்காழ் திருத்தி நெய்யணிந்து
கடியுடை வியனக ரவ்வே; அவ்வே,
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொற்றுறைக் குற்றில மாதோ என்றும்
உண்டாயிற் பதங்கொடுத்து
இல்லாயின் உடனுண்ணும்
இல்லோர் ஒக்கற் றலைவன்
அண்ணலெங் கோமான் வைந்நுதி வேலே."

(புறநானூறு—95).

இக்கவியில் நகைச்சுவை செறிந்திருக்கிறது. அது நாம் எடுத்தும், படுத்தும் படிக்கும் விதத்தில் அமைந்திருக்கும். பகைவர்க்குத்தி என்று ஔவையார் கூறியபொழுது. அவர் சொல்லாகிய சுடுசரம் எவ்வாறு தொண்டைமான் மார்பைக் குத்தியிருக்கும்! அவர் 'கோடு நுதி சிதைந்து' என்னவும், அவன் மனம் சிதைந்து திகைப்பெய்துதல் சொல்லவும் வேண்டுமோ? அவர் 'அண்ணல் எங்கோமான்' என்று பெருமிதத்துடன் முழங்கியபொழுது, அவன் நாணித் தலை கவிழ்ந்திருப்பான் என்பது திண்ணமே யன்றோ? போர்வலி குன்றினோரைத் தமிழ் முன்னோர் இவ்வாறே நாணுற வைத்து நகைக்கிரையாக்குவர்.

தமிழ் மன்னர் நகர்களைச் சுற்றிக்கோட்டை மதில் வளைத்து அரண் வகுத்திருந்தனர். அக்கோட்டையைச்சுற்றி ஆழமான அகழ்களும் அமைக்கப்பட்டு, அவற்றை நீந்தி வர வியலாதபடி முதலைகள் நிறைந்திருக்கும்:—

" கராஅங் கலித்த குண்டுகண் அகழி
இடங்கருங் குட்டத் துடன்றொக்கு ஓடி
யாமங் கொள்பவர் சுடர்நிழற் கதூஉம்,

கடுமுரண் முதலைய நெடுநீர் இலஞ்சிச்
செம்புறழ் புரிசைச் செம்மல் மூதூர்."
(புறநானூறு—37).

இதனால் இரவிற் காவற்காரர்கள் தீப்பந்தங்களைக் கைக் கொண்டு கோட்டைக்கு உள்ளும் புறமும் சுற்றி நின்று காவல் காத்து வருவார்கள் என்பதும் விளங்கும். இப்பாட லில் 'சுடர் நிழற் கதூஉங் கடு முரண் முதலைய' என்பது நோக்கத்தக்கது. நிழலையே கவ்வி மாறுபாடுமிகும் கடிய முதலைகள் மனிதரைக் கண்டால் விடுமா? இது அவ்வகழி யைக் கடத்தலின் அருமை குறித்த செய்தியாகும். செம் புறழ் புரிசை என்பதனால் செப்புத்தகடுகள் கொடுத்துத் திண்ணிதாகச் செய்யப்பட்ட கோட்டை என்பது புலனும். இவ்விதம் விசும்பினிவர்ந்து தோன்றும் புரிசைகள் வெயில் நுழையா இயல்பினவாய் மரம் செறிந்த காவற்காடுகளையும் சிற்றரண்களையும் சுற்றிலும் கொண்டிருக்குமென்பது,

"கதிர் நுழை கல்லா மரப்பயில் கடிமிளை
அருங்குறும் புடுத்த கானப் பேரெயில்"
(புறநானூறு—21).

என்பதனால் விளங்கும். கோட்டை மதிலின் மீதிருந்து போர் செய்யும் பொருட்டுப் பல ஏவறைகளும், ஞாயில்களும், பலவகை எந்திரங்களும், அமைக்கப்பட்டிருக்கும். இச்செய்தி,

"தமரெனின் யாவரும் புகுப அமரெனின்
திங்களும் நுழையா எந்திரப் படுபுழை."
(புறநானூறு—177)

என்னும் அடிகளால் வலியுறும்.

பகைவர் நெருங்கிவந்து கோட்டை மதிலைப் பற்றவிடாது தடுக்கவல்ல பொறிவகைகள், மிக மதிநுட்பத்துடன் வெருவத்தக்க முறையில் ஆக்கப்பட்டவை. மதிலின் மீது ஒரு கருங்குரங்கு இருப்பதுபோலத் தோன்றும். ஆனால்

அது சேர்ந்தாரைக் கடிக்கும் ஒரு சூழ்ச்சிப் பொறியாக மாறிவிடும். உருகக் காய்ச்சின நெய்யையும், செம்பையும், இரும்பையும் பகைவர் மீது இறைத்தெறிந்து அழிப்பதற்குக் குழிசிகளும், மிடாக்களும், உலைகளும் மதிலின்மீது மறைத்து வைக்கப்பட்டிருக்கும். நெருங்கும் பகைவர்களைக் கல்லால் அடிப்பதற்கு இடங்கணிப் பொறிகளும், அவற்றிற்கு வேண்டிய கல்லைக் கொட்டுவதற்குக் கூடைகளும் மதில் நிறைந்திருக்கும்: அகழைக் கடந்து மதிலைப் பற்றுவாரை, மீனைக் கோத்து வலிப்பதுபோல், தூண்டிலிற் பற்றியிழுக்கும் கருவிகளும், கழுக்கோல் போலக் கழுத்திற் பூட்டி முறுக்கும் சங்கிலிகளும், கழுத்தைக் கண்ணியிட்டு வலிக்கும் கயிற்றுத் தொடக்குகளும், மதிலைச் சுற்றிலும் அமைக்கப்பட்டிருக்கும். உச்சியைக் கொத்தி மூளையைக் கடிக்கவல்ல பறக்கவிடும் பொறிநிரைகள், ஆண்டலைப் புள்ளின் வடிவாகப் படுவதால் ஆண்டலையடுப்பு என்னப்படும். அவை இயற்கையிற் பறக்கும் பறவைகள் போலிருந்து எதிர்பாராது பகைவரை வந்து தாக்கும் திறத்தன. சிச்சிலிப் பறவைகள் போலப் பறந்து மாற்றார் மேற்சென்று கண்ணைக் கொத்தும் எந்திரங்கள் சிச்சிலிப் பொறி என்னப்படும். அன்றியும், கிடங்கிலேறினோரை மறியத்தள்ளும் இருப்புக் கவைகளும், கழுக்கோல்களும், மதிலில் வைத்த கையைப்பொதுக்கும் ஊசிப் பொறிகளும், அம்புக்கட்டும் மதிலின் புழைகளாகிய ஏவறைகளில் வெளித்தோன்றாது மறைக்கப்பட்டிருக்கும். மதில்களின்மேலே ஏறினார் உடலைக் குத்திக்கொல்வதற்குப் பன்றிப் பொறிகள் இரும்பினால் செய்து விடப்பட்டிருக்கும். கழிகளாற் பகைவரையடிப்பதற்குக்கூட பொறிகள் ஏற்பட்டிருந்தன. பகைவர் தலையில் வீழ்த்துவதற்குரிய துலா மரங்கள் மறைவாய்க் கோட்டை வாயிலின்மேலே தொங்கவிட்டிருக்கும் மதிற்கதவுகளுக்கு வலுவாய்க் கணையமரங்கள் நிரைக்கப்பட்டிருக்கும். பகைவர் மதிலின் கதவைத் திறந்தாலுங்கூட, உள்ளே நுழையவிடாது தடுப்பதற்கு எழுவும் சீப்பும் உள. இவை நிலத்திலே வீழவிட்ட மரங்களாய்,

கதவைத்திறக்குங் காலத்து மேலே யெழுந்து நின்று வழி மறிக்கும் நூறு பேரை ஒரு சேரக்கொல்லவல்ல பொறிக்குச் சதக்கினி என்று பெயர். இன்னும், தள்ளிவெட்டி, களிற்றுப் பொறி விழுங்கும் பாம்பு சகடப் பொறி தகர்ப்பொறி, அரி நூற்பொறி போன்ற எண்ணிறந்த எந்திரங்கள் புதிது புதிதாக அமைக்கப்பட்டு, மாற்றலரை மருளப்பண்ணும் திறத்தனவாய்க் காணப்படும். இவற்றைப் பின்வரும் சிலப்பதிகார அடிகளில் விளங்கக் காணலாம்:-

"மிளையுங் கிடங்கும் வளைவிற் பொறியுங்
கருவிர லூகமுங் கல்லுமிழ் கவணும்
பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியுங்
காய்பொன் னுலையுங் கல்லிடு கூடையுந்
தூண்டி லுந் தொடக்கு மாண்டலை யடுப்புங்
கவையுங் கழுவும் புதையும் புழையும்
ஐயவித் துலாமுங் கைபெய ரூசியுஞ்
சென்றெறி சிரலும் பன்றியும் பணையும்
எழுவுஞ் சீப்பு முழுவிறற் கணையமுங்
கோலுங் குந்தமும் வேலும் பிறவும்
ஞாயிலுஞ் சிறந்து நாட்கொடி நுடங்கும் வாயில்."

மதிலின் நெற்றிச் சூட்டாகக் கட்டப்படும் ஞாயில்களை ஏவறைகள் என்றும், குருவித்தலைகள் என்றும் வழங்குவர்.

நீண்ட காலத்திற்கு வீரர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் யாவும் மதிலினகத்தேயே அடக்கப்பட்டிருக்கும் முற்றுகை நெடுநாள் நடந்து மதிலினுள்ளார் வெளியே செல்லமுடியாது போனால், மதிலின் உட்புறத்திலே தானியங் களைப் பயிரிடுவதற்கு வேண்டிய வசதிகளும் ஏற்பட்டிருக்கும். அரணிலிருந்து யானைகள் ஒருத்தரும் அறியாதபடி அகழுக்குச் சென்று நீராடி வருவதற்கு வெளி வீதிகளின் அடியிற் கரந் துறை வழிகள் (Subterranean passage) கட்டப்பட்டிருக் கும். இது சுருங்கை என்று குறிக்கப்படும்:-

"விலங்குநீர்ப் பரப்பின் வலம்புணர் அகழியிற்
பெருங்கை யானை யினநிரை பெயருஞ்

*சுருங்கை வீதி மருங்கிற் போகிக்*
*கடிமதில் வாயில் காவலிற் சிறந்த*
*அடல்வாள் யாவனர்''*

என்னும் சிலப்பதிகாரப் பகுதியில், அத்தகைய சுருங்கை வீதிகள் யானைகள் கூட்டம் கூட்டமாய்ச் செல்லுவதற் கொத்த அகலம் வாய்ந்தவை என்பது புலப்படும். மேலும் கோட்டை வாயில்களை யவன நாட்டு வீரர்கள் உருவிய வாளுடன் காவல் புரிந்து வந்தமை தெரியவரும். இவ்விதம் மதிலைக்காத்து, முற்றுகையிடும் எதிரியைப் புறமுதுகிடும் திறன், நொச்சி என்னப்படும். இவ்வெருவரு பொறிகளையும் குறிவைத்தழித்து, வீரர்களைவென்று, கிடங்கினைக் கடந்து, மதிலினை இவர்ந்து, யானைகளை யேவிக் கதவம் திறந்து, கோட்டையை அழிக்கும் திறன், உழிஞை என்னப்படும். அக்காலத்தில் நொச்சியார் நொச்சிப் பூவையும், உழிஞையார் உழிஞைப் பூவையும் அடையாளமாகச் சூடிக்கொண்டு போரிடுவர். போரை விருப்பி எடுக்கப்பட்ட பலவகைக் கொடிகளாற் கோட்டைவாயில் அலங்கரிக்கப்பட்டிருக்கும். "கோட்டையை எதிர்த்துவரும் பகைவரைப் பேடியராக்கி முறியடித்துப் பெண்விளையாடல்களை ஆடச் செய்வோம்." என்பதைக் குறிப்பதற்காகக் கோட்டை வாயிலிற் பந்தும், பாவையும் சிலம்பும், தழையும், கழங்கும் கட்டித் தொங்க விடப்பட்டிருக்கும். இதை திருமுருகாற்றுப்படையில்:-

"செருப்புகன் றெடுத்த சேணுயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போரரு வாயில்''

என்று கூறப்பட்டுள்ளது. கோட்டையைச் சுற்றிலும் காவற் காடுகள் சூழ்ந்திருக்கும். அக்காடுகளிற் பலதிறப்பட்ட தாமே இயங்கும் பொறிகள் (Automatic traps and mines) நாட்டப்பட்டிருக்கும். இவ்வாறு பகைவர் தம் நகரை நெருங்க இயலாதபடி பலவகைக் காவல்களை நம் முன்னோர் அமைத்திருந்தனர்.

அக்காலத்தில் பறக்கும் விமானங்கள் இருந்தன என்பதையும், அவற்றில் இவர்ந்து பொருவதுமுண்டு என்பதையும், அவ்விமானங்களையும் அடித்துக் கீழ் இறக்கவல்ல ஆற்றலைப் பண்டைத்தமிழர் பயின்றிருந்தனர் என்பதையும் தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியனது வரலாற்றிலிருந்து நாம் அறியலாம். ஆங்கிலத்தில் (Flying Fortress) என்பதைத் தமிழ் மக்கள் தூங்கெயில் என வழங்கினர். இத்தகைய எயில்கள் மூன்றை ஒரு சோழன் எறிந்து வீழ்த்திய தாகப் புறநானூறு 39-வது பாடலாலும், சிலப்பதிகாரம் அம்மானைப் பாடல்களாலும் நாம் அறிகின்றோம். அவ்வரிய செயலைப் போற்றியே அவன் கையில் தொடியணிந்து சிறப்பிக்கப்பட்டான் போலும். நாம் இப்பொழுது ஆகாயக் கப்பல் என்று கூறுவதைத் தீந்தமிழில் வானவூர்தி என்று வழங்கினர். ஆகாயக்கப்பலோட்டியை (Air Pilot) வானவூர்தி வலவன் என்று வழங்கினர். (புறநானூறு 27 பார்க்க) இவ்வளவு ஏற்றமும், உயர்வும், அறிவும், திறனும், ஆற்றலும், பண்பாடும், அமைந்த நம் மூதாதையரின் திறங்களை நாம் எண்ணுதிருப்பது இழுக்கேயன்றோ!

பலவகைப் படைக்கலங்களிற் பயின்று தேர்ச்சி பெற்றிருந்ததன்றி மற்போர் புரிவதிலும் தமிழ் மக்கள் வல்லுநராயிருந்தனர். போர்க்களத்திற் படைக் கலங்களையெல்லாம் இழந்துநிற்கும் வீரர் தம் இரு தோளின் வலிமையுங்கொண்டு, தயிரைக் கடையும் மத்தினைப்போலச் சுழன்று திரிந்து பெரும்போர் விளைப்பர். இதை எருமைமறம் என்று நம் முன்னோர் வழங்கினர். ஆங்கிலத்தில் Boxing அல்லது Wrestling என்னப்படும் குத்துச்சண்டை அல்லது மற்போரிலும் தமிழர் கைதேர்ந்தவர்களாயிருந்தனர் பெருநற்கிள்ளி என்னும் சோழவரசன் ஆமூர் மல்லனைப் பொருது அட்டு நின்ற செய்தி புறநானூறு 80-வது பாடலிற் காணலாம். இவ்வாறு ஒவ்வொருவருடைய ஆற்றலையும் வன்மையையும் காட்டுவதற்காக நடத்தப்படும் மற்போர்கள் ஒரு பேரவையின் முன்னிலையில் நிகழ்வனவாகும். ஆங்கிலத்தில் Umpires

என்று சொல்லப்படுகிறவர்களே இப்போர் அவையத்தார் ஆவர். இத்தகைய போரவையின் முன்னர்ப்பொருது வென்றதால் தான் இச்சோழவரசன் போரவைக்கோ பெருநற்கிள்ளி என்று அழைக்கப்பட்டான்போலும். இவ்வித மற்போரைக் குறித்து ஒரு சுவையுள்ள செய்தி அகநானூற்றிற் குறிக்கப்படுகின்றது.

கணையன் என்பவன் வடநாட்டிலிருந்து ஆரியப் பொருநன் என்னும் ஒரு மல்லனை வரவழைத்து, உடல் வன்மையைக் கண்டு வியந்துகொண்டாடினன். பாணன் என்பவன் ஒரு தமிழ் வீரன். அகன்ற மார்பும் உயர்ந்த தோள்களும் படைத்தவன். பெருமிதங்கொண்டிருந்த ஆரியப்பொருநன் பாணனை மற்போர்செய்ய அறைகூவினன். பாணன் தன் தோள்களை எவ்வளவு இறுகப் பற்றிப்பிடிப்பினும் தான் திமிறிக்கொண்டு வெளிவரலாம் என்று வீரமொழி புகன்றன். அவ்விதமே, கணையன் முன்னிலையில் இப்போர் நடக்கலுற்றது. பாணன் ஆரியப்பொருநனின் தோள்களைத் தன் இரு கைகளாலும் மார்போடு இருக்கிப் பிணித்துக்கொண்டான். ஆரியப்பொருநன் தன் முழு பலத்தையும் செலுத்தி முயன்று வெளிவந்தான். எவ்விதம்? பாணன் பிடித்த பிடி நெகிழ்க்கவில்லை. ஆரியப் பொருநன் அவன் எதிரிற் கீழே இரு தோளும் அற்று வீழ்ந்து கிடந்தான். அவன் தோள் இரண்டும் பாணனது பிடியிலேயே பொருந்தியிருந்தன. பொருநன் விசையாய் இழுத்துத் தன் வலியைக் காட்டவும், அவன் தோள்கள் பிய்த்துக் கொண்டுவிட்டன தோளற்ற அவனது உடல் தரையில் விழுந்து துடித்தது. அதைக் கண்டு கணையன் நாணித்தலைகுனிந்தான். பாணனது பிடி உடம்பையும் முதலையையும் வென்று விட்டதென்றே சொல்லலாம்:-

"பாணன், மல்லடு மார்பின் வலியுற வருந்தி
எதிர்தலைக் கொண்ட ஆரியப் பொருநன்
நிறைத்திரள் முழவுத்தோள் கையகத் தொழிந்த

திறன்வேறு கிடக்கை நோக்கி நற்போர்க்
கணையன் நாணி யாங்கு" (அகநானூறு—386)

இளம் பருவத்திலிருந்தே தமிழ் மக்கள் இத்தகைய போர்த் தொழில்களைப் பயின்று வருவார்கள். ஒவ்வோர் ஊரின் மன்றத்திலும் போர்க்களம் அமைக்கப் பட்டிருக்கும். அது மரநிழலின்கண் மணல் நிறைத்து வனப்புற அமையப் பெறும். அதை இப்பொழுது கோதாக்குழி என்றும், ஆங்கிலத்தில் Arena என்றும் கூறுகின்றனர். இங்குப் போர் அவையத்தாரின் முன்னிலையில் பயிற்சிகள் நடைபெறும். பயிலும் பொழுதுகூடப் பெருஞ்சினமும் மறமும்காட்டி வெங்காட்டாது முனைந்து நிற்பர் என்பதை,

"நீனிற விசும்பின் வலனேர்பு திரிதரு
நாண்மீன் விராய கோண்மீன் போல
மலர்தலை மன்றத்துப் பலருடன் குழீஇக்
கையினுங் கலத்தினு மெய்யுறத் தீண்டிப்
பெருஞ்சினத்தாற் புறக்கொடாஅ
திருஞ்செருவி னிகன்மொய்ம்பினோர்."

என்ற பட்டினப்பாலையின் கட்டுரைகொண்டு திட்டமாய்க் கூறலாம்.

வானம் துளங்கினும் மானம் குலையாத வீரத்தமிழரின் போரின் திறத்தை இன்னும் விரிப்பிற் பெருகுமென்றஞ்சி இதோடு நிறுத்தப்பட்டது. தமிழ் மக்கள் போரெனிற் பொருக்கெனப் பொருமியழும் பேதையரல்லர். "ஒருவனை யொருவன் அடுதலும் தொலைதலும், புதுவதன்றிவ் வுலகத் தியற்கை" என்னும் உண்மையே தம் வாழ்க்கையின் தத்துவமாகக் கொண்டிருந்தனர். "களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே" என்று போர்த் தொழிலைத் தம்வாழ்க்கையின் கடமையாகக் கொண்டிருந்தனர். இப்பெருந்தாய மெய்திய தற்காலத் தமிழ் மக்கள் கூற்றுடன்று மேல் வரினும் குலையாதவுள்ளத்தராய்த் தளராத் தகைமையுடன் தாளாண்மை மிக்குத் தழைத்திடுவாராக.

ஆங்கிலத்தில் "A sound mind in a sound body" என்று சொல்வார்கள். ஒருவனுடைய மதிநலம் அவனது உடல் நலனைப் பொறுத்தே அமையும். நலிந்து மெலிந்த யாக்கையினுள்ளே அறிவு சிறந்து பொலிவெய்துதல் கூடாததேயாகும். இதைத் தற்கால மாணவர்கள் கவனிக்கவேண்டியது மிகவும் அவசியம். இரவும் பகலும் பரீட்சை என்னும் அரக்கன் அவர்களைப் பாழ்படுத்தி வருகிறான். ஊணுறக்கமின்றி உடல் நலங்குன்ற மாணவர்கள் உழைத்துப் படிக்கிறார்கள். அதனிடையே சற்று உடற் பயிற்சியையும் அவர்கள் உழைத்துச்செய்து வந்தார்களானால், பின்னால் நலம் அடைவர்; நாடும் நல்ல நிலைமையெய்தும். குழிந்த கண்ணும் குடுக்கைக் கன்னமும் ஒழிந்து முகத்தில் ஒளி உண்டாகும். முகத்தில் ஒளி வீசவும், அகத்தினொளி தானே கிளர்ந்தெழும். ஒரு நாட்டு மைந்தர் திணிதோள் வீரராய் இருப்பாராயின் அந்நாட்டில் அடிமைத்திறம் அறவே மறைந்தொழியும் என்பது திண்ணம்.

# 3. புறநானூறும் புலவரும்.

## தோற்றுவாய்;

சங்க இலக்கியத்துள் தலைசிறந்து விளங்கும் புறநானூறு என்னும் தொகைநூல் நானூறு பாடல்கள் கொண்டது. அவற்றுள் இரண்டு பாடல்கள் முற்றிலும் கிடைக்கப்படாது செல்லரித்துப் போயின. நாற்பத்துநான்கு பாடல்களில் ஒரு சீர் முதல் பல வரிகள்வரை உருத்தெரியாது சிதைந்து காணப்படுகின்றன. இப்பாடல்கள் நூற்று நாற்பத் தேழுக்குக் குறையாத புலவர்களால் பாடப்பட்டுள்ளன. பாடிய புலவர்களின் எண்ணிக்கையைத் திட்டவட்டமாய்த் துணிந்து கூறுவதற்கில்லை. மூலத்திலுள்ள பாடபேதத் தினால் சில புலவர்களின் பெயர்கள் பலவாறாகக் கொள்ளப் படுகின்றன. எடுத்துக்காட்டாக மாங்குடி கிழாரும் மாங்குடி மருதனும் ஒரே புலவர் என்றும், வெவ்வேறானவர் என்றும் இருவகையாகக் கூறப்படும். சிறுவெண்டேரையாரும், ஐயாதிச் சிறுவெண்டேரையாரும் ஒருவரா அல்லது இருவரா என்று துணியக்கூடவில்லை. பதினான்கு பாடல்களுக்கு ஆசிரியர் பெயர் காணப்படவில்லை.

இப்புலவர்களில் பதினான்கு பேர் அரசர்களாயும் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களாயும் காணப்படுகின்றனர். பதினைந்து பேர் பெண் புலவர்கள். புறநானூற்றுப் புலவர் களில் மிகுதியான பாடல்களை இங்குப் பாடியுள்ளவர் பெண் புலவர்களிற் சிறந்து விளங்கிய ஒளவையாரேயாவர். அவர் பாடியதாக முப்பத்துமூன்று பாடல்கள் புறநானூற்றில் காணப்படும். குறக் குலத்தும், குயக் குலத்தும், எயினக் குலத்தும் கவிபாடும் புலமைத் திறம்பெற்ற பெண்கள் தோன்றியுள்ளனர் என்று அறியும் நாம் அக்காலக் கல்வியின் பரப்பைக்கண்டு வியப்பெய்தாமலிருத்தல் முடியாது. கல்விச் செல்வமானது ஒரு பாலாருக்கும் ஒரு குலத்தினருக்கும்

என்று ஒதுக்கப்படாது யாவராலும் விரும்பிப் போற்றப் பட்டது. பெண்கள் கல்வி பூத்துப் பேரறிவுடையவர் களாய்த் திகழ்ந்தனர். பெண் புலவர்களை அரசர்களும் வியந்து பாராட்டித் தம் அரசவையில் அமர்த்திக்கொண்டனர். அரசர்களிடையே சந்து செய்விப்பதற்கும் தூது செல்வதற் கும் பெண் புலவர்கள் துணிந்து முன் வந்தனர் என்றால் பண்டைத் தமிழ்ப் பெண்களின் பெருமையைப் பற்றி வேறென் சொல்வது!

புறநானூற்றுப் புலவர்களிற் பலர் ஏனைச் சங்க நூல் களிலும் பாடல்கள் பாடியுள்ளார்கள். ஆனால் புற நானூற்றில் மட்டும் பாடியதாக அறுபத்தாறு புலவர்கள் காணப்படுகின்றனர். ஆகையால் இந்நூல் இல்லையேல் இவ்வறுபத்தாறு புலவர்களின் பெயரைக்கூட நாம் தெரிந்து கொள்வது அரிதாயிருந்திருக்கும். இன்னும் சில புலவர்களு டைய இயற்பெயர் இன்னதென்று நாம் தெரிந்துகொள்ளாத நிலையில் அவர்கள் பாடிய பாடல்களிற் காணப்படும் யாதானும் ஒரு சொற்றொடரால் அழைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் புறநானூற்றில் இரும்பிடர்த்தலையார், கூகைக் கோழியார், தொடித்தலைவிழுத்தண்டினார் என்னும் மூவரா வர். சிலபுலவர்கள் கபிலர், பரணர், ஔவையார் போன்று, தம் இயற் பெயரோடு விளங்கினும் எஞ்சியோர் ஊராலும், உறுப்பாலும், தொழிலாலும், மரபாலும் தந்தை பெயர் அடையடுத்தும், பல்வேறாகப் பெயர் பூண்டுள்ளனர். அவர்கள் புலவர்களாய் விளங்கியதோடு, தம் தொழிலையும் நடத்தி வந்ததாகத் தெரிகிறது. ஆசிரியன், ஆசான், பொற் கொல்லன் காவிதி, மருத்துவன், ஓதல், ஓலைக்கடை, பொன் வாணிகன், கணக்காயன் கணியன், காவற்பெண்டு, உழவர், வண்ணக்கன் கூலவாணிகன், அறுவை வாணிகன் குயத்தி, தமிழ்க்கூத்தன் முதலிய பதங்கள் அவர்கள் பெயர்களோடு ஒட்டி வழங்கப்படுவதால், அவர்கள் கைக்கொண்டிருந்த தொழில்களிற் சிலவற்றை நாம் எளிதில் தெரிந்துகொள் ளலாம். ஊன் பொதி பசுங்குடையார், பக்குடுக்கை நன்

கணியார் முதலிய புலவர்கள் தம் இயற்பெயர்கள் மறைந்து போம் வகையில் இக்காரணப் பெயர்களால் வழங்கப்பட்டு வந்தனர் போலும்!

**பரந்த உள்ளம்:**

தொன்னலம் வாய்ந்த இன்னிசைப் புலவர்கள் கல்வியிற் சிறந்த கவிவாணர்கள். "யாதும் ஊரே யாவருங் கேளிர்" என்ற பரந்த நோக்குடையவர்களாய்ப் பல நாடுகளுக்கும் சுற்றித் திரிந்து இயற்கைப் பொருள்களையும் உலகியற் பொருள்களையும் நுனித்தறிந்து அவற்றைத் தாம் பாடிய செய்யுள்களில் நன்கு விளங்கவைத்துள்ளார்கள். புறநானூற்றுப் பாடல்களிற் பலவும் அவ்வச்சமயத்தில் எதிர் பாராது உடனுக்குடன் பாடப்பட்டவை. தமிழ் நாட்டுப் பழைய வரலாற்றுக் குறிப்புக்கள் பலவும் புறநானூற்றி லிருந்தே நமக்கு இப்பொழுது கிடைக்கக் கூடியனவாகும். அவைகள் அரசர் முன்னிலையில் நேர்முகமாக நடந்த பல நிகழ்ச்சிகளைக் குறித்துப் பாடப்பட்டவையாதலால் அவை முற்றிலும் உண்மையென்று நாம் ஐயமறக் கொள்ளலாம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழ் நாட்டில் மக்கள் கொண்டுள்ள வாழ்க்கை நிலையும், பழக்க வழக்கங்களும், நாகரிகமும், பண்பாடும், போர்ச் செய்திகளும், அரசியல் வாழ்க்கையும், ஆடவர் ஆற்றலும், பெண்டிர் பெருமையும் நாம் எளிதில் தெரிந்து கொள்வதற்குப் பெருந்துணையாயிருப் பது புறநானூறேயாகும்.

புறநானூற்றுப் புலவர்கள் எல்லாரும் தொல்லிசை படைத்த நல்லிசைப் புலமையோராவர். இவர்கள் முச்சங் கங்களுமிருந்து தமிழ் ஆராய்ந்த காலவெல்லைக்குள் தமிழ் நாட்டில் ஆங்காங்கு அவ்வப்போது தோன்றி வாழ்ந்ததாகத் தெரிகிறது இந்நூலில் இரண்டாவது பாடல் பாடிய முரஞ்சியூர் முடிநாகராயர் முதற் சங்கத்தில் வீற்றிருந்ததாக இறையனார் அகப்பொருள் உரையால் அறியலாம். ஆழ்ந்த

கருத்துக்களை இனிய தமிழ்நடையில் தெளிவாகப் பாடும் ஆற்றல் மிக்க இப்புலவர்களின் கவிகள் கற்குந்தோறும் அறிவைப் பெருக்கும் சுவைக்கேணிகள். அவை சொல்லணிச் சிக்கல்கள் சிறிதுமின்றி அணிகளுக்கு அன்னையாம் உவமை நயமே சிறந்து விளங்கக் குறிப்பிற் பொருள் தரும் வனப் பெய்திக் கற்போர் மனதைக் கனிவிப்பனவாகும்.

இப்புலவர் ஒருவரைப் புகழ்ந்து கவிபாடுவது மட்டுமல்லாமல் வசைபாடுவதிலும் சிறந்தவர்கள். ஆரிடப்போலி பாட்டியதிற் சிறப்பாகக் கூறப்படும் புலவர்களுள் பெருஞ்சித்திரனாரும் ஒருவர் என்று யாப்பருங்கலவிருத்தி உரையால் அறியலாம். அன்னார் பாடிய பாடல்கள் பாடிய பொருளைப் பயந்தேவிடும் திறம் வாய்ந்த தெய்வப் பாடல்கள் என்பதை நாம் அகச்சான்று கொண்டே நிலைபெறச் செய்யலாம். பாரி மகளிரைக் கொண்டு சென்று மணம் வேண்டிய கபிலர், தம்மை இருங்கோவேள் இகழ்ந்தமை பொறாது, கனன்று, "அரசே! உனது அரையம் அழிந்ததற்குக் காரணம் உன் முன்னோர்களில் ஒருவன் கழாஅத்தலையார் என்னும் புலவரை இகழ்ந்ததேயாகும். அவ்வறிவிலிபோல் நீயும் இப்பொழுது என்னை இகழ்ந்தனை. நீ வாழ்வாயாக!" என்று வெறுத்துக் கூறியுள்ளார்:-

"கோடிபல அடுக்கிய பொருள்நுமக் குதவிய
நீடுநிலை [1]யரையத்துக் கேடுங் கேளினி;
நுந்தை தாயம் நிறைவுற வெய்திய
[2]ஒலியற் கண்ணிப் புலிகடி மாஅல்!
நும்போல் அறிவில் நுமருள் ஒருவன்
புகழ்ந்த செய்யுட் [3]கழாஅத் தலையை
இகழ்ந்ததன் பயனே இயல்தேர் அண்ணல்"

(புறநானூறு—202).

---

1. 'அரையம்' என்பது ஓர் ஊர்.
2. ஒலியல்-தழைத்தலையுடைய.
3. கழாஅத்தலை என்றது, கழாஅத்தலையார் என்னும் புலவரை.

இத் தெய்வப் புலவர்களின் வாக்குத் தப்பாதாகலின், கழா அத்தலையாரின் வசைப்பாடலால் செல்வம் நிறைந்த அரையமும் சிதைந்தொழிந்தது. ஆகையால் இச் சொல்லேருழவர்களைப் பகைத்துக்கொள்ளுதல் அறிவின்மையேயாகும் என்று கபிலர் இடித்துக் கூறியுள்ளார்.

ஒற்றுமை :

இப்புலவர் பெருமக்களிடையே திகழ்ந்த குணப்பண்புகளுள் சிறப்பாக நாம் நோக்கத்தக்கது அழுக்காறின்மை. ஒருவரையொருவர் நன்கு தெரிந்து, பிறர் நலத்தைத் தயங்காது வெளியிட்டுக் கூறுவதற்கு அவர்கள் அஞ்சியதில்லை. பிறர் பெருமையைத் தெரிந்து கூறினால் எங்கே தன் பெருமை குன்றுமோ என்று மனம் குலைந்து புழுங்கிச் சாம்பியதில்லை. பிறர் பெருமையைச் சிறப்பித்துக் கூறித் தம் பெருமையைப் பெருக்கிக்கொண்டனர் என்றே சொல்லலாம். மேற்செய்யுளில் கபிலர் கழாஅத்தலையாரைப், "புகழ்ந்த செய்யுட் கழா அத்தலையை" என்று சிறப்பித்துள்ளார். ஆனால் கபிலர் எத்தகைய புலவர் என்பதை நோக்குவோம் பொருந்தில் இளங்கீரனார் என்பவர் ஒரு சிறந்த புலவர். இன்றும் சொற்பொழிவாளர்கள் விரும்பிக் கையாளும் சொற்றொடராகிய "விரிப்பின் அகலும் தொகுப்பின் எஞ்சும்" என்னும் அருமை மொழியை நமக்கு வழங்கிய அருப்புலவர் அவரேயாவர். அத்தகைய செம்மொழியாளர் மற்றொரு புலவரான கபிலரை,

"*செறுத்த செய்யுட் செய்செந் நாவின்
வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்"

என்று பாராட்டியுள்ளார். கபிலராற் சிறப்பித்துப் பாடப்பட்ட திருமுடிக்காரியை மாறோக்கத்து நப்பசலையார் என்னும் பெண் புலவரும் பாடநேர்ந்தது. அப்பொழுது அவ்வம்மை

* செறுத்த - பல பொருளையும் அடக்கிய.

யார், "அரசே! மாசற்ற அறிஞனாகிய கபிலன் இனிப் பாடுநர்க்கு இடமில்லாதவாறு, பரந்து புகழ் நிற்க நின்னைப் பாடியுள்ளான். அதன்பின் யான் நின்னை எவ்வாறு பாட வல்லேன்? சேரமன்னனின் மரக்கலத்தால் காவல்பூண்ட மேலைக்கடலினுள் வேறொரு மரக்கலம் நுழையவுங் கூடுமோ? ஆயினும், என் வறுமையின் கொடுமையால் நின்னைப் பாடத் துணிந்தேன்" என்றபொருளில்,

"புலனழுக் கற்ற அந்த ணாளன்
இரந்துசெல் மாக்கட்கு இனியிட மின்றிப்
பரந்திசை நிற்கப் பாடினன் அதற்கொண்டு
சினமிகு தானை வானவன் குடகடற்
பொலந்தரு நாவாய் ஓட்டிய அவ்வழிப்
பிறகலஞ் செல்கலா தனையேம் அத்தை*
இன்மை துரப்ப இசைதர வந்துநின்
வண்மையிற் றொடுத்தனம் யாமே."

(புறநானூறு—126)

என்று கபிலரைப் போற்றிப் பாடுகின்றார்.

பெருஞ்சித்திரனார் என்னும் பெரும்புலவர் ஆய் என்னும் அரசனது பெருமையை எல்லாம் அடக்கி, "திருந்துமொழி மோசி பாடிய ஆயும்" என்று சுருக்கமாகக் கூறிவிடுகிறார். உறையூர் ஏணிச்சேரி முடமோசியாரை, "திருந்துமொழி மோசி" என்று சிறப்பிக்கிறார். அச்செவ்விய சீரிய மொழி படைத்த மோசியால் ஓரரசன் பாடப்பட வேண்டுமானால் அவ்வரசன் பலவகையிலும் ஓங்கிப் புகழ்படைத்த வீரமும் வண்மையும் திகழும் வள்ளலாயிருக்கவேண்டு மென்பது பெறப்படும். இன்னும், ஔவையார் கோவலூர் எறிந்து கொள்ளைப் புகழ்கொண்ட அதியமானைப் பாடும்பொழுது, 'வீர! ஒரே போரில் நீ ஏழு மாற்றரசரை முறியடித்த வன்றும் பாடுநர்க்கரியை. இன்றும் பரணர் என்னும் புலவர் ஒருவரே நின்னைப் பாடினார். அதுவும் தம் பெருமையாற்

* அத்தை, அசைச்சொல்.

பாடினார். பிறரால் நின் வெற்றியைப் பாடுதல் எளிதன்று" என்று குறித்துள்ளார்:—

" அன்றும் பாடுநர்க் கரியை இன்றும்
பரணன் பாடினன் மற்கொல் மற்றுநீ
முரண்மிகு கோவலூர் *நூறிநின்
அரண்அடு திகிரி ஏந்திய தோளே."

(புறநானூறு—99.)

இதனால் பரணரிடத்து ஔவையார் கொண்டுள்ள நன் மதிப்பு நன்கு விளங்கும். இவ்வாறு பண்டைப் புலவர் களிடையே இயல்பான அன்பும் நட்பும் வாய்மையும் இனி தமைந்து, அழுக்காறு அறவே கடிந்தொதுக்கப்பட்டது. அதன் பயனால் தமிழ்மொழியும் தழைத்தோங்கியது.

மதிப்பு:

இத்தகைய புலவர்களின் நன்மதிப்பையும், அன்பையும், உரையையும், பாட்டையும் பெறவேண்டி அக்காலத் தமிழர சர்கள் ஒருவரையொருவர் ஏறட்டுக்கொண்டு, அரும்பாடு பட்டனர். அப்புலவர்களின் உறவு தமக்குக் கிடைப்பதே பெரும்பேறு என்றும், அவர்கள் தம்மைப் புகழ்ந்து பாடும் வகையில் தாம் நடந்துகொள்வதே தம் வாழ்க்கையின் குறிக்கோள் என்றும் தமிழ் அரசர் கருதி வந்தனர். வீரம் காட்டி அரிதிற்பெற்ற பொருளை ஈரம் காட்டி எளிதினளிக்கும் பேரரசர்களையே இப்புலவர்கள் சிறப்பித்துப் பாடும் இயல் புடையோர். ஆதலால் தமிழ் மன்னர் வீரமும் வண்மையுமே தம் பூணாகப் பூண்டு புலவர் பாடலையே அதன் பயனாகத் துய்த்து வான்புக ழெய்தினர். தம்மையும் தம் நாட்டையும் புலவர்கள் புகழ்ந்து பாடும் வகையில் அரசர் நடக்க முயன் றனர். மதுரைக் காஞ்சியின் தலைவனான தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்னும் பாண்டியன், "நான் என் பகைவரை முறியடித்துப் புகழ் சூடத் தவறுவேனேல், ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி

நூறி - அழித்து.

மாங்குடி மருதனைத் தலைமையாகக்கொண்டு, உலகுள்ளளவும் மாயாப் புகழ்படைத்த புலவோர் என் நாட்டினைப் புகழ்ந்து பாடாது கழிவதாக!" என்று வஞ்சினங் கூறுகிருன். பண்டைத் தமிழ்ப் புலவர்களின் புகழ் உலகுள்ளளவும் அழியாது நின்று பலராலும் ஏத்தப்படுமென்று இருபது நூற்றுண்டுகளுக்கு முன்னிருந்த நெடுஞ்செழியன் கூறியது இன்றும் உண்மையாய் நாம் காண விளங்குகின்றது. என்றும் அப்புலவர் புகழ் நின்று நிலவும் என்பதில் ஐய மில்லை. அப்பெற்றியராய புலவர்களாற் பாடப்பட்டோர் இம்மை யின்பம் எய்துவதன்றி மறுமைக்கண்ணும் துறக்க வின்பம் அடைவர் என்பது,

"புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவன் ஏவா வான வூர்தி
எய்துப என்பதஞ் செய்வினை முடித்தென"
(புறநானூறு—27.)

என்னும் முதுகண்ணன் சாத்தனார் வாக்கால் அறியலாம்.

செந்நெறி:

இப்புலவர்களிற் பலர் வறுமையால் வாடிய வாழ்க்கைய ரேனும், தம் வயிற்றை வளர்ப்பதற்காக யாரையும் பாடித் தம் புலமையை விற்றோரல்லர். வீர மன்னரைப் புகழ்ந்தனர்; வீரமற்றோரை இகழ்ந்தனர். அறனழியச் செய்வோரையும் அவர் வழிவழித் தோன்றல்களையும் துகளாக மதித்துத் தூவென்று வெறுத்தனர். இளங்கண்டீரக்கோவும் இள விச்சிக்கோவும் ஒருங்கிருந்தவழிச்சென்ற பெருந்தலைச் சாத்த னார் என்னும் புலவர் இளங்கண்டீரக்கோவைப் புல்லி இள விச்சிக்கோவைப் புல்லாராக, ஏன் அவ்வாறு செய்தீர் என்று வினவியபொழுது, "இளவிச்சிக்கோ பெண் கொலை புரிந்த நன்னன் மரபிலே தோன்றியவன்; அதுவுமன்றி, செந்தமிழ்ப் புலவர்களைப் பேணுத சிறுமையோன். ஆதலின் என்போன்ற புலவர்கள் அவனது விச்சிமலையைப் பாடாது நீங்கினர்.

ஆகையால் யான் அவனை மதிப்பதில்லை" என்று கூறியதாக, புறநானூறு 151-வது பாடல் தெரிவிக்கிறது. இதனால் அக் காலப் புலவர்கள் அரசர்களை மார்புறத் தழுவி மகிழ்ந்துற வாடினர் என்பதும், பழியுடை மன்னரைப் பதரென ஒதுக் கினர் என்பதும் அறியலாம்.

இப்புலவர் பெருமக்கள் பருத்திவேலிச் சீறூர் மன்னரை யும், யானை யெருத்தத் திலங்கும் முடிகெழு வேந்தரையும் ஒன்றாகவே கருதி யொழுகினர். யாவராயினும், உண்மையைக் கண்டு உரைத்தனர்; வண்மையைக்கண்டு வாழ்த்தினர்; வெண்மையைக்கண்டு வெறுத்தனர். வன்பரணர் என்னும் புலவர் கண்டீரக் கோப்பெருநள்ளியின் மாறுது வழங்கும் கொடையைக்கண்டு வியந்து, அவனிடம், 'வள்ளால்! நீ பரி சிலர்க்கு மனத்தானமர்ந்து இனிதளிக்கும் கொடையைக் கண்டு எம்முடைய சிறிய செவ்விய நாவானது பிற மன்னர் களைப் பாடுதல் அறியாததாயிற்று" என்று மகிழ்ந்து கூறும் பாடல்:-

"இறங்குமிசை யருவிய பிறங்குமலை நள்ளிநின்
அசைவில் நோன்றாள் நசைவளன் ஏத்தி
நாடொறு நன்கலங் களிற்றொடு கொணர்ந்து
[1]கூடுவிளங்கு வியனகர்ப் பரிசின்முற் றளிப்பப்
பீடின் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச்
செய்யா கூறிக் கிளத்தல்
[2]எய்யா தாகின்றெஞ் சிறுசெந் நாவே."

(புறநானூறு—148).

இங்கு வன்பரணர், தம்முடைய நாவானது பொய் கூறா தாகலின், 'செந்நா' என்றும், தற்புகழ்ந்தாராகா திருத்தல் பொருட்டுச் 'சிறு செந்நா' என்றும் பாடிய நயம் அறிந்து மகிழற்பாலது. பிறர்க்கீயும் பெருமையில்லாத அரசரைப் 'பீடில் மன்னர்' என்று குறித்து, அன்னவரைத் தம்முடைய

1. கூடு - நெல்கூடு.
2. எய்யாதாகின்று - அறியாததாயிற்று.

நாவானது பாடியதில்லை என்று பெருமிதமெய்துகின்றார். இவ் வன்பரணர் வாக்கோடு திருந்துமொழி மோசியின் கூற்றும் ஒப்பிடற்பாலது;-

"பெரிய ஓதினுஞ் சிறிய உணராப்
பீடின்று பெருகிய திருவிற்
பாடின் மன்னரைப் பாடன்மா ரெமரே."
(புறநானூறு—375)

இவ்வாறு மோசியார் திண்ணமாய்க் கூறுவதால், அவர் தம்மோடு பயின்றுவந்த ஏனைப்புலவர்களும் பெருமையில்லாத மன்னரைப்புகழ்ந்து பாட மாட்டார்கள் என்பதை நன்குணர்ந்திருந்தனர் என்று கொள்ளலாம். "வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன் மெய்கூறுவல்" என்பது மருதனிள நாகனாரின் மாண்பு மொழி.

பண்டைப் புலவர்கள், சிற்றரசர்கள் வேளிர்களாயினும், வள்ளல்களாயுள்ளவர்களை வாயார வாழ்த்தி, முடிவேந்தராயினும் ஈயாதோரை நாணச் செய்து தமிழ்நாட்டில் விளங்கினர் என்பதை,

"வையக வரைப்பில் தமிழகங் கேட்பப்
பொய்யாச் செந்நா நெளிய ஏத்திப்
பாடுப வென்ப பரிசிலர் நாளும்
ஈயா மன்னர் நாண
வீயாது பரந்தநின் வசையில்வான் புகழே."
(புறநானூறு—168).

என்ற பிட்டங் கொற்றனைக் குறித்த அடிகளால் நாம் எளிதினுணரலாகும். மோசியார், வேள் ஆயை நெடுங்காலம் அறியாதிருந்து பின் அவனது நட்பு உண்டாய காலத்துத் தாம் அவனைத் தெரிந்துகொள்வதற்குமுன் சென்ற காலமெல்லாம் வறிதே கழிந்ததே என்று வருந்திப் பாடியுள்ளது யாவரும் அறிதற்கொன்றாகும்:-

"முன்னுள்ளுவோனைப் பின்னுள்ளினேனே
ஆழ்கென் னுள்ளம் போழ்கென் னாவே
பாழூர்க் கிணற்றின் தூர்கவென் செவியே."
(புறநானூறு—134).

என்பதில் ஆயினிடத்தில் மோசியார் கண்ட குணச்சிறப்புக் களின் பயனாக, அவன்மீது தாம் கொண்ட அன்பின் பெருக்கே இங்குக் கவிப்பெருக்காய் ஓடுவதை யாவரும் அறியலாம்.

**தன்மானம்:**

இப்புலவர்கள், இன்மையால் இடருழந்து வாடிய இடத்தும், தன் மானம்கெட வரும் வாழ்க்கையைக் கைக்கொண்டிலர். உயரிய எண்ணங்களை விழுமிதின் நுவன்று, ஓங்கி யெழுந்த தணியா உள்ளத்தராய் முற்றிய திருவின் மூவராயினும் பெட்பின்றீதலைத் தாம் வேண்டா ஆண்மையராய் அன்னார் விளங்கினர். "பெரிதே யுலகம் பேணுநர் பலரே" என்ற உறுதி படைத்த உள்ள வெறுக்கையர். அதியமான் நெடுமானஞ்சி பரிசில் நீட்டித்தவழி ஔவையார்,

"தன்னறி யலன்கொல் என்னறி யலன்கொல்
அறிவும் புகழு முடையோர் மாய்ந்தென
[1] வறுந்தலை யுலகமு மன்றே அதனால்
[2] காவினெம் கலனே சுருக்கினெம் [3] கலப்பை
மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத் தற்றே
எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே."
(புறநானூறு—206).

---

1. வறுந்தலை - வறிய இடம்.
2. காவினெம் - தோளில் தூக்கினேம்.
3. கலப்பை - கலங்களையுடைய பை.

என்று கூறி வெளியேறினர். இப்புலவர்கள் தம் வரிசை யறிந்து தரும் பரிசிலைச் சிந்தையாலுந் தொடாச் செம்மைக் குணத்தோர். உள்ளங் குளிர உவந்தெதிர்கொண்டு அகங்க வாரா முகனமர் பரிசில் உதறி யெறிந்து, பெருஞ்சித்திரனார்,

காணா தீத்த இப்பொருட் கியானோர்
வாணிகப் பரிசில னல்லேன் பேணித்
தினையனைத் தாயினும் இனிதவர்
துணையள வறிந்து நல்கினர் விடினே.'

(புறநானூறு—208).

என்று அதியமான் நெடுமானஞ்சியை நீங்கிச் சென்றதாக நாம் படிக்கிறோம்.

இப்புலவர்கள் இரவலர் வாழ்க்கையைப் பூண்டு அரசர்களின் கைவண்மையை எதிர்நோக்கி வாழ்ந்தனரேனும், அவ்வரசர்களின் முன்னிலையில் அஞ்சி யொடுங்கி அவலமுற்றழிந்தறியார். தம்மைக் காக்கும் வள்ளல்களாயினும் அரசர்களைப் புலவோர் தம் நண்பர்களாகவே கொண்டு, உயர்வு தாழ்வெனும் யாதொரு வேற்றுமையுமின்றி அளவளாவி மகிழ்ந்தனர். அரசர்களும் அப் புலவர்களுக்குரிய பூசனையைப் புரிந்து தர்முடன் வைத்துப் போற்றிப் பரிவு காட்டினர். முரசு கட்டிலில் துயின்ற மோசிகீரன் என்னும் புலவருக்குச் சேரவரசன் விசிறிகொண்டு வீசிப் புகழ்படைத்தது யாவரும் அறிந்ததே. அரசர் கோயிலைத் தமக்குரிய வீடாகவே மதித்துப் புலவர்கள் இனிது பழகிவந்தனர். மாற்றரசர் அஞ்சி யொடுங்கிக் குலைநடுங்கும் அத்தாணி மண்டபத்தின்கண் தமிழ்ப் புலவோர் பெருமிதத்துடன் அண்ணாந்து தலை நிமிர்ந்து போவதும் வருவதுமாய் இருப்பர். சேரமான் குட்டுவன் கோதையின் மண்டபத்தினுள் தாமும் ஏனைப் புலவர்களும் பழகியிருந்த தன்மையை மாடலன் மதுரைக் குமரன் என்னும் புலவர்,

"எங்கோன் இருந்த கம்பலை மூதூர்
உடையோர் போல இடையின்று குறுகிச்
[1]செம்மல் நாளவை அண்ணாந்து புகுதல்
[2]எம்மன வாழ்க்கை இரவலர்க் கெளிதே."
(புறநானூறு—54).

என்று பாடியுள்ளார்.

பீடு நடை :

பண்டைப் புலவர்களின் ஏறுபோன்ற பீடு நடையை நாம் என்றும் மறத்தல் கூடாது. இவர்களுக்கு இவ்வகைப் பெருமிதம் எவ்வாறு வந்தது? அவர்கள் கற்ற கல்வி யினாலேதான் வந்தது சோழன் நலங்கிள்ளியுழை நின்று உறையூர் புகுந்த இளந்தத்தன் என்னும் புலவனைக் காரி யாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி ஒற்று வந்தா னென்று கொல்லப் புக்குழி, கோவூர்கிழார் என்னும் புலவர் குறுக் கிட்டு, "அரசே! புலவர்களது வாழ்க்கை பிறர்க்குத் தீங்கு செய்வதொன்றன்று; ஊர் பல கடந்து நெடுந்தூரம் சென்று உதவியாளர்களாக விளங்கும் அரசர்களை நாடியிருந்து, பரிசில் பெற்று, சுற்றம் பேணிப், பிறர்க்கும் ஈந்து தாமும் உண்டு மகிழ்வர். இன்னும், அவர்கள் தம்போன்ற புலவர்களைக் கல்வியான் வாதாடி வென்று, தலையெடுத்து நடந்து நிலமாளும் அரசர்கள் போலத் தலைமையும் எய்துவர், ஆகையால் இக்குற்றமற்ற புலவர்களில் ஒருவரான இளந் தத்தன் என்னும் இவரைக் கொல்லாது விடுவாயாக!" என்று வேண்டி அப் புலவரின் உயிரைக் காப்பாற்றினதாக வரும் பாடல்:—

"வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி
நெடிய என்னாது சுரம்பல கடந்து

1. செம்மல் நாளவை - தலைமையையுடைய திருவோலக்க அரசவை.

2. எம்மன வாழ்க்கை - எம்மைப்போலும் வாழ்க்கையை யுடைய.

வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்
பெற்றது மகிழ்ந்து சுற்ற மருத்தி
ஓம்பா துண்டு கூம்பாது வீசி
[1]வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத் [2]தீதறிந் தன்றோ இன்றே, திறப்பட
நண்ணார் நாண அண்ணாந் தேகி
ஆங்கினி தொழுகி னல்லது ஓங்குபுகழ்
மண்ணாள் செல்வ மெய்திய
நும்மோ ரன்ன செம்மலு முடைத்தே."
(புறநானூறு—47)

இக் கோவூர்கிழார் தாமும் பரிசில் வாழ்நருள் ஒருவராதலின், திருந்திய நாவுடைப் புலவர்களை "வடியா நாவின் வல்லாங்குப் பாடி" என்று குறிப்பிட்டார். இவ்வழகிய பாடல் பண்டைப் புலவர்களின் வாழ்க்கையைப் படம் பிடித்தது போல் நமக்குத் தெளிவுறுத்துவதாகும். அதிலிருந்து, அவர்கள் வள்ளல்களைப் பாடிப் பரிசில் பெற்று வாழ்வோர் என்பதும், பிறர்க்குச் சிறிதும் தீங்கு விளைக்காத சீல முடையோர் என்பதும், தம்மிடையே சொற்போர் நிகழ்த்தித் தம் கல்வித்திறனைக் காட்டிப் பெருமிதம் எய்துவர் என்பதும், அரசவைகளில் அண்ணாந்து நடந்து தலைமை தாங்குவோர் என்பதும், பல விடங்களுக்கும் சுற்றியலைந்து உலகியலை நன்கு அறிந்தோர் என்பதும் புலனாகும்.

## தொண்டு:

சோழன் நலங்கிள்ளிக்கு வேண்டியவரான கோவூர்கிழார் அவனது பகைவனான நெடுங்கிள்ளிக்கும் வேண்டியவராகவே காணப்படுகிறார். நெடுங்கிள்ளி உறையூர் புக்கிருந்த காலத்தில் சோழன் நலங்கிள்ளி அவ்வூரை முற்றுகையிட்டான். அது தெரிந்த கோவூர்கிழார் ஒரு குலத்துதித்த அவ்விருவரும்

1. வரிசைக்கு - தகுதிக்கு.
2. தீதறிந்தன்றோ இன்று - கொடுமையறிந்ததோவெனின் இல்லை.

அவ்வாறு சண்டை செய்வது அக்குலத்திற்கே பெரும் பழியுண்டாகும் என்றும், ஏனை அரசர்கள் கண்டு நகை செய்வர் என்றும் கூறிச் சந்து செய்வித்தார் நலங்கிள்ளி ஆவூர் முற்றியிருந்த காலத்துப் போர் செய்யாது அச்சத்தால் அடைத்திருந்த நெடுங்கிள்ளியை நோக்கி, "நாணுத் தகவுடைத்திது காணுங்காலே." என்று இடித்துரைத்தார். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் மலையமான் மக்களை யானையின் காலால் இடறச் செய்வுழிக் கோவூர் கிழார் அதனைத் தடுத்து, புலவர்களின் வறுமைத் துன்பத்தைக் கண்டஞ்சித் தன் உடைமையை யெல்லாம் இல்லையென்னுது பகுத்துக் கொடுக்கும் பேருதவியாளனுய் விளங்கிய அம் மலையமான் மக்களின் உயிரைப் பாதுகாத்தனர் என்று புறநானூறு 46-வது பாடலால் அறியலாம். இப் பாடலில் புலவர்களைப் 'புலனுழுதுண்மார்' என்று குறித்துள்ளார். திரந்தினிது சொல்லுதல் வல்லரான கோவூர்கிழார் அரசர்களிடையே புகழ்படைத்து அவர்களுடைய நன்மதிப்பைப் பெரிதும் பெற்றிருந்ததனுல் அவர்களிடையே நிகழ்ந்த பல பூசல்களைத் தீர்த்துப் பல அரசர்களையும் நன்னெறிக்குய்த்த பெரியார் ஆவர் என்று தெரிகிறது.

பண்டைப் புலவர்கள் இளமையில் வறுமையுற்று வருந்தினரேனும், பின்னர்ப் பேருதவியாளர்களான அரசர்களையடுத்துச் செல்வத்தில் திளைத்துப் பெருவாழ்வெய்தினர் என்பதில் ஐயமில்லை தமிழையே தாய்மொழியாகக் கொண்ட தலைமையோரே அரசர்களாய் அக்காலத்து விளங்கியதனுல், அருந்தமிழும் அன்புடன் போற்றி வளர்க்கப்பட்டது. தமிழ்ப் புலவர்களும் அரசவைகளில் முதலிடம் பெற்றுப் பெருமையுடன் பொலிவெய்தினர் தமிழ் அரசர்கள் தமிழ்ப் புலவர்களைத் தங்கள் உயிரினும் மேலாகப் பூசித்து வழிபட்டனர். தம்பியால் நாடு கொள்ளப்பட்டுக் காட்டில் மறைந்திருந்த குமணனிடம் பெருந்தலைச் சாத்தனுர் என்னும் புலவர் சென்று பாடி நின்ருராக, வறியனுன அவ் வள்ளல், தன் தலையை அரிந்து தம்பி கைக் கொடுத்தால் புலவருக்குத் தக்க விலை கொடுப்பானென்று எண்ணித் தன்

உடைவாளைப் பெருந் தலைச்சாத்தனுர் கைக்கொடுத்தான். அவ் வாளைக் கொண்டு இளங் குமணற்குக்காட்டி அப் புலவர் பின்வருமாறு உள்ளம் உருகப் பாடியுள்ளார்:—

"பாடி நின்றனெ னாகக் [1]கொன்னே
பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தல்என்
நாடிழந் ததனினும் நனியின் னாதென
வாள்தந் தனனே தலையெனக் கீயத்
தன்னிற் சிறந்தது பிறிதொன் றின்மையின்
[2] ஆடுமலி யுவகையொடு வருவல்
[3] ஓடாப் பூட்கைநின் கிழமையோற் கண்டே."
(புறநானூறு—165.)

நட்பு:

நோயின்றி நெடுங்காலம் வாழும் வாழ்க்கையை அளிக்கும் நெல்லிக்கனியொன்றை அதியமான் உண்ணப் புகுந்த காலையில் அவன் நிழலுறையும் ஔவையார் அங்குத் தோன்றினர். அதியமான் அக் கனியைத் தான் உண்ணது ஔவையாரை உண்பித்துத் தான் உள்ளம் மகிழ்ந்தான். தான் வாழ்வதைவிட அத் தமிழ்ச் செல்வி நெடுங்காலம் வாழ்ந்து தமிழைப் பேணவேண்டும் என்பதே அவ் வள்ளலின் விருப்பமாகும். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனை அத் தகைசால் வேந்தனது இரக்க உள்ளத்தைப் பாராட்டி ஔவையார், "நீலமணி மிடற்றொருவன் போல மன்னுக பெரும நீயே!" என்று வாயார வாழ்த்திப் போற்றினர். தன்னுடைய ஆக்கம் கருதாமல் நஞ்சையுண்டு பல்லுயிர்களையும் காத்தருளிய நனி நாகரிகரான சிவபெருமான் சாதற்குக் காரணமாகிய நஞ்சை யுண்டும் நிலைபெற்றிருந் தாற்போல, அதியமானும் சாவாதிருக்க வேண்டும் என்ற கருத்தமைத்தே 'நீலமணி மிடற்றொருவன் போல" என்று

1 கொன்னே - பயனின்றி.

2 ஆடு மலி - வென்றி மிக்க.

3 ஓடாப்பூட்கை - பின்னிடாத மேற்கோளையுடைய.

அம்மையார் திருவாக்கு எழுந்துள்ளது. அவ்வாக்கின்படியே இந் நிலவுலகிற் பொன்றுது நிலைநிற்பதாகிய புகழ் அதியமான் சார்பில் என்றும் உளதாய்து. அவன் அவ்வாறு ஈயாது தானே அக் கனியை அருந்தியிருப்பின் அவனது ஆக்கை போல் அவன் பெயரும் மங்கியிருத்தல் கூடும்.

அதியமான் ஔவையாரிடத்தில் பேரன்பு படைத்தவன். அம் மூதறிவாட்டியின் இன்றமிழ்ப் பாடல்களுக்கு உருகி மனங்குழைந்து அருள் சுரந்தான். புதல்வரின் மழலை மொழிக்குத் தந்தையர் அருளுதல்போல், அதியமானும் தம் வாய்ச் சொல்லுக்கு அருளினுன் என்று அப்புலவரே பாடியுள்ளார். அதியமானுக்காக ஔவையார் தொண்டைமானிடத்துத் தூதுசென்று, அவனது படைக்கலக் கொட்டிலைப் புகழ்வதுபோல் அவனது வீரத்தைப் பழித்துக் கூறி அவனது செருக்கை அடக்கிய செய்தி யாவரும் நன்கறிந்ததே.

அதியமான் போரில் வேலேற்று விழுந்தபொழுது ஔவையார் மனங்கலங்கிப் பாடிய பாடல் கல்லையுங் கரைவிப்பதாகும். தன்னிடம் உள்ளது சிறிதாளுலும் அதை முழுதும் தமிழ் வாணருக்குக் கொடுத்துத்தான் வறிதிருப்பான். உணவருந்தும் பொழுதும் ஔவையார் பாடல்களைக் கேட்டு இன்புறுவான். சுவை மிகுந்த உணவுப் பகுதியை யெல்லாம் தான் விரும்பாது புலவருக்கே கொடுப்பான். ஔவையாரிடத்துத் தான் கொண்ட பேரன்பினுல் நரந்தப்பூ நாறும் தன் கையால் அப்புலவர் பெருமாட்டியின் தலையைத்தைவந்து அருள் காட்டுவான். அவ்வள்ளல் இறந்துபட்டது, இசைப்பாணருக்கும் இரவலர்க்கும் அவன் சுற்றத்தாருக்கும் புலவர்களுக்கும் பெருந்துயர் விளைப்பதாயிற்று. அதனுல் அவன் மார்பில் தைத்தவேல் அதோடு நிற்காது பாணரது இரவோட்டைத் துளைத்து, சுற்றத்தார் கண்ணையும் உருவிச்சென்று, இரப்போரது கையையுந் துளைத்துப் புலவர்களது நாவிற்பட்டதேயாகும். அதனுல் இனிப் பாடுவோரு

மில்லை, பாடுவோரைப் பாதுகாப்போருமில்லை என்று ஔவையார் கசிந்துருகிக் கதறிய பாடல்:—

"சிறியகட் பெறினே எமக்கீயு [1]மன்னே
பெரியகட் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே
சிறுசோற் றானு நனிபல கலத்தன் மன்னே
பெருஞ்சோற் றானு நனிபல கலத்தன் மன்னே
என்பொடு தடிபடு வழியெல்லாம் எமக்கீயு மன்னே;
அம்பொடு வேல்நுழை வழியெல்லாந் தானிற்கு மன்னே
நரந்த நாறுந் தன்கையாற்
புலவுநாறும் என்தலை தைவரு மன்னே;
அருந்தலை இரும்பாணர் அகன்மண்டைத் துளையுரீஇ
இரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண் பாவை சோர
அஞ்சொல்நுண் தேர்ச்சிப் புலவர் நாவிற்
சென்றுவீழ்ந் தன்றவன்
[2]அருநிறத் தியங்கிய வேலே;
[3]ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
இனிப், பாடுநருமில்லைப் பாடுநர்க்கொன் றீகுநருமில்லைப்
பனித்துறைப் பகன்றை நறைக்கொள் மாமலர்
சூடாது வைகி யாங்குப் பிறர்க்கொன்று
ஈயாது வீயும் உயிர்தவப் பலவே." (புறநானூறு - 235)

இங்குப் புலவர்களை, அழகிய சொல்லை ஆராயும் நுண்ணிய ஆராய்ச்சியையுடைய அறிவினையுடையோர் என்னும் பொருள்பட, 'அஞ்சொல் நுண் தேர்ச்சிப் புலவர்' என்று ஔவையார் பாடியிருத்தல் நோக்கத்தக்கது. அதியமானின் செங்கைப் பெருமையைக் குறிக்க "நரந்த நாறும்" என்றும், தமது தலையின் சிறுமையைக் குறிக்கப் "புலால் நாறும்" என்றும் கூறியுள்ளார்.

---

1. மன்னே - அது கழிந்தது.
2. அருநிறத்து - அரிய மார்பில்.
3. ஆசு ஆகு - எமக்குப் பற்றுக்கோடு ஆகிய,

**நன்றி யறிவு:**

அரசர்கள் புலவர்களிடத்தில் அன்புடன் ஒழுகியது போல் புலவர்களும் அரசர்களிடத்துப் பேரன்பினர்களாயிருந்தனர். புலவர்கள் அரசர்களின் வண்மைக் குணத்தைச் சிறப்பித்துப் பாடியதுபோல் அவர்கள் போர்த்தொழிலையும் வீரத்தையும் வியந்து பாடியுள்ளனர். அரசர்களைப் பின்பற்றிப் போர்க்களங்களுக்குஞ் சென்று அவர்களுக்கு வெற்றியுண்டாக வேண்டுமென்று வாழ்த்தித் தொழுதனர். தம்மைப் புரந்த மன்னர்கள் போரில் மடிந்தால் தாமும் உலக வாழ்க்கையை வெறுத்து அந்நாட்டை விட்டகன்றனர். பாரியின் பறம்பு பகைவர் கைப்பட்டுப் பாரி இறந்ததும், அவனுடன் நெடுங்காலம் வாழ்ந்த கபிலர், பாரியின் மகளிரையும் அழைத்துக்கொண்டு அம் மலைநாட்டைவிட்டு நீங்கினர். பாரியின் மகளிருக்குத் தகுந்த மணம் முடித்தல் வேண்டி அரிது முயன்று அலையலுற்றார். தம் தோழனை பாரியின் மகளிரைத் தம் மகளிராகவே கொண்டு பேணினர் என்பது,

> "நெடுமாப் பாரி மகளிர்; யானே
> தந்தை தோழன்; இவரென் மகளிர்;
> அந்தணன் புலவன் கொண்டுவந் தனனே."
>
> (புறநானூறு—201)

என்று இருங்கோவேளிடம் சொல்லுவதிலிருந்து தெரியலாம். பின்னர்ப், புண்பட்ட மனத்துடன் பாரிமகளிரைத் தகுமிடத் தமர்த்திப், பாரியின் பிரிவை யாற்ருது, மறுபிறப்பிலும் அவனோடுறைதலை வேண்டி, வடக்கிருந்து உயிர் நீத்தார். கபிலர் பாரியிடம் கொண்டிருந்த நட்பின் பெருமைதான் என்னே! எழுமையும் தொடரும் கெழுமிய நட்புடைய அவர் அவனோடு உயிர் துறந்திருப்பார். ஆனல் அவ்வமயம் பாரி தடுத்துவிட்டான். பாரியின் மகளிருக்காகச் சிறிது காலம் உயிர் வைத்திருந்தார். அவ்வாறு அவர் வடக்கிருந்தபொழுது அன்பலைத்து என் புள்ளுருக்கும் அருங்கவியொன்று பாடியுள்ளார்;—

"[1]கலையுணக் கிழிந்த [2]முழவுமருள் பெரும்பழம்
சிலைகெழு குறவர்க்கு [3]அல்குமிசை வாகும்
மலைகெழு நாட மாவண் பாரி
கலந்த கேண்மைக் கொவ்வாய் நீயெற்
புலந்தனை யாகுவை புரந்த யாண்டே
பெருந்தகு சிறப்பின் நட்பிற் கொல்லாது
ஒருங்குவரல் விடாஅ தொழிகெனக் கூறி
இனையை யாதலின் நினக்கு மற்றியான்
[4]மேயினே னன்மை யானே யாயினும்
இம்மை போலக் காட்டி யும்மை
இடையில் காட்சி நின்னோடு
உடனுறை வாக்குக உயர்ந்த [5]பாலே."
(புறநானூறு—236.)

இக்கவியில் ஒவ்வொரு மொழியும் அன்பின் ஊறி அகத்தி னின் றெழுந்துள்ளது. புலவரது மனவுணர்ச்சியைக் கள்ள மின்றி உள்ளவாறே கனியக் கனியக் கட்டுரைக்கின்றது இக் கவி யென்னலாம்.

இவ்வாறு அரசர்கள் இறந்தால் அவர்களோடு நட்புப் பூண்டு ஒழுகிய புலவர்களும் உடன் உயிர் துறக்கும் வழக்கம் அக்காலத்திருந்தது என்பதற்கு இன்னும் ஒரு சான்று உண்டு. கோப்பெருஞ் சோழன் வடக்கிருந்து உயிர் நீத்தகாலை, அவனுடன் பிசிராந்தையாரும் உயிர் விட்டார் இவர் கோப் பெருஞ் சோழனை நேரிற் கண்டறியாதிருந்தும், அவன் புகழைப் பல்லாற்றானுங் கேட்டு மனமகிழ்ந்து அவனிடத்து அழியா நட்பும் அன்பும் கொண்டிருந்தவர் பாண்டிநாட்டுப் பிசிர் என்னும் ஊரில் வாழ்ந்த புலவராவர். அவன் வடக் கிருக்கும் செய்தி கேட்டு, விரைந்துவந்து அவனருகில் தாமும்

1. கலை - முசுக்கலை என்னுங் குரங்கு.
2. முழவு மருள் - முழவு போலும்.
3. அல்கு மிசைவு - வைத்திருந்து உண்ணும் உணவு.
4. மேயினேன் அன்மையான் - பொருந்தினே னல்லாமையால்.
5. பால் - விதி.

இருந்து உயிர் துறந்தார். கோப்பெருஞ் சோழனுக்குப் பொத்தில் நண்பினரான பொத்தியார் என்னும் புலவரும் அவனுடன் வடக்கிருக்க முற்பட்ட பொழுது. கருவுற்றிருந்த அவரது மனைவியார் மகவீன்பது கண்டு மகிழ்ந்தபின் வருகெனக் கோப்பெருஞ் சோழன் நிறுத்திவிட்டான். தமக்குக் குழந்தை பிறந்த பின்னர், பொத்தியார் சோழனது நடுகல்லை யடைந்து "என்னிவண் ஒழித்த அன்பிலாளா! என் இடம் யாது?" என்று அன்புததும்ப வினவிய பாடல் அக் கல்லையும் நகரச் செய்து இடனளித்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆலத்தூர்கிழார் என்னும் பெரும்புலவர் கிள்ளிவளவனிடத்தில், "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்னும் அருங்குறளின் நுண் பொருளை விளக்கி, "வேந்தே! அல்லும் பகலும் நீ அளிக்கும் விருந்தை அயர்ந்து நின்னை வாழ்க என்று வாழ்த்தாதொழியின் உயிர்களுக்கு அலகாகிய கதிரவனும் தோன்றுதலைச் செய்யாது உலகம் இருளில் ஆழ்ந்துவிடும்." என்று பாடியதிலிருந்து இப் புலவர்கள் செய்ந்நன்றியறியும் செம்மைக் குணம் படைத்த சீலர்கள் என்று நன்குணரலாம். இன்னோர் அரசர்களுக்கு வேண்டிய அரசியல் நீதிகளை வேண்டும்பொழுது விரித்துரைத்ததன்றி, அவ்வரசர்களின் குடும்ப வாழ்க்கையிலும் குறுக்கிட்டு வேண்டும் உதவி புரிந்து வந்தனர் என்பது பேகனது வரலாற்றிலிருந்து நாம் அறியலாம்.

**கல்விப் பெருக்கம்:**

முத்தமிழில் வல்லுநராய் மூதறிவு படைத்து விளங்கியதுமல்லாமல் சான்றோர் எனச் சிறந்த இப்புலவர் பெரியார்கள், வானநூல், நிமித்தங் கண்டறிதல் முதலிய பல கலைகளிலும் கற்றுத்துறைபோகிய கலைஞராவர் என்பது புறநானூற்றுப் பல பாடல்களாலும் உணரத்தகும். இன்னும் இப் புலவர் பெருமையைப் பேசின் பெருகிக்கொண்டே போகுமாகலின்

இத்துடன் நிறுத்துவோம். இவர்களது வரலாற்றைப் படிக்குந்தோறும் நமக்கு முதன்மையாய்த் தோன்றுவது அக்காலத்துக் கல்விப் பெருக்கமேயாகும்.

"ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக வென்னா தவருள்
அறிவுடை யோனா றரசுஞ் செல்லும்"

என்ற பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனின் வாக்கு இங்கு நினைத்து மகிழற்பாலது.

# 4. மூதின் மகளிர்

"Who rocks cradle rules the world" என்பது ஓர் ஆங்கிலப் பழமொழி. "தாயைப்போல பிள்ளை, நூலைப் போல சேலை" என்பது தமிழ்மொழி. ஒரு நாட்டு மைந்தர்களின் குறைகுணங்கள் அந்நாட்டுப் பெண்டிரைப் பொறுத்தே அமையும். பெண் கல்வி சிறந்திருக்கும் நாட்டில் அங்குள்ள ஆடவரின் கல்வியைப்பற்றிக் கேட்க வேண்டியதேயில்லை. அம்மங்கையர் வீரமும் உரனும் படைத்து அச்சமென்பதே அறியாத அறிவாளிகளாய் இருப்பாராயின், அவர்கள் ஈன்றெடுத்துப் பேணிவரும் இளைஞர்களும் வீரமும் திறனும் வாய்ந்து மானம்படைத்த மறவர்களாய் மாண்புகழ் எய்துவர். ஆங்கிலம் படித்த மாணவர்கள் ஸ்பார்ட்டா நாட்டுத் தாய்மார்களின் (Spartan Mothers) வீரச்செயல்களைப் படித்துவிட்டு நாக்கை மொச்சுமொச்சென்று சுவைத்துக் கொள்வர். ஏன்? அவர்களுக்கு நம் தமிழ்த்தாயரின் மூதிற் சிறப்பு சிறிதும் தெரியாத காரணம்தான். மலை தோன்றிப் பூமி தோன்றாத காலத்திருந்தே வாளோடு முன் தோன்றி மூத்த குடியாகிய மறக்குடியிற் பிறந்த மகளிர் தம் உயிரினும் வீரத்தையே சிறப்பாகக் கொண்டனர். தாங்கள் பெற்றெடுத்த புதல்வர்களுக்குத் தக்க கல்வியை உதவுதல் தம் கணவர் கடமை என்றும், தம் அரசர் காட்டும் நெறியைக் கடைப்பிடித்து, வேலெடுத்துப் போரில் யானையைக்கொன்று புகழ்மாலைசூடி மீளுதல் தம் புதல்வர் கடனென்றும் நம்பியிருந்தனர். தன் மகன் போரிற்குப் பயந்து புறங்கொடுப்பானேல், தமிழ்த்தாய் உயிர் வாழ்வாளல்லள். அவனையுங் கொன்று தானும் சாவாள். ஒரு முதியோள் வாளொடு போர்க்களஞ் சென்று, தன் மகன் மார்பில் வடுப்பட்டு மடிந்து கிடப்பதைக்கண்டு அவனைப் பெற்ற நாளினும் பெருமகிழ்வெய்திய செய்தி அறியாத தமிழனும் உண்டோ? முன் நிறைந்த கழற்காய்போற் பகழிகளால் ஏற்பட்டுப் போரில்

விழுந்த நெடுங்கோளனின் தாயும் இறந்து பட்ட தலைப் பெயனிலையைத் தகடூர் யாத்திரையிற் படிப்போர், நெஞ்சம் கரைந்துருகுவரல்லவா? கைவேலைக் களிற்றொடு போக்கி வெறுங்கையே மீண்ட மகனைக் கண்டு வருந்தி, என்றுமில்லாக் குடிப்பழி வந்ததென்று, வயிறலைத்து மோதிய தாயும் தமிழ் மகளன்றோ?

பெண்டிருளத்தைப் பெண்டிரே நன்கறிவர். இம்மூதின் முல்லையாகிய மகளிரது வீரத்திறத்தை, ஔவையார், பொன் முடியார், மாசாத்தியார், நச்செள்ளையார், நன்முல்லையார் முதலிய பல பெண் புலவர்கள் சுவையுள்ள பல பாக்களாக நமக்களித்திருக்கின்றனர். அப்பாக்களில் அக்கால மகளிரது உள்ளக்கிடக்கையும், வாழ்வின் சீரிய நோக்கங்களும், மானமும் அறமும் இழந்து பின் உயிர்வாழாத அவர்களது உத்தம குணமும், இன்னும் பல சிறப்புக்களும் இனிது தீட்டப்பட்டிருக்கின்றன. அவ்வரிய பாக்களை ஒவ்வொரு தமிழ் மகனும் நன்கு கற்று அதன்படி ஒழுகப் பயிலல் வேண்டும். அக்காலம் எப்பொழுது கிட்டுமோ அப்பொழுது தான் நம் நாடு முன்னேற்றமடையுமென்பதில் யாதொரு ஐயமுமில்லை.

ஊற்றுநீர் அல்லது வேற்றுநீர் அறியா ஒரு சிற்றூர். அங்கு ஓரிளம் பெண். அவள் காசறு கூந்தலை உடையாள். மாசறு நுதலை உடையாள். கடவுளைக் கைதொழுது நிற்கிறாள். போரில் மடிந்து துறக்க மெய்திய ஒரு வீரனின் நடுகல்லே அவளது கடவுள். அதுவே அவளது குலதெய்வம். அக்கடவுளைப் பல முறையும் பணிந்து மன்றாடி இரண்டு வரம் வேண்டுகிறாள். அவளது பிரார்த்தனை என்ன? "வைகலும் விருந்தினர் தவிராது என் வீட்டிற்கு வர, யான் அவர்களை உபசரிக்க வேண்டும். ஒரு பெரிய அரசன் பகைவனாகக் கிடைத்து, அவனை என் கணவன் போரில் எதிர்க்க வேண்டும்," என்று வேண்டுகிறாள்.

"களிறுபொரக் கலங்கு கழன்முள் வேலி
அரிதுண் கூவ லங்குடிச் சீறூர்
ஒலிமென் கூந்தல் ஒண்ணுதல் அரிவை
நடுகற் கைதொழுது பரவும் ஒடியாது
விருந்தெதிர் பெறுகதில் யானே யென்னையும்
ஒ...............வேந்தனொடு
நாடுதரு விழுப்பகை யெய்துக வெனவே."

(புறநானூறு—306)

ஓர் அரசனை எதிர்த்தாலே தன் கணவன் பெரிய செழிப்புள்ள நாட்டை வென்று கைக்கொள்ள முடியும் என்பது அவளுடைய எண்ணம். தன் கணவன் நிச்சயமாக வெற்றியடைவான் என்று துணிந்தே இவ்வாறு வேண்டுகிறாள். அவ்விதம் பெரிய நாட்டைத் தன் கணவன் வென்று கைக்கொண்டால், தான் அதிகமான விருந்தினரை இனிது உபசரிக்க முடியும் என்பது அவளுடைய குறிப்பு. மறப்போரும் அறப்போராகவே இருக்க வேண்டும் என்னும் அவாவினால், தன் கணவன் 'பகை எய்துக' என்கிறாள். 'என்னையும்' என்று அவள் தன் கணவனைக் குறிப்பது அவள் அகத்திருந்தெழும் அன்பின் முதிர்ச்சியைக் காட்டுவதே யாகும். இதனால் பெண்களுக்குள்ள ஈகைக்குணமும், விருந்தினரை உபசரிப்பதில் அவர்களுக்குள்ள ஆர்வமும், அவ்வீகை தியாகமேயாகும் என்பதும், தியாகமும் ஒரு வீரமேயாகி மகளிர்க்குச் சிறப்புக்கொடுத்து நிற்கும் என்பதும் தெளிவாகும். இவ்விதச் சிறந்த குணம் ஒரு பெண்ணிற் கமைவது கல்வியால் நிரம்பிய அறிவின் பயனேயாகும். இதைக் கம்பநாடர் ஒரு செய்யுளில் அழகுறக் கூறி யிருக்கிறார்:

"பெருந்த டங்கண் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்து மன்றி விளைவன யாவையே."

மாசாத்தியார் என்னும் பெண் புலவர் புறநானூறு 279-ம் பாடலில் ஒரு தாயின் வீரச்செய்கையைக்கூறி, 'கெடுக சிந்தை கடிதிவள் துணிவே!' என்று விம்மிதங் கொள்கிறார். அதே செய்தி புறப்பொருள் வெண்பா மாலையிலும் எடுத்தாளப்பட்டுள்ளது. அக்காலத்தவரும் அதைக்கண்டு வியப்பெய்தினர். நாமும் இக்காலத்திற் சொல்லிச் சொல்லி வாயார முடிவதில்லை. ஒரு பெண்ணின் தமையன் முதல்நாட் போரில் விழுந்திறந்தான். பகைவர் ஆனிரையைக் கவர்ந்து செல்லலுற்றனர். மறுநாள் அவள் கணவன் அவ்வானிரையை மீட்டுவரச் சென்று, வீரத்துடன் பொருது மாண்டான். மூன்றுவது நாட் காலையிலும் போர்க்கு அழைக்கும் முரசம் அறையப்பெற்றது. அப்பெண் அதனைக் கேட்டுப் பொங்கி எழுந்தாள். வீட்டில் எஞ்சி நின்றவன் தனது ஒரே மகன். அவனும் பாலருவாயன். அவனைத்தன் அருகழைத்து அன்போடணைத்து உச்சி மோந்தாள். தலைக்கு எண்ணெய் இட்டுச் சீவி முடித்தாள். தும்பைப்பூப் போன்ற தூய ஆடையைச் சுற்றிக்கட்டினாள். அவன் கையில் நிமிர்த்துத் திருத்தின வேலைக்கொடுத்துப் போர்க்களத்தை நோக்கிச் செல்லும்படி விடுத்தாள். என்னே பெண்ணின் துணிவும், வீரமும், தியாகமும்! பொதுச் சமுதாய வாழ்க்கைக்கு ஓர் இடுக்கண் வந்தபோது தன் ஒரே மகனையும் நாட்டின் நலத்திற்காகத் துறந்து போர்க்கு விடுத்த இவ் வீரத் தாயின் சமுதாய உணர்ச்சியையும் (Public spirit), தியாகத்தையும் அறிஞர் போற்றுவாராக!

போர் முடிந்தவுடன் வீரர்களின் தாயரும் பெண்டிரும் போர்க்களஞ் சென்று அங்கு விழுந்து கிடப்போரின் நிலையை அறிவது தமிழ் வழக்கம். இவ்வழக்கம் மிகச் சமீபகாலமான 1800 கி. பி. வரை, தமிழ் நாட்டில் நடந்து வந்ததென்று சொல்லலாம். இது சிலருக்கு வியப்பை விளைவிக்கக் கூடும். ஆனால் கால்டுவெல் என்பவர் எழுதியிருக்கிற தமிழ் நாட்டுச் சரித்திரத்தைப் படிப்பவர்களுக்கு இதன் உண்மை விளங்கும். தமிழ் நாட்டுச் சரித்திரத்தில் அநேக போர்கள் நடந்திருக்

கின்றன. அவற்றில் மிகச் சிறப்பு வாய்ந்தவைகளில் ஒன்று தலையாலங்கானத்துப்போர். அப்போரிற் பாண்டியன் நெடுஞ்செழியன் இருபெரு வேந்தரையும் ஐம்பெரு வேளிரையும் வென்று வாகை சூடினன். போர்க்களத்திற்கு மகளிர் சென்று பிணங்களைப் புரட்டி ஆராயலுற்றனர். அங்குத் தம் கணவன்மார்களும், புல்லிய தலையையுடைய பொன்போற் புதல்வரும் வாள் வெற்றியை யுடையோராய், மடிந்து கிடப்பதைக் கண்டு, 'இச்சிறப்புவாய்ந்த வெற்றியும் நமக்குக் கிடைத்ததா!' என்று இன்புற்று உவகை எய்தினர். ஆனால் அங்குச் சில அம்பு தைத்துப் புண்பட்ட யானைகளின் துதிக்கை அறுபட்டுக் கிடப்பதைக் கண்டு, அது மறத்திற்கு இழிவென்று கொண்டு, இரங்கி அழத்தொடங்கினர். அக்காட்சியைக் கொடிய கூற்றுவனும் கண்டிருந்தால் நாணி இரங்கி இருப்பான். குடபுலவியனர் என்னும் புலவர் அவ் அஞ்சத்தக்க போர்ச் செய்தியைக் கூறியிருக்குங் கவி வருமாறு:

"குன்றத் திறுத்த குரீஇயினம் போல
அம்புசென் றிறுத்த வரும்புண் யானைத்
தூம்புடைத் தடக்கை வாயொடு துமிந்து
நாஞ்சில் ஒப்ப நிலமிசைப் புரள
எறிந்துகளம் படுத்த வேந்துவாள் வலத்தர்
எந்தையொடு கிடந்தோரெம் புன்றலைப் புதல்வர்
இன்ன விறலு முளகொல் நமக்கென
மூதிற் பெண்டிர் கசிந்தழ நாணிக்
கூற்றுக்கண் ணோடிய வெருவரு பறந்தலை"
(புறநானூறு—19)

இவ்விதம் போர்க்களஞ் சென்று தேடும் பெண், தன் கணவன் இறந்து பட்டிருப்பானாயின், தானும் உயிர் வாழமாட்டாள். கணவன் மார்பைப் பொருந்தி, முகத்தோடு முகம்வைத்து முயங்கி அந்நிலையே உயிரை விடுவாள். இவ்வித வீரப்பெண்டுகள் கைம்மை விரதம் பூண்டு உயிர் வாழ்வதைக் கைக்கொள்வதில்லை.

"..............................பெண்டிரும்
பாசடகு மிசையார் பனிநீர் மூழ்கார்
மார்பகம் பொருந்தி யாங்கமைந் தனரே"
(புறநானூறு—62)

இது மட்டுமன்றி உடன் கட்டையேறும் வழக்கமும் தமிழ் நாட்டிலிருந்ததென்பது பூதப்பாண்டியன் தேவி தீப்பாய்ந்த செய்தியிலிருந்து நாம் உணர்ந்து கொள்ளலாம்.

போரிற் பொருது புண்பட்டு விடு திரும்பும் வீரர்களை அவர் மகளிர் உளமகிழ்ந்து குதூகலத்துடன் விரைந்தேற்று, அப்புண்களுக்குச் சிகிச்சை செய்வது ஒரு சிறந்த திருவிழாக் கொண்டாட்டமாகவே யிருக்கும். வீட்டின் கூரையிலும் வாயில் நிலைகளிலும் இரவந்தழைகளும் வேப்பந்தழைகளும் தோரணமாகத் தொங்க விடப்பட்டிருக்கும். வீடு முழுவதும் தூபங்காட்டி நறும்புகை கமழும். வெண் சிறு கடுகையும் நெருப்பிலிட்டுப் புகைப்பர். மணிகள் கல்லெ்ன ஒலித்து நிற்கும். மகளிர் பலவகை வாத்தியங்களிலிருந்தும் இன்னிசை இயக்கி, யாழை வாசித்துக் காஞ்சிப் பண்ணைப் பாடுவர். புண்பட்டோர் உடலை இரவிற் பேய்கள் தீண்டித் துன்புறுத்துமென்று ஒரு நம்பிக்கை யிருந்தது. ஐயவிப் புகையையும் வேப்பந்தழை முதலியவற்றையும் கண்டு பேய்கள் பயந்து கிட்ட நெருங்க மாட்டா என்று இவ்வா றெல்லாம் செய்தனர். எங்கும் ஆரவாரமாய் இருக்கும். இவ்வித அரிய தொண்டாற்றுவதில் மகளிர்க்குள்ள மகிழ்ச்சியும் உத்சாகமும் இவ்வளவென்று அளவிடவியலாது. இச் செய்தி பின்வரும் அழகிய செய்யுளில் மிகவுந் திறமாகச் சித்திரிக்கப்படுகிறது:—

"தீங்கனி யிரவமொடு வேம்புமனைச் செரீஇ
வாங்குமருப் பியாழொடு பல்லியங் கறங்கக்
கைபயப் பெயர்த்து மையிழு திழுகி
ஐயவி சிதறி யாம்ப லூதி
இசைமணி யெறிந்து காஞ்சி பாடி

நெடுநகர் வரைப்பிற் கடிநறை புகைஇக்
காக்கம் வம்மோ காதலந் தோழி
வேந்துறு விழுமந் தாங்கிய
பூம்பொறிக் கழற்கால் நெடுந்தகை புண்ணே''

(புறநானூறு—281.)

போரில் அரசனுக்கு நேராகவந்த படைக்கலங்களைத் தானே ஏற்றுக்கொண்டு புண்பட்டவன் அவ்வீரன் அத்தகைய வீரன் காலில் பூத்தொழில் அமைந்த கழலை அணிந்திருந்தான். அது அவன் மனைவிக்குக் கண்கொள்ளாக் காட்சியாகவே இருக்கும். அவ்வீரனது புண்களின் துயரைத் தன் இன் குரலில் இசைமதுரச் சுவையாலே தணித்து ஆறுதல் அளிக்கும் தமிழ்மகளின் பெருமையை விளக்க வேறு சான்று வேண்டுவது மிகையேயன்றோ!

# 5. தமிழ் உள்ளம்

உள்ளம், நெஞ்சம், மனம், இதயம், அகம் என்பன ஒரு பொருளைக் குறிக்கும் பல சொற்கள். ஆகு பெயராகக் கொள்ளுமிடத்து, உள்ளம் என்னும் சொல் அதனிடத்து எழுகின்ற உணர்ச்சிகளையும், எண்ணங்களையும், நினைப்புகளையும், விருப்பு வெறுப்புகளையும், அவற்றால் அறியப்படும் தன்மைகளையும், குணங்களையும், இயல்புகளையும், பெருமை சிறுமைகளையும், பண்பாட்டினையும் குறிப்பதாகும். ஒருவனுடைய அகமாகிய உள்ளத்தை அவனது புறத்தே நிகழும் சொற்களையும் செயல்களையும் கொண்டே அறியமுடியும். பண்டைத் தமிழனுடைய அறிவுரைகளும் அருஞ்செயல்களும் புறநானூறு போன்ற சங்க நூல்களிலே அடங்கியுள்ளன; அவற்றைத்திறந்து படிப்பவர்களிற் பலருக்குத் தமிழ் உள்ளம் எளிதிற் புலப்படுவதில்லை. அத்தமிழ் உள்ளத்தைத் தெளிவாக எடுத்துக்காட்டிப் பழமையிலுள்ள புதுமைகளைக் காண முயல்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

மக்கட் பேறு :

சமூக வளர்ச்சிக்கு இல்லற வாழ்க்கையில் நாட்டமும் நன்மக்களைப் பெற்றெடுத்தலில் தேட்டமும் இன்றியமையாதனவாகும். துறவற வாழ்க்கையைவிட இல்லறவாழ்க்கையை இனிதெனத் தமிழன் கண்டான். அதனை மேலெனவும் கொண்டான். எல்லாச் செல்வங்களுள்ளும் மக்கட் செல்வமே சிறந்ததாகக் கருதினான். குழந்தைகளுள் ஆண் என்றும் பெண் என்றும் தமிழன் வேறுபடுத்தி அன்பு செலுத்தியதில்லை. ஆண்பிள்ளையாயினும் பெண்மகவேயாயினும், இரண்டையும் ஒக்கவே நோக்கிக் கண்ணெனப் போற்றினான். பால் மணம் மாறாப் பச்சிளங் குழந்தையிடத்தே தமிழ் உள்ளம் கழிபேரின்பம் கண்டது. உண்ணும் பொழுது குழந்தையை அருகில் வைத்து உண்ணும் இன்பம்

வேறு எவ்வுலகிலேதான் ஒருவனுக்குக் கிடைக்கப் போகிறது? தன் அல்லிமலர்க் கரங்களால் சோற்றைக் கிண்டியும், கீழே சிதறியும், மேலே வாரி இறைத்தும் குழந்தை செய்யும் சிறு தொழில்கள் கண்கொள்ளாக் காட்சியாகும். அது குறுகக் குறுக நடப்பதும், குஞ்சுக் கைகளை ஆட்டுவதும், தலையை அசைப்பதும் உதட்டை நெளிப்பதும், கன்னங் குழியச் சிரிப்பதும் நாம் என்றும் மறக்க முடியாதன. குழந்தையின் ஒவ்வொரு சிறுசெயலும் அதன் பெற்றோர்களை உவகையால் மயக்கிக் கவலையைத் துடைத்துவிடும். இது குழந்தையை யுடையோர் ஒவ்வொருவருடைய அனுபவமுமாகும். பாண்டியன் அறிவுடை நம்பி என்னும் கவியரசனின் அறிவையும் மயக்கியது இக்குழந்தை இன்பம். வேறு எத்தகைய செல்வம் ஒருவனுக்கு இருந்தாலும், மக்கட் செல்வம் இல்லாது போனால் அவனுக்கு இவ்வுலகில் இன்பமும் இல்லை, வாழ்க்கையும் இல்லை என்று முடிவு கட்டினன் அவ்வறிவுடை மன்னன்:-

“படைப்புப்பல படைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத்தாம் வாழு நாளே.”

(புறநானூறு—188.)

கணவன் மனைவியரிடையே காதலை வளர்ப்பதற்கும் குழந்தை வேண்டப் படுவதொன்றாகும் குழந்தையின் குதலைச் சின்மொழி நம் மதியை மயக்கி நம் மனத்தைப் பிணிக்கவல்லது. அதற்கு யாழோசைபோல இசை யின்பமும் கிடையாது. காலத்திற்கு ஒத்ததாகவும் இராது. சொல்லும் சொற்கள் உருவம் குலைந்து பொருளும் விளங்காது. ஆயினும் குழந்தையின் பேச்சிலே கோடியின்பம் காண்பார் அதன் பெற்றோர். மழலை மொழியிலே மனம் திளைத்தவர் குழலையும் யாழையும் விரும்பமாட்டார்:—

"யாழொடுங் கொள்ளா பொழுதொடும் புணரா
பொருளறி வாரா வாயினுந் தந்தையர்க்
கருள்வந் தனவாற் புதல்வர்தம் மழலை."

(புறநானூறு—92.)

என்று ஔவையார் கூறுகிறார். இத்தகைய அருள் ஊறிய நெஞ்சத்தவர்களே சமூகம் நிலைபெற்று வளர்வதற்கு உண்மையாகப் பாடுபடுவார்கள். தங்கள் குலத்தையும் குடியையும் விளங்கச் செய்யவேண்டிய வேலைகளில் முயல்வார்கள். மக்கள் இனத்தையும், தமிழ்க் குலத்தையும், தான் பிறந்த குடியையும் உயர்த்தி மேன்மைபெறச் செய்தல் கடமை எனக் கருதியது தமிழ் உள்ளம். தமிழ் மன்னர், யாருடனாவது போர் தொடுப்பதாயிருந்தால், பொன்போற் புதல்வர்ப் பெறாதோரை விலக்கியபின்பே போர் புரிவர். இதனால் நல்ல குழந்தைகளைப் பெறவேண்டியது ஒவ்வொருவர் கடமையுமாகும் எனத் தமிழர் கருதினர் எனலாம். கோப்பெருஞ்சோழனுடன் வடக்கிருந்து உயிர் துறக்கச் சென்ற பொத்தியார் என்னும் புலவரை அம்மன்னன் "புகழ்சால் புதல்வன் பிறந்த பின் வாரும்" என்று திருப்பி அனுப்பிய வரலாற்றினும் காண்க. (புறநானூறு—222)

கடமைகள் :

ஒரு சமூகம் நல்ல நிலையை அடைவதற்கு ஒவ்வொருவர் செய்யவேண்டிய கடமை என்னவென்பதைப் பொன்முடியார் என்னும் ஒரு பெண் புலவர் இனிதெடுத்தியம்புகிறார். புதல்வனைப்பெற்று வளர்க்க வேண்டியது தாயினுடைய கடமை. அவனுக்குக் கட்டழகையுங் கட்டான உடலினையும் அளிப்பதும் அவள் செயலேயாகும். அவனுக்கு நல்லறிவு கொளுத்திக் கல்வியிற் பழக்கி ஒழுக்க முடைய சான்றோனாகச் செய்வது தந்தையின் கடமை. சமூக நன்மைக்கும் அரசாங்க மேன்மைக்கும் உழைக்கும்படி அவனைத் தூண்டவேண்டியது அரசின் கடமை. ஆண்மையுள்ள வீரனாய், நாட்டின் உட்பகை புறப்பகை களைந்து,

நாட்டுக்குப் பெருமையும் புகழும் தேடிக்கொடுக்க வேண்டியது ஒவ்வொரு ஆடவனின் கடமையுமாகும். இவ்வாறு கருதிற்றுத் தமிழ் உள்ளம்:—

"ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவா ளருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே."
(புறநானூறு—312.)

**தொழிலாளர்:**

இப்பாடலில் 'வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே' என்ற அடியினை ஆழ்ந்து சிந்தித்தல் வேண்டும். நாட்டின் தொழிலாளரும் பாட்டாளி மக்களும் அரசாங்கத்தோடு ஒத்துழைத்தல் வேண்டும். அப்பொழுதுதான் அரசாங்கம் நாட்டு மக்களுக்கு நன்னடை நல்குதல் கூடும். அப்பொழுதுதான் நாட்டில் அமைதியும் செழிப்பும் நிலவி நிற்கும். அதுவன்றி, இக்காலத்தில் நடப்பது போல், வேலை நிறுத்தங்கள் (Labour Strikes) திடீர் திடீரென்று கிளம்புமேயானால் நாடு உருப்படுவது எப்படி? மக்கள் சான்றோர் ஆகுவது எப்படி? எல்லாம் நிலை கவிழ்ந்துவிடும். இது கருதியே, தொழிலாளியின் ஒத்துழைப்பு வேண்டும் என்பதை, 'வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே' என்று ஒரு தமிழ் நாட்டுப் பெண், தீர்க்கதரிசி (முற்றுமுணர்ந்தவர்) போலிருந்து, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பாடி வைத்தார் இவ்வுண்மையைக் குறிப்பினில் திகழவைத்தது ஒரு சிறந்த நயமாகும். வேல் என்பது பலவகைக் கருவிகளையும், எந்திரங்களையும், தொழிற்சாலைப் பண்டங்களையும் குறிக்கும். கொல்லன் என்றது எல்லா வகைத் தொழிலாளர்களையும் பொறியியல் வல்லுநர்களையும் குறிக்கும். களிறு எறிந்து பெயர்தல் என்று சிறப்பாகப்

போர்த்தொழிலைக் குறித்தாலும். அது ஏனை அரசாங்கத் தொழில்களையும் சமூக வேலைகளையும் குறிப்பதாகும். அக்காலத் தமிழ் நாட்டில் வீட்டுக்கொரு ஆடவனாவது போர்வீரனாக விளங்கினான் என்பதும் இதனால் தெளிவுறும். ஆகவே நாட்டில் அவரவரும் தத்தமது கடமையை முட்டின்றிச் செய்தல் வேண்டும் என்பது நன்கு விளங்கும். அப்பொழுதுதான் அந்தநாட்டுச் சமூகம் உயர்ந்து முன்னுக்கு வரமுடியும் என்பதைத் தமிழ் உள்ளம் அப்பொழுதே கண்டு கூறியது.

## இளமை :

தமிழ் நாட்டில் மகளிரும் ஆடவர் போன்று அழுத்தமான நாட்டுப்பற்றும், அசைவிலாத ஆண்மையும், சமூக ஒத்துழைப் புணர்ச்சியும், பொது நன்மைக்குப் பாடுபட வேண்டுமென்ற உறுதிப்பாடான உள்ளமும், அதற்குரிய உடல் வலிமையும் உடையவர்களாயிருந்தனர். உலகத்தில் வாழ்வாங்கு வாழ்வதே இன்ப வாழ்க்கை என்பதை உணர்ந்தனர், சுறுசுறுப்பான வாழ்க்கையை மேற்கொண்டனர். இளமையிற் சிறந்த வளமையில்லை என்பதை அறிந்தனர். தோல் திரைகளாகி நரையாகி மூப்பு வந்துற்ற போது இவ்வுலகிற் பெறக்கூடியது ஒன்றுமில்லை என்பதைத் தெரிந்தனர். இளமையிலே முதுமையை எய்திச் சாக்காடு காணும் இன்றைய உலகம் இதனை உணரவேண்டும். இளைஞர்கள் தங்கள் கைவரப்பெற்ற இளமையைக் கடிதில் இழந்துவிடக் கூடாது. அதை அருவிலை நன்கலம் போல நெடிது நாள் போற்றுதல் வேண்டும். தமிழன் உடல் வளத்தினை உரம் பெறச் செய்தான். அதன் நலத்தினைப் பேணினான். இளமையின் எழிலையும், முகப் பொலிவினையும், உடற் கட்டினையும் விரும்பிப் பாதுகாத்தான். இளமையின் காலத்தையும் அழகையும் நீட்டிக்கப் பாடுபட்டான், அதற்காக உழைத்தான். தொடித்தலை விழுத்தண்டினார் என்னும் புலவர், தமது தள்ளாத காலத்திலுங்கூட,

இளமையை நினைந்து முதுமையை முனிந்து எவ்வாறு உருகிப் பாடுகிறார் பாருங்கள்:—

" இனிநினைந் திரக்க மாகின்று திணிமணற்
செய்வுறு பாவைக்குக் கொய்பூத் தைஇத்
தண்கய மாடு மகளிரொடு கைபிணைந்து
தழுவுவழித் தழீஇத் தூங்குவழித் தூங்கி
மறையென லறியா மாயமி லாயமொடு
உயர்சினை மருதத் துறையுறத் தாழ்ந்து
நீர்நணிப் படிகோ டேறிச் சீர்மிகக்
கரையவர் மருளத் திரையகம் பிதிர
நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து
குளித்துமணற் கொண்ட கல்லா விளமை
அளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ
தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்று
இருமிடை மிடைந்த சிலசொற்
பெருமூ தாளரே மாகிய எமக்கே."

(புறநானூறு—243)

ஆம், உண்மை! ஒரு பேச்சுப் பேசுமுன் ஒன்பது இருமல் உடலினை உலுக்கக் கையிற் கழியுடன் காட்சியளிக்கும் இக் கிழவருக்கு இளமை இனி எங்கிருந்து வரப்போகிறது? இளைஞர் உலகம் இதனை சிந்தையிற்கொண்டு தங்கள் இளமையை இழிவு படுத்திக் கலையவிடாமல் இனிது பேணி நிலைபெறச்செய்து நோய்க்கிடங்கொடாது நெடிது நாள் வாழ வேண்டும்.

**கல்வி :**

ஆனால், உண்டு கொழுத்து உடல் பருத்தால் மட்டும் போதாது. நல்லறிவும் வேண்டும் மக்களை நல்ல அறிவுள்ளவர்களாகச் செய்தல் தந்தையின் கடமையாயிற்று. தமிழன் அறிவைப் போற்றினன். அறிவாளியைப் பாராட்டினன். ஆணுக்கும் பெண்ணுக்கும் முதலாவதாக வேண்டப்படுவது கல்வி. இழிந்த நிலையிலுள்ள ஒருவனையும் கல்வி மேனிலைக்கு

உயர்த்திவிடும். கல்வியில்லாது வறிதே வயதில் மட்டிலும் மூத்திருக்கிற ஒருவனுக்கு மரியாதை கிடையாது அரசாங்கத்தில் வேலையில்லை. ஆண்டில் இளையோனாயிருப்பினும், அவன் கல்வி கேள்விகளால் நிரம்பப் பெற்றிருந்தால், அரசாங்கம் அவனை வலிய அழைத்துச் சிறப்பிக்கும். பட்டம் பதவிகள் எல்லாம் அவனைத் தேடிக்கொண்டு வரும். பெற்ற பிள்ளைகளை ஒன்று போற் பேணும் தாய்கூட அறிவில்லாதவனை விடக் கற்றவனிடத்திலே தனி அன்பு செலுத்துவாள். 'கற்றோர்க்குச் சென்ற' இடமெல்லாம் சிறப்பாகவேயிருக்கும். ஆதலால் ஆசிரியர்களுக்கு வேண்டும் பொருள் கொடுத்தும், அவர்கள் துன்பம் துடைத்துதவியும், வழிபாடு செய்தும், எந்தவிதத்திலும் கல்வியைக் கற்றல் வேண்டும் என்று கருதியது தமிழ் உள்ளம்:—

“ உற்றுழி யுதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளுஞ்
சிறப்பின் பாலால் தாயுமனந் திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக வென்னாது அவருள்
அறிவுடை யோனா றரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளுங்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனும் அவன்கட் படுமே. ”

(புறநானூறு—183)

ஒழுக்கம் :

உடல் வலியும் அறிவுத்திறமையும் இருந்தால் மட்டிலும் போதாது. ஒழுக்கமும் மக்கட் பண்பும் அவற்றோடு பொருந்தியமையவேண்டும்.

“ அரம்போலுங் கூர்மைய ரேனு மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர். ”

என்பது தமிழ்மறை. மழை நன்கு பெய்து நிலம் செழிக்க விளைந்து செல்வம் கொழித்து விளங்கினாலும், ஒரு நாடு நல்ல நாடாகிவிட முடியாது ஒரு நாடு நல்ல நாடாவது, அந்நாட்டு மக்களின் குண நலனைப் பொறுத்தேயிருக்கிறது. நிலம் திருந்தி நாடாயிருப்பினும், காடாய்க் கிடப்பினும், பள்ளமாகவோ மலைப்பாங்காகவோ இருப்பினும், அந்நிலத்து வாழும் மக்களைப் பொறுத்தே அது நல்ல நிலம் அல்லது கெட்ட நிலம் என்று மதிப்பிடப்படும். தீய நிலமேயாயினும் நல்லோர் அங்கு வாழ்ந்தால் அது நல்ல நிலமாகிவிடும். அது நல்ல நிலமாகவே யிருப்பினும் தீயோர் அங்கு உறைவதாயின் அது தீய நிலமாகி விடும். ஒரு நாட்டின் ஏற்றத்தாழ்வுக்கு அதன் மக்களே காரணம். ஒரு நாடு மேன்மையுறுவது அந்நாட்டு மக்களைப் பொறுத்தேயிருக்கிறது. மேலும், ஒவ்வொரு நிலமும் தனது இயல்புக்கு ஏற்றவாறு வெவ்வேறு விளைபொருள்களை அளிக்க வல்லதாயிருக்கும். அதன் இயற்கையை நன்கு அறிந்து அதற்கேற்ற வினைகளை உழைப்பெடுத்து ஆடவர் செய்வராயின் அது நல்ல நிலமாகவே விளங்கும். சோம்பேறிகள் வாழும் நிலம் என்றும் பயனின்றியே பாழாய்க்கிடக்கும். அந் நிலத்தைக் குறைகூறிப் பயனில்லை. அதிலுறையும் மக்களின் குறையே குறையாகும் இவ்வுலகத்தியற்கையை ஔவையார் சுருங்க எடுத்து விளக்குகிறார் :—

“ நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே. ”

(புறநானூறு—187)

**சான்றாண்மை :**

பிசிராந்தையார் என்பவர் ஒரு சிறந்த புலவர். தெற்கே குமரியாற்றங்கரையிலுள்ள பிசிர் என்னும் ஊரினர். அவர் பெயர் ஆதன் தந்தை. அது ஆந்தை என மருவி வழங்கப் பட்டது. அவர் உறையூரில் ஆண்டுவந்த் சோழமன்னனாகிய

கோப்பெருஞ் சோழன் என்பவனை நேரிற் கண்டதேயில்லை. ஆனால் அவனுடைய சிறப்பியல்புகளையும் வள்ளன்மையையும் சால்பினையும் பலர்வாயிலாகக் கேள்வியுற்று அவனிடம் அளவிறந்த அன்புபூண்டு நட்புக்கொண்டிருந்தார். அது போலவே கோப்பெருஞ் சோழனும் பிசிராந்தையாரிடத்தில் நட்புடையவனாயிருந்தான். அவ்வரசன் வடக்கிருந்து உயிர் நீத்தபொழுது, அதனையறிந்த பிசிராந்தையாரும் அவ்விடம் விரைந்து சென்று அவ்விதமே உயிர்நீத்தார். அவர் முதிர்ந்த பருவம் அடைந்திருந்தும், அவர் தலைமயிர் ஒன்றுகூட வெளுக்காது கறுத்திருந்தது. அதைக்கண்டு வியப்பெய்திய சான்றோர் சிலர், அவர் வடக்கிருக்கும் முன்னர் அவரை நோக்கி, "கேட்குங் காலம் பலவாலோ நரை நுமக்கில்லை யாலோ?" என்று வினவினர். அவர் தமது தலை நரையாதிருந்ததற்குக் காரணம் பின்வருமாறு கூறினர் :—

"யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களும் நிரம்பினர்
யான்கண் டனையரென் இளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும் அதன்றலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழு மூரே."

(புறநானூறு—191.)

ஒருவன் கவலையற்று இன்பத்துடன் இவ்வுலகில் வாழ்ந்தால் அவனுக்கு நரை ஏற்படாது. கவலைதான் நரை மூப்புகளுக்குக் காரணம். கவலையற்ற வாழ்க்கையை உடையவன் நெடுநாள் இளமையோடு வாழலாம். அதற்கு அவனுடைய மனைவி மக்கள் குணநலன்களிற் சிறந்து அறிவுடையவர்களாயிருத்தல் வேண்டும். அவன் ஏவலாளரும் அவன் கருத்தறிந்து உண்மையாய் உழைக்கவேண்டும். அவன் வாழும் நாட்டின் அரசும் முறைதவறாது பாதுகாத்தல் வேண்டும். இத்தனைக்கும் மேலாக, அவன் வாழும் ஊரிலே நற்குணத்தராய்ப் பணிவுடையவர்களாய் மனம்போனவழித்

திரியாது கட்டுப்பட்டு நடக்கும் சான்றோர் பலராக வாழ்தல் வேண்டும். இவ்வளவும் ஒத்து அமைந்தால் ஒழிய சமூக வாழ்க்கை சிறக்காது. தன் மனைவிமக்களாலும், ஏவலாள ராலும், நாட்டுக்குரிய அரசாங்கத்தாலும், தன் ஊரிலுள்ள பிறராலுமே இன்பமும் துன்பமும் ஒருவனுக்கு எய்துகின்றன என்பது இதனால் நன்கு தெளிவுறும்.

இவற்றுள் முதன்மையாக நாம் கருதவேண்டியது சான்றோரேயாகும். எல்லாவகை நற்குணங்களாலும் நிறைந்து உயர்ந்தவர்களே சான்றோர் எனப்படுவர். ஆங்கிலத்தில் Gentleman என்ற சொல்லுக்கு உண்மையான பொருள் எதுவோ அதனையே சான்றோன் என்ற சொல்லும் குறிக்கும். சான்றோர் பண்புடைமையிலும் சான்றாண்மையிலும் சிறந்து விளங்கும் ஒழுக்க சீலர்கள், சிறந்த அறிவாளிகள். ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் என்றது, கல்வியால் நிறைந்து ஐம்புலன்கள் வழித்தவறாக அறிவினைச் செல்லவொட்டாது மனமொழி மெய்களான் அடங்கிய கோட்பாட்டினையுடைய உயர்ந்தோர் என்பதாகும். இத்தகைய சான்றோர் பண்டைத் தமிழ் நாட்டில் நிறைந்திருந்தனர். அவர்கள் வாழும் இடத்திற்கும், ஊருக்கும், நாட்டிற்கும் ஒருநாளும் ஒருகேடும் வராது. இது முனைவனூலின் முடித்த கேள்வியான் எனைத்துப் பொருளையும் உணர்ந்த பெரியோர் அறிந்து கூறின உண்மையாகும். காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பினைக் கூறவந்த இளங்கோவடிகள் தமது சிலப்பதிகார நூலில், "தெற்கே பொதியில் மலையிலும் வடக்கே இமயத்திலும் நடுவண் காவிரிப்பூம் பட்டினத்திலும் சான்றோர் வாழ்ந்து வந்தபடியால், அவை ஒருதன்மையனவாக சலியாது நிலைபெற்றன என்று கற்றறிந்தோர் கூறுவார்கள்" என்று பாடியுள்ளார்:—

"பொதியி லாயினும் இமய மாயினும்
பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய
பொதுவறு சிறப்பிற் புகாரே யாயினும்
நடுக்கின்றி நிலைஇய வென்ப தல்லது

யொடுக்கங் கூறுர் உயர்ந்தோ ருண்மையின்
முடித்த கேள்வி முழுதுணர்ந் தோரே.''

(மங்கல வாழ்த்துப் பாடல்)

இத்தகைய பண்பும் சான்ருண்மையும் உடையோர்கள் வாழ்வதாலேயே இவ்வுலகும் உலகியலும் அழியாது நிலை பெற்று வருகின்றன என்பதைத் திருவள்ளுவரும்,

'' சான்றவர் சான்ருண்மை குன்றி னிருநிலந்தான்
தாங்காது மன்னே பொறை.''

என்றும்

'' பண்புடையார் பட்டுண் டுலக மஃதின்றேல்
மண்புக்கு மாய்வது மன்.''

என்றும் தெளிவு படுத்தியுள்ளார். தம் நலத்தையே கருதிப் பிறருடைய அழிவுக்குப் பாடுபடுவார் பெருக உண்டாவதாயின் உலகம் எவ்வாறு உய்தல் கூடும்? ஏம வாழ்வு மக்களுக்கு எவ்வாறு எய்தும்?

சான்றோர்கள் உள்ள நாட்டில் நலம் ஓங்கித் தீமை தேய்வுறும். சான்றோர்கள் வாழும் ஊரில் தவறு நடக்காது என்பதை உட்கொண்டே, தவருகக் கொலை யுண்ணப்பட்ட கோவலனின் மனைவி கண்ணகி, விரிந்த கூந்தலும் சொரிந்த கண்ணீரும் கொண்டு, மதுரைமா நகரினுள் நுழைந்த பொழுது,

'' சான்றோரு முண்டுகொல்? சான்றோரு முண்டுகொல்?
ஈன்ற குழவி யெடுத்து வளர்க்குறூஉஞ்
சான்றோரு முண்டுகொல்? சான்றோரு முண்டுகொல்? ''

என்று கதறினள். இங்கே, பிள்ளைகளை விரும்பிப் பெற்றெடுத்து வளர்க்கும் சான்றோர் என்று கண்ணகி கூறியதைக் கூர்ந்து நோக்குதல் வேண்டும். சான்றோர்கள்

என்றது 'முற்றத் துறந்த முனிவர்களையும் துறவிகளையும் அன்று. மனைவி மக்களோடு குடும்ப வாழ்க்கையை விரும்பி இல்லறம் புரிந்து ஒழுகும் பெரியோர்களையே அவள் குறித் தாள். இத்தகைய பெரியோர்களே அநீதியும் புரட்சியும், கேடும், தீமையும், அழிவுவேலைகளும் சமூகத்தினிடையே புகுந்து மக்கள் வாழ்க்கையைப் பாழ்படுத்தாதபடி காத்தற் குரியவர்கள். சான்றோர்களே நிலத்திடை நலம் நிலவி அமைதி அரசாளப் பாடுபடுவார்கள். குடும்பமும் குடும்பச்சொத்தும் இல்லாது தான்தோன்றியாய்த் திரிபவர்கள் சமூகத்திற்குத் தீமை புரியவும் குழப்பம் உண்டுபண்ணவும் அஞ்சமாட்டார் கள். இது கருதியே திருவள்ளுவரும், "அற்றாரைத்தேறுதல் ஓம்புக மற்றவர், பற்றிலர் நாணார் பழி" என்று எச்சரித்தார். சான்றோர்கள் செய்யும் நல்வினையால் நாடுமுழுவதற்கும் நாட்டரசுக்கும் நன்மை உண்டாகும் "உலகத்துச், சான்றோர் செய்த நன்றுண்டாயின்.....வாழிய பலவே" (புறநானூறு 34) என்று ஆலத்தூர்கிழார் சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவனைப்பாடியது காண்க. 'சான்றோரினத்திரு' என்பது ஔவையார் வாக்கு. சான்றோருடன் பழகிவருப வனுக்கு ஒருநாளும் கேடில்லை. மற்றையோர் இயல்புகளை நன்கு அறிந்து அதற்கு ஏற்ப ஒத்தொழுகுதலாகிய பண் புடைமை சான்றோரிடம் உண்டு. ஒவ்வொருவனும் சான்றோ னாக வாழவேண்டும் என்பதே பண்டைத்தமிழரின் குறிக் கோள். உலகத்தோடு ஒத்துப் பொருந்திவாழும் பண்பு மனிதனுக்கு வேண்டும் உலகத்தோடு ஒட்ட ஒழுகு தலையும், உலகத்திற்கு ஒத்தது எதுவென அறிந்து வாழ்தலையும் தமிழ் உள்ளம் விரும்பியது. கல்வி புகட்டவேண்டியது தந்தையின் கடன் என்று பொன்முடியார் கூறவில்லை. 'சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே' என்று வற்புறுத்துகிறார். முத்தும் மணியும் பொன்னும் கொண்டு செய்த மாலை அழுக்குப்படி னும் அல்லது அறுந்துவிடினும், அதனைப் பின்னும் திருத்திச் செப்பனிட்டுக்கொள்ளலாம். ஆனால் தத்தம் குலத்திற்கேற்ற குணங்களினமைதியும், மேம்பாடும், ஒழுக்கமும் பழைய தன்மை கெட்டுவிட்டால், அவற்றின் அழுக்கைக் கழுவி முன்

போலப் புகழை விளங்கும்படி செய்தல் மாசற்ற காட்சியை யுடைய எத்தகைய மேலோர்க்கும் இயலாத காரியமாகும்:—

“ முத்தினு மணியினும் பொன்னினும் அத்துணை
நோவருங் குரைய நலங்கெடிற் புணரும்
சால்பும் வியப்பு மியல்புங் குன்றின்
மாசறக் கழீஇ வயங்குபுகழ் நிறுத்தல்
ஆசறு காட்சி யையர்க்கு மந்நிலை
எளிய வென்னார் தொன்மருங் கறிஞர் ”

(குறிஞ்சிப்பாட்டு)

ஆதலால் ஒழுக்கத்தினை உயிரினும் மேலாகக் காத்தல் ஒவ்வொருவரின் கடமையுமாகும். ஒருவன் குணம் கெடுதலும் கெடாதிருத்தலும் அவன் பழகும் இனத்தைப் பொறுத்திருக்கிறது. சான்றோர் என்றும் சான்றோருடனேயே சேர்ந்து பழகுவர். தீயோர் என்றும் தீயோர் கூட்டத்தை நாடுவர். நிலத்தில் விளைகிற பொன்னும், காட்டில் விளைகிற பவளமும், கடலில் விளைகிற முத்தும், மலையில் விளைகிற மாணிக்கமும் ஒன்றுக் கொன்று தூரிதான இடத்திலே தோன்றினும், விலையுயர்ந்த நல்ல அணிகலங்களைச் செய்யுங்காலத்து ஓரிடத்தில் வந்து கூடுவது போல அமைந்த நற்குணங்களையுடையோர் அத்தகைய குண அமைதியையுடைய சான்றோர் பக்கமே வந்து கூடுவர். ஊர்க்கண் திரிகிற நாயும், காட்டில் திரிகிற நரியும், வானிற் பறக்கிற பருந்தும் ஒரு செத்த பிணத்தைத் தின்னும் பொழுது ஒருங்குவந்து கூடுவதுபோல், தீயோர் தீயோர் கூட்டத்தையே சேர்வர் :—

“ பொன்னுந் துகிரு முத்து மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினுந் தொடைபுணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங் கென்றுஞ் சான்றோர்
சான்றோர் பால ராப
சாலார் சாலார் பாலரா குபவே.”

(புறநானூறு—218)

**எலியும் புலியும் :**

மனிதன் ஒரு சமூகப்பிராணி (Social animal) என்று சொல்லப்படுவான். எந்த மனிதனும் இவ்வுலகில் தானாகத் தனித்தியங்கமுடியாது. தன் இனத்தோடு கூட்டுறவு கொண்டே மனிதன் வாழவேண்டியிருக்கிறது. நல்லோர்க்குப் பெய்தமழை எல்லோர்க்கும் பயன்படுவதுபோல், சமூகம் முழுமைக்கும் இன்பமும் செழிப்பும் உண்டானால்தான் தனிப்பட்டவனுக்கும் இன்பமும் செழிப்பும் உண்டு. தான் மட்டும் வாழவேண்டும், பிறர் எப்படியாவது ஒழிந்து போகட்டும் என்ற தன்னலக்கொள்கை சமூக வாழ்க்கைக்கு முற்றிலும் மாறுபட்டது. இத்தகைய மனப்பான்மையை வெறுத்தது தமிழ் உள்ளம். உலகம் இன்ப வாழ்க்கையை எய்தினலொழிய தனிப்பட்ட மனிதனுக்கு இன்பம் கிடையாது என்பதைத் தமிழன் கண்டான். பொதுநலப் பணியே தன் பணியாகக் கொண்டு அதற்கே பாடுபட்டான். தனக்குத் தனக்கெனக் கிடைப்பதை யெல்லாம் சுருட்டி மடக்கி ஒளித்துவைத்துக்கொண்டு மறைவில் உண்பவனை எப்படி மனிதன் என்று கூறுவது? அவனுக்கும் எலிக்கும் என்ன வேற்றுமை உண்டு? அவன் உள்ளத்தில் ஊக்கமும், உழைப்பும், உறுதியும், உண்மையும், ஊற்றமும் வறண்டு பசையற்றிருப்பதாலேயே இவ்விதம் பயந்து, எலிபோல் பதுக்கி வைக்கிறன். தானும் பதுங்கி வாழ்கிறன். அவன் எலிமனிதன். உணவுப் பொருள்களைப் புலி பதுக்கி வைக்கிற பழக்கம் இல்லை. புலியானது பன்றி வேட்டைக்குச் சென்றால், வீரமுள்ள பன்றியைத்தான் கொன்று தின்னும். எந்த வீரமுள்ள விலங்கும் அடிபட்டு விழுந்தால் வலப்பக்கமாகவே விழும். இடப்பக்கமாகப் பன்றி விழுமானால் புலி அதனைத் தின்னது ஏதோ கிடைத்ததுபோதும் என்ற மனப்பான்மை புலிக்குக் கிடையாது. பசியைப் பொறுத்திருந்தாவது, ஒரு பெரிய யானையை அடித்து வீழ்த்த பின்னரே, அது இரை அருந்தும். அதுபோன்ற மனப்பான்மை மனிதனுக்கு வேண்டும். அத்தகையவனே புலிமனிதன். அவனிடத்தில்

ஊக்கமும் உழைப்பும் உயர்ந்த நோக்கமும் இருக்கும். தன்னலக்கொள்கை இருக்காது. பிறர்க்கு உபகாரியாய் இருக்க எண்ணுவான். எலிபோன்றவர் பிறர்க்கு இம்மியும் கொடுக்க எண்ணார்; எலி போன்றவர் நட்பை வெறுத்துப் புலிபோன்றவர் நட்பையே வேண்டினான் பழந்தமிழன்:—

"விளைபதச் சீறிடம் நோக்கி வளைகதிர்
வல்சி கொண்டளை மல்க வைக்கும்
எலிமுயன் றனைய ராகி யுள்ளதம்
வளன்வலி யுறுக்கு முளமி லாளரொடு
இயைந்த கேண்மை யில்லா கியரோ
கடுங்கட் கேழ லிடம்பட வீழ்ந்தென
அன்றவ ணுண்ணா தாகி வழிநாட்
பெருமலை விடரகம் புலம்ப வேட்டெழுந்து
இருங்களிற் றொருத்தல் நல்வலம் படுக்கும்
புலிபசித் தன்ன மெலிவி லுள்ளத்து
உரனுடை யாளர் கேண்மையொடு
இயைந்த வைக லுளவா கியரோ."

(புறநானூறு—190)

இது சோழன் நல்லுருத்திரன் என்னும் அரசகவியின் பாடல். தமிழ் உள்ளத்திற் பொங்கி யெழுந்த ஈரமும் வீரமும் இப் பாட்டிலே நன்கு விளங்கா நிற்கும். முயலை அடிக்கிற அம்பை விட யானை பிழைத்த வேலினைத் தாங்குதல் மேல் எனக் கருதிற்றுத் தமிழன் உள்ளம். இருட்டு வாணிபமும், (Black marketing) திருட்டுக் கொள்ளையும், சுருட்டிப் பதுக்குதலும், (Hoardi g) பிரட்டுப் பித்தலாட்டமும் தமிழனுக்குப் பிடிக் காதன என்பதற்கு இப்பாடல் ஒன்றே போதிய சான்றாகும்.

ஈகை:

இல்லையே என்று பிறரிடம் சென்று பல்லெலாம் தெரியக் காட்டி இரத்தலைப் பெரியதொரு இழிநிலையாகக் கருதினான் தமிழன். ஆனால் அவ்விதம், தன்னிலைகெட்டு, ஒருவனிடம் வந்து இரப்பவனுக்கு 'ஈயேன்' என்பதை, இரத்தலைவிட

மிகவும் இழிந்ததாகவும் தமிழன் கருதினன். 'ஈ' என்ற தமிழ்ச் சொல்லைப் பல்லை வெளியே திறந்து காட்டாமல் உச்சரிக்கமுடியாது. ஈ என்பவன் உடையவன் முன்னர் ஒரு முறைதான் பல்லைக்காட்டுகிருன். ஆனுல் ஈயேன் என்பவனே, இல்லாதவன் முன்னர் ஒரு முறைக்கு இருமுறை, 'ஈ' என்றும் 'யேன்' என்றும் பல்லைக் காட்டி ஆகவேண்டியிருக்கிறது. ஆகவே இது மிக மிக இழிந்த நிலையாயிற்று. செல்வ வாழ்வு வாழும் மனிதன் செய்யவேண்டியது, பிறர்க்குக்கொடுத்தல். இதுவே வாழ்க்கையின் உயர்ந்த நிலையும் குறிக்கோளும் ஆகும். 'ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல, தூதிய மில்லை உயிர்க்கு" என்பது பொய்யாமொழி. அவ்விதம் கொடுத்த இடத்தும் அதனைக் கொள்ள மறுப்பது மிகமிக உயர்ந்த நிலை அது பெருமிதமும் ஆண்மையும் நிறைந்த சீரிய நிலை. இன்னுயிராயினும், கொள்ளுதல் தீது, கொடுப்பது நன்று என்ற கொள்கையையுடையவன் தமிழன்:—

> "ஈயென விரத்த லிழிந்தன் றதனெதிர்
> ஈயே னென்ற லதனினு மிழிந்தன்று
> கொள்ளெனக் கொடுத்த லுயர்ந்தன் றதனெதிர்
> கொள்ளே னென்ற லதனினு முயர்ந்தன்று."
>
> (புறநானூறு—204).

தள்ளாத நிலையிலே ஒருவன் வந்து தன்னிடம் இரந்த பொழுது, அவன் வறுமையைக்களைய இயலாது போனுல், தான் உயிர் வாழ்ந்தும் பயனில்லை எனக் கருதுவான் தமிழன். தன் தம்பியால் நாடு கொள்ளப்பட்டுக் காட்டில் வாழ்ந்து வந்த குமணன் என்னும் வள்ளலிடம் பெருந்தலைசாத்தனுர் என்ற புலவர் பரிசில் வேண்டிச்சென்றுர். அவர் வறுமையை ஒழிக்கமாட்டாத தன் இழிநிலைக்கு வருந்தின குமணன், தனது தலையைக் கொய்துசென்று தம்பியிடம் கொடுத்தால் அவன் நிறைந்த பொருள் தருவான் என்று கூறி, வாளினைப் புலவரிடம் கொடுத்துத் தலையை அரிந்து கொள்ளும்படி வேண்டினன் என்ற செய்தி புறநானூறு 165-வது பாடலிற் சொல்லப்படுகிறது. தமிழ் உள்ளம் எத்தகையது என்பதனை

இதனால் நன்கு அறியலாம். "சாதலின்" னின்னாத தில்லை யினிததூஉம், ஈதலியையாக்கடை" என்ற திருக்குறளையும் காண்க.

**அருள் :**

பதவியைக் குறிக்கும் நீண்ட பட்டங்களைப் பெறுவதும், விரைந்த செலவினையுடைய ஊர்திகளின்மேல ஏறிச்செல்வதும் முதலாயின செல்வமுடைமையைக் குறிக்கும். ஆனால் இத்தகைய வெளிப்பகட்டான செல்வங்களைத் தமிழ்ச் சான்றோர் செல்வம் என்று கருத மறுத்தனர். இத்தகைய செல்வம் முன்பு தாம் செய்த வினைப்பயனால் எய்தப்படுவதாகும். சான்றோராலே மதித்து உயர்த்திக் கூறப்படும் செல்வம் யாதெனில், தம்மை நம்பி வந்தடைந்தவர்க்கு உண்டாகிய துன்பத்தை யஞ்சி அத்துன்பத்தைப்போக்கி அவரைக் கைவிடாமல் காக்கும் இனிய தன்மையே யாகும்:—

"நெடிய மொழிதலுங் கடிய வூர்தலுஞ்
செல்வ மன்றுதன் செய்வினைப் பயனே
சான்றோர் செல்வ மென்பது சேர்ந்தோர்
புன்க ணஞ்சும் பண்பின்
மென்கட் செல்வஞ் செல்வமென் பதுவே."

(நற்றிணை —210)

நாம் இவ்வுலகிற் படைத்த செல்வம் அறனும் பொருளும் இன்பமும் என்னப்பட்ட மூன்றும் செய்வதற்கு உதவ வேண்டும். அவ்விதம் நமது செல்வம் உதவாதொழிந்தால், நாம் நம்மையே பாதுகாவாதவர்களாவோம் என்பதை உணர்ந்து கூறினான் தமிழன் :—

"அறனும் பொருளு மின்பமு மூன்றும்
ஆற்றும் பெருமநின் செல்வம்
ஆற்றா மைநிற் போற்றா மையே."

(புறநானூறு—28)

1-2-14-1

**நிலையாமை:**

ஒரு நாடகமேடை போன்றது இவ்வுலகம். கூத்தாட்டத்திலே பலவகை நடிகர்கள் வெவ்வேறு கோலத்துடன் தோன்றித் தமது வேடத்துக்கியைய ஆடி மறைவது போல், பல உயிர்களும் அடைவடைவே தோன்றி இயங்கி இறந்து போகின்றன. இத்தகைய உலகில் நமது கிளைஞர் மகிழ்ச்சியில் திளைக்கும் வண்ணம் நாம் படைத்த பொருளை எல்லார்க்கும் உதவும்படி கொடுத்துப் புகழ்பெறுவதே அறிவின் செயலாகும் என்று எண்ணினான் தமிழன்:—

"விழவிற், கோடியர் நீர்மைபோல முறைமுறை
ஆடுநர் கழியுமிவ் வுலகத்துக் கூடிய
நகைப்புற னாகநின் சுற்றம்
இசைப்புற னாகநீ யோம்பிய பொருளே."

(புறநானூறு—29)

இரவிலே திங்களஞ் செல்வன் வானிலே தோன்றி ஒரு சிறந்த பாடத்தை உலகத்திற்குக் கற்றுக்கொடுக்கிறான். அது யாதெனில், இவ்வுலகிலே வளர்ந்த தொன்று பின் குறைதலுறும்; குறைந்ததொன்று பின் வளர்தலுறும்; பிறந்ததொன்று பின் இறந்துபடும்; இறந்ததொன்று மாறிப் பிறந்து வரும். கல்வி வாசனையேயில்லாத அறிவிலிகளும் கூட இவ்வுண்மையைத் தெரிந்து கொள்ளும்படி, தானே தோன்றியும், மறைந்தும், வளர்ந்தும், தேய்ந்தும் வானில் மதியம் நிலையாமையை உணர்த்திக்கொண்டிருக்கிறது. இவ்வுலகில் வாழ்வும், தாழ்வும், தோற்றமும், மறைவும் யாவர்க்கும் வரக் கூடியனவே. ஆதலால் ஒன்றை மாட்டாராயினும் வல்லாராயினும், வறுமையால் வருத்தமுற்று வந்தோராது வாடிய முகம் கண்டும் பசி கண்டும் அவர்களுக்கு இல்லையென்னாது

---

"All the world's a stage
And all the men and women merely players:
They have their exits and entrances"

(Shakespeare's "As You Like It")

வழங்குதல் வேண்டும். அவ்விதம் வழங்கும் ஈரநெஞ்சமுடையோர்களே இவ்வுலகில் தத்தம் பகைவரை வெல்வர் என்பதைத் தெரிந்து கூறினன் தமிழன்:—

"தேய்த லுண்மையும் பெருக லுண்மையும்
மாய்த லுண்மையும் பிறத்த லுண்மையும்
அறியா தோரையும் அறியக் காட்டித்
திங்கட் புத்தேள் திரிதரு முலகத்து
வல்லா ராயினும் வல்லுந ராயினும்
வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி
அருள வல்லை யாகுமதி யருளிலர்
கொடாமை வல்ல ராகுக
கெடாத துப்பினின் பகையெதிர்ந் தோரே."

(புறநானூறு—27)

**கொடை :**

இவ்வாறு அருட்செல்வமே செல்வத்துட் செல்வம் என்பதையும், அருள் நிலைகாக்கும் என்பதையும், பகுத்துண்டு வாழும் வாழ்க்கையே நல்ல சமூக வாழ்க்கை என்பதையும் தமிழன் கண்டான். ஒருவன் தன் தேவைகளுக்குப்போக மிகுந்தவற்றைப் பிறர்க்கு ஈத்துவக்கும் இன்பமே அழியாத நிலைத்த இன்பம். அவ்விதம் வழங்கும் விரிந்த நோக்கின்றி ஒருவன் சேர்த்து வைப்பதால் அவனுக்கும் உலகிற்கும் தீமையே நேரிடும். செல்வத்துப்பயன் ஈதல். செல்வரின் கடமை கொடுத்தல். நாட்டு மன்னனுக்கும் காட்டுமறவனுக்கும் தேவைகள் யாவும் ஒத்தேயிருக்கும். யாவருக்கும் உண்டியும் உடையும் ஏறக்குறைய ஒத்த அளவினவேயாகும். பின் அவர்களுக்கிடையே உள்ள வேறுபாடுதான் என்ன? அது ஈதல் ஒன்றுதான் ஈயாத மன்னனுக்கு நாகரிகம் ஏது? காட்டுமிராண்டியேயாவான். நாகரிகம் என்ற சொல்லுக்குக் கண்ணோட்டம் என்று பொருள் கூறினவன் தமிழன். இது ஒன்றே தமிழ் உள்ளத்தின் உயர்ந்த நிலையை எடுத்துக்காட்டுவதற்குப் போதுமான சான்றாகும். தேடிய செல்வம் அனைத்தையும் தானே நுகரவேண்டும் என்று ஒருவன் நினைத்

தால், அவன் நினைத்த அக்கணத்திலேயே அவனுக்கும் அவன் செல்வத்திற்கும் கேடு வந்துவிட்டது என்று திட்டமாய்க் கூறலாம் இடையே எத்தனையோ துன்பங்கள் வந்து அவன் செல்வத்தைத் தட்டிப் பறித்துவிடும் அவன் வாழ்க்கையைக் கொட்டிக் கவிழ்த்துவிடும். ஆதலால் செல்வம் உண்டான பொழுதே அதைப் பிறர் நலத்திற்கு வழங்கி உபகாரியாக விளங்க வேண்டும்:-

"தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்
கடுமாப் பார்க்குங் கல்லா வொருவற்கும்
உண்பது நாழி யுடுப்பவை யிரண்டே
பிறவு மெல்லா மோரொக் கும்மே
செல்வத்துப் பயனே யீதல்
துய்ப்பே மெனினே தப்புந பலவே."

(புறநானூறு—189).

**விருந்தோம்பல்;**

நாள்தோறும் மலர்ந்த முகத்துடன் விருந்ினரை விரும்பி எதிரேற்று இன்னுரை பகர்ந்து உபசரித்து உண்டி வழங்குவதைத் தமிழ் மக்கள் இருபாலாரும் தமது கடமையாகக் கொண்டனர். பண்டைத் தமிழ் நாட்டில் முடிமன்னர், வள்ளல்கள் போன்றவரே யன்றி, வறிதான வாழ்க்கையை யுடைய ஏழைக் குடிமக்களும் கானவேட்டுவரும் கூட, விருந்தோம்பலைத் தமது கடமையாகவும் ஒரு சிறந்த தொண்டாகவும், ஓர் இன்பப் போதுபோக்காகவும் கொண்டு ஒழுகினர். விருந்தோடு உண்ணும் உணவையே உடம்பொடு சேரும் உணவாகக் கருதினர். தமது இல்லம் நோக்கி ஒரு நாள் விருந்தினர் வாராது போயினும் அதற்குப் பெரிதும் கவன்றனர் காகம் கரைந்தால் விருந்து வருமென்று காகத்தைக் கரையவேண்டினர் இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டே

என்பது தமிழனின் கொள்கை. விருந்தோம்பலிலுள்ள தமிழ் உள்ளத்தின் ஆர்வத்தை ஒரு புறநானூற்றுப் பாடல் தெள்ளத் தெளியப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

காட்டின் புறத்திலே ஒரு குடிசை இருந்தது. அது யானை வேட்டுவனுக்குரியது. அதன் முன் பக்கத்தில் முன்னைக் கொடியும் முசுட்டைக்கொடியும் பந்தல் வேய்ந்தது போல் அடர்ந்து படர்ந்திருந்தன. வாசலில் ஒரு மான் தோலில் அன்றைய உணவுக்கு ஆகவேண்டிய தினையரிசி காயவைத்திருந்தது. பந்தலின் கீழே ஒரு கயிற்றுக் கட்டிலில் வேடன் படுத்துக் களைப்புத்தீர உறங்கிவிட்டான். கலையும் பிணையுமாக இரண்டு வளர்ப்பு மான்கள் ஒன்றோடொன்று அன்பு காட்டி இன்புற்று நின்றன. இந்த நிலையில், காட்டுக் கோழியும் இதல் என்னும் பறவைகளும் வந்து தினையரிசியைத் தின்னத் தொடங்கின. வீட்டினுள்ளிருந்த வேடனின் மனைவியால் ஒன்றும் செய்யமுடியவில்லை. அவள் வெளியே வந்து பறவைகளை விரட்டுவதென்றால் மான்கள் கலைந்து அவற்றின் இன்பநிலைக்கு இடையூறு நேரிடும். உள்ளிருந்தவாறே கூச்சலிட்டு விரட்டுவதென்றால், கண்ணயரும் கணவனின் உறக்கம் கலைந்துவிடும். ஆகவே, அவள் இரண்டும் செய்ய முடியாமல் வாளா இருக்கவேண்டி வந்தது. தினையும் ஒரு நொடிப்பொழுதில் காலியாகிவிட்டது. சிறிது பொழுது கழித்து ஒரு பாணர் கூட்டம் அந்தவழியாக வந்து சேர்ந்தது. அவர்கள் அரசனிடத்தில் பரிசில் பெறுவதற்காகப் போகின்றவர்கள். பாணர்களுக்கு நல்ல பசிவேளை. விருந்தினர்கள் வந்தார்களே யென்று வேடன் மனைவிக்கு மகிழ்ச்சி பொங்கியது. ஆனால் தினையைப் பறவைகள் தின்றுவிட்டதால், பானையில் அரிசி யில்லை. ஆயினும், உள்ளதைக் கொண்டு நல்லதைச் செய்து வந்த விருந்தினர் பசியை ஆற்றவேண்டும் என்று வேடன் மனைவி விரும்பினாள். ஆரல் மீனும் இறைச்சித் துண்டமுமே வீட்டில் இருந்தன. அவற்றைக் கொண்டு சந்தன விறகெரித்து உணவாக்கினாள். பாணர் சுற்றத்தைப்

புசியுடன் போகவிடார்து, இருத்திவைத்து மனம் குளிர விருந் தூட்டி உபசரித்தாள். எந்த நிலையினும் விருந்தினரைத் தள்ளாத தமிழனின் விழுமிய பண்பாடு இதனால் நன்கு புலனாகிறது. ஒரு வேடனின் மனைவியாய் இருந்தும், விலங்கு களின் இன்பம் சிதைக்காத அவளது அன்புள்ளமும், கணவ னின் நலம் பேணும் அவளது கற்பின் திண்மையும், விருந் தெதிர்கொள்ளும் அவளது விரிந்த மனமும் வியக்கத்தக்கன வாகும். காதலும் கருணையும் பெருகி யோடிய அவள் உள்ளத்தை ஓர் எழிலோவியமாய்த் தமிழமுதம் குழைத்துத் தீட்டுகிறது இப்பாடல்:—

"முன்றில் முஞ்ஞையொடு முசுண்டை பம்பிப்
பந்தர் வேண்டாப் பலர்தூங்கு நீழற்
கைம்மான் வேட்டுவன் கனைதுயில் மடிந்தெனப்
பார்வை மடப்பிணை தழீஇப் பிறிதோர்
தீர்தொழிற் றனிக்கலை திளைத்துவிளை யாட
இன்புறு புணர்நிலை கண்ட மனையோள்
கணவன் எழுதலும் அஞ்சிக் கலையே
பிணைவயின் தீர்தலும் அஞ்சி யாவதும்
இல்வழங் காமையிற் கல்லென ஒலித்து
மானதட் பெய்த உணங்குதினை வல்சி
கானக் கோழியோ டிதல்கவர்ந் துண்டென
ஆர நெருப்பின் ஆரல் நாறத்
தடிவார்ந் திட்ட முழுவள் ளூரம்
இரும்பே ரொக்கலொ டொருங்கினி தருந்தித்
தங்கினை சென்மோ பாண தங்காது
வேந்துதரு விழுக்கூழ் பரிசிலர்க் கென்றும்
அருகா தீயும் வண்மை
உரைசால் நெடுந்தகை யோம்பிய வூரே."

(புறநானூறு—320)

தான் வளர்த்த மான்களுக்கு வேடன் மனைவி இரங்கியது பெரிதில்லை, என்று சிலர் கருதலாம். ஆயின் வேறொரு சான்றினை உற்று நோக்குவோம். ஒரு வீரன் தான் கொண்ட

வினை முடித்துக் கார் காலத்தில் வீடு திரும்புகிறான். காட்டு வழியே குதிரை பூட்டிய தேரிலே ஊர்ந்து வருகின்றான். குதிரையோ பந்துபோல் துள்ளிப் பரிகிறது. காதலியைக் கடிதிற் சென்றடையத் துடித்துக்கொண்டிருக்கும் தலைவனின் உள்ளக் குறிப்பினை அறிந்த பாகனும் வேகமாய்க் குதிரையை ஓட்டி வருகிறான். வழியில் இரண்டு மான்கள், கலையும் பிணையுமாகக் கூடி நிற்கின்றன. கலையின் கொம்புகள், உதிர்ந்துகொண்டுவரும் வாழைப் பூவின் நடுத்தண்டு மேலே தெரிவது போல், வனப்புக் காட்டின. பிணையின் திரண்ட கால்கள் அழகுடன் விளங்கின மான்களைக் கண்ட தலைவன் தேரொலி கேட்டு அவை கலைந்துவிடுமோ என்று கலங்கினான். காதல் கசிந்த அவன் உள்ளத்தில் அருள் பூத்தது. உடனே, சாட்டையால் குதிரையை முடுக்கி ஓட்டாது மெல்ல நடத்திச் செல்லும்படி வலவனை வேண்டுகிறான், பாருங்கள் :—

“வாஅப் பாணி வயங்குதொழிற் கலிமாத்
தாஅத் தாளிணை மெல்ல வொதுங்க
இடிமறந் தேமதி வலவ குவிமுகை
வாழை வான்பூ வூழுறு புதிர்ந்த
வொழிகுலை யன்ன திரிமருப் பேற்றொடு
கணைக்கா லம்பிணைக் காமர் புணர்நிலை
கடுமான் தேரொலி கேட்பின்
நடுநாட் கூட்டம் ஆகலு முண்டே.”

(அகநானூறு—134)

பார்வை மானுக்குப் பரிந்துருகிய பாவையைக் கண்டோம். அடவி மானுக்கு அருள் சுரந்த ஓர் அண்ணலைக் கண்டோம். மற்றும் இதோ, வண்டுக்கிரங்கிய திண்டிறல் வீரன் ஒருவனையும் கண்டு களிமின்! வானம் சிறு சிறு துளிகளைச் சிதறிய மாலையம் பொழுது. இளவேனிற் பருவம். காட்டின் புதல்களில் மலர்கள் பொதியவிழ்ந்து கம்மென்று மணம் வீசிக்கொண்டிருந்தது. தும்பி யாழ் செய்ய, வண்டும் முரன்றது. அவை நாடி நறவினை உண்டன. கொஞ்சிக்

கூடிக்கொண்டன. ஈடிலா இன்பம் கண்டன. அவ்வழி வீரன் ஒருவன் தேரினை ஏறித் தன் தலைவியைக் காண விரைந்து வருகிறான். கனிந்த காதலின் நிறைந்த அன்புடன் விரைந்து செல்லும் அவ்வீரன் வண்டின் வரிசையை அவை வாழும் பரிசுடன் கண்டு கொண்டான். தேனிலே குளித்துத் தாதிலே திளைத்து வானிலே களிக்கும் வண்டின் கூட்டம் தேரின் மணியொலி கேட்டு அஞ்சிச் சிதறுமோ என அருளால் அஞ்சினன். தேரை நிறுத்தி மணிகள் ஒலியாதபடி அவற்றின் நாவினைக் கட்டி. ஒலி மடங்கச்செய்து பின்னர் அரவம் இன்றித் தேரினை யோட்டிச் செல்கிறான். போரிலே கூற்றுடன்று மேல்வரினும் ஆற்றல் அழியாது அமர்புரியும் அடலரியன்ன ஆண்மகன் இவன்; அன்புறு மனத்தனாய் இல்லம் நோக்கி வருகிறான் காதலின் சுவையை இனிதுணர்ந்த அவ்வீரன் வண்டின் காதலையும் சிதையாது போற்றி அருள் காட்டிக் காக்கிறான். தன் தேரின் மணியொலி கேட்டால் தலைவி மகிழ்வாள் என்பது அவனுக்குத் தெரியும். அம் மகிழ்ச்சி தலைவிக்கு எய்தாவிடினும் சரி, வண்டின் கூட்டம் சிதையாதிருந்தால் போதும் என்ற அருள் உணர்ச்சி தோன்றி, அவன் அன்புணர்ச்சியை மீறுவதுபோல், அதற்குச் சிறப்புக் கொடுக்கிறது. மணிகளைப் பிடித்து நாவைக் கட்டிவிடுகிறான். கையும் மெய்யுமாய்க் களவிற் பிடிபட்டவன் வாயடைத்து வருதல் போல், அருள் வீரனின் தேரும் ஒலியவிந்து நடக்கிறது. தமிழ் உள்ளம் எத்தகைய அருள் உள்ளம் காண்மின்!

> "பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
> தாதுண் பறவை பேதுற லஞ்சி
> மணிநா வார்த்த மாண்வினைத் தேரன்
> உவக்காண் தோன்றுங் குறும்பொறை நாடன்."
>
> (அகநானூறு—4)

**தனக்கென வாழாமை :**

தமிழன் விருந்து புறத்ததாத் தான் உண்ணான். தேவாமிர்தம் என்னப்படும் சாவாமருந்தே கிடைத்த போதினும்

தனியே உண்பதென்பது தமிழன் ஏட்டில் இல்லை. ஒரு துன்பம் வந்துவிட்டால் ' ஐயோ! என்ன செய்வோம்" என்று கையை நெரிக்கும் பழக்கமும் தமிழனுக்கு இல்லை. மூலையி லிருந்து முக்காடிட்டு அழுதலையும் செய்யான். இருந்து அழுது யாவர் உய்ந்தார்? ஒருவரும் இல்லை. இது தமிழ னுக்குத் தெரியும். அவன் பிறர் கையை எதிர்பார்த்து வாழ வும் மாட்டான். பழியுடைச் செயல்கண்டு பதறுவான். இவ்வுலகமே தனக்குவந்து கிட்டுவதாயினும் தீமைபுரிய அவன் மனம் இடம் கொடாது. நலத்தின் கண்ணேயே அவனது நாட்டம் செல்லும். புகழ் தரும் செயல் என்றால் தன் உயிரைக் கொடுக்கவும் அஞ்சமாட்டான். பொதுநலப் பணிக்கே தன் வாழ்க்கையை உரித்தாக்கினான். பிறர்க்குப் பயன்படும் படியாகத்தன் வாழ்க்கை இருக்கவேண்டும் என் பதே அவனது குறிக்கோள். தன்னலம் பேணுதலை இழி தொழிலாகக் கருதினான். தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளனாய் வாழவேண்டும் என்பதே தமிழ் உள்ளத்தின் உயர் வுள்ளலாகும். அத்தகைய கொள்கையாளரைக் கொண்ட சமூகமே உருப்படும், முன்னேறும், முதன்மையை அடையும். பொதுநலப் பணிபுரியும் பெருமக்கள் மல்கியிருத்தலாலேயே உலகமும் உலகியலும் அழியாது வாழ்கின்றன. மக்கள் இரக்கமும் அன்புமற்ற அரக்கராக மாறித் தன்னலக் கொள் கையே எங்கும் தலைவிரித்தாடுமாகில் ஒரு கணப்பொழுதும் இவ்வுலகம் இயங்க முடியாது. இவ்வுண்மையைத் தமிழ் உள்ளம் அக்காலத்திலேயே உணர்ந்து உலகிற்கு எடுத்து ஓதியது. பிறர் இன்பம் காண்டலே தனக்கின்பம் எனக் கொண்டது. பிறர் நன்கு வாழத்தான் உழைத்தான் தமிழன். கடலுண் மாய்ந்த இளம் பெருவழுதி என்னும் பாண்டிய மன்னன் தமிழனுடைய உள்ளச் சிறப்பினையும் உயர்ந்த பண்பாட்டினையும் குற்றமில்லாக் குறிக்கோளினையும் சில அடிகளானமைந்த ஒரு சீரிய பாடலிற் கூறியுள்ளான்:—

" உண்டால் அம்மஇவ் வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்

தமியர் உண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.''

(புறநானூறு—182)

## பொல்லாங்கு செய்யாமை:

ஆயினும், எல்லோராலும் இவ்வளவு உயர்ந்த ஒழுங்கிலே ஒழுகுதல் முடியாதல்லவா? அங்ஙனம் நல்லது செய்ய முடியாதல்லவா? அங்ஙனம் நல்லது செய்யமுடியாதவர்கள் உலக நன்மைக்கு என்ன தொண்டு செய்வது? என்பது அடுத்த கேள்வி. இதற்கும் இடம் கொடுத்து விடை பகர்ந்தான் தமிழன். உலகம் இன்பமுற்று வாழவேண்டு மானால் ஒருவன் நல்லனவே செயயவேண்டும். அங்ஙனம் நல்லது ஒன்றும் அவனால் செய்ய முடியாது போயினும் குற்றமில்லை. இத்தகையவன் ஒரு கெடுதலும் செய்யா திருந்தாற் போதும். அதுவே மேலானது. அதுவே அவன் செய்யும் சமூகத்தொண்டு. அவ்விதம் அவன் தீமைபுரியா திருந்தால், அவனுக்கும் நல்லகதியுண்டு; சமூகமும் தீதின்றி யானது வாழும். ஒருவன் ஒன்றைச் செய்வது என்றால்தான் கடினம். ஒன்றும் செய்யாது சும்மா இருப்பது எளிதல்லவா? தீமைபுரியாது சும்மா இரு என்று சொன்னால், அதற்குக்கூட பலர் மனம் இசையமாட்டேன் என்கிறது. வயது முதிர்ந்து சாகப்போகிற கிழப்பருவத்திற்கூட நல்லது செய்யவேண்டும் என்ற உணர்ச்சியின்றிப் பிறர்க்குக் கெடுதலையே புரியு முற்படுவார்கள். இவர்களும் சான்றோர்கள் போலவே வெளிப்பார்வைக்குக் தோற்றம் அளிப்பர். இவர்களுடைய நரைத்த மயிரும் முதிர்ந்த பருவமும் வெளித்தோற்றத்தில் உலகை ஏமாற்றிவிடும் இவர்கள் செய்வதெல்லாம் அட்டூழியமும் இடும்புமாகவே இருக்கும் இத்தகையவர்

உளராஞல் சமூகம் எவ்வாறு இன்ப வாழ்க்கையை எய்த முடியும்? இத்தகைய தீத்தொழிலாளர் சமூகத்தையே அரித்துத்தின்னும் நச்சுக் கிருமிகள். இவர்கள் சாகும்வரை உலகிற்கு ஒரு பீடையாய்த் தீராத நோயாகவே இருப்பர். இவர்கள் ஒழிந்தாலொழிய உலகம் உருப்படாது. தமிழ் உள்ளம் இத்தகையோர்களைக் கண்டு அஞ்சியது. இத்தகைய மரக்கட்டை மனத்தர்களைத் தீமை புரியாதிருக்கும்படி மன்ருடி வேண்டிக்கொண்டது. இவர்கள் சாகும் நாளன்று சஞ்சலப்படுவார்களே என்று இரங்கவும் செய்தது:—

"பல்சான் றீரே பலசான் றீரே
கயல்முள் ளன்ன நரைமுதிர் திரைகவுட்
பயனில் மூப்பிற் பல்சான் றீரே
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திற லொருவன்
பிணிக்குங் காலை யிரங்குவிர் மாதோ
நல்லது செய்த லாற்றீ ராயினும்
அல்லது செய்த லோம்புமின் அதுதான்
எல்லாரு முவப்ப தன்றியும்
நல்லாற்றுப் படூஉம் நெறியுமா ரதுவே."

(புறநானூறு—195)

**நல்வினையின் நன்மை :**

இவ்வாறு நன்மை புரிவோர் ஒரு புறமும் தீமை புரிவோர் மற்ருெரு புறமுமாயிருக்க, இடையே சில சந்தேகப் பிராணிகள் உண்டு. "நன்மை செய்வோமா, வேண்டாமா? நன்மை செய்வதால் என்ன பயன் உண்டு? துறக்க இன்பம் கிடைக்குமா? துறக்கம் ஒன்று இருப்பதான அறிகுறியையே காணுமே. பிறவாமையாவது ஏற்படுமா? மறுபிறப்பே இல்லை என்றும் சிலர் சொல்கிருர்களே. அங்ஙனமாயின் நன்மையைச் செய்து யாது பயன்? அதனுல் நாம் வாரிக் கட்டப்போவது என்ன?" என்றெல்லாம் எண்ணி எண்ணிக் குழப்பமுற்றுக் கலங்குவார்கள். தமிழ் உள்ளத்திற்கு இத்தகைய கலக்கமே கிடையாது. பலவித உண்மைகளையும் உலகியல் அனுபவங்களையும் சீர்தூக்கி ஆராய்ந்து முடிவு கண்டவன் தமிழன்.

பயன் கிடைப்பினும் கிடையாவிடினும் உயர்ந்தனவற்றையே அவன் உள்ளம் நாடியது. சிட்டுக்குருவி வேட்டைக்குச் சென்று ஒரு குருவியும் கிடைக்காது வீடு திரும்புவதும் உண்டு. யானை வேட்டைக்குச் சென்று பலயானைகளைக் கொண்டுவருவதும் உண்டு ஆதலால் குருவியடிப்பதைவிட யானை வேட்டையில் முயல்வதேமேல் என்று, உயர்ந்த நல்ல செயல்களிலே முனைந்தது தமிழ் உள்ளம். துறக்கம் கிடைப்பினும் கிடையாதுபோயினும், மறுபிறப்பு உண்டெனினும் இல்லையேயாயினும், நீ நல்லதையே செய்தல் வேண்டும் என்றான் தமிழன். நாம் நல்லதைச் செய்தால், துறக்கம் கிடைப்பதாயிருந்தாலும் கிடைக்கட்டும். துறக்கம் என்பதே இல்லையென்றாலும் போகட்டும். அதுபோலவே, மறுபிறப்பைப் பற்றியும் சிந்திக்கவேண்டுவதில்லை. நாம் செய்த நன்மைக்கு ஒருநாளும் கெடுதல்வராது. நாம் செய்யும் நன்மையே நமக்குச் சிறந்ததொரு நன்மையாகும். (Virtue is blessed in its own self) நாம் நன்மையைச்செய்து இம்மையில் அதனால் அடையும் புகழ் இருக்கிறதே, அதே போதும். நாம் சாகினும் நம் புகழ் சாகாது மலைபோல நிற்கும். துறக்க இன்பத்தையும் மறுபிறப்பின்மையையும்விட, இவ்வுலகிற் பொன்றாது நிற்கும் ஒன்றாகிய புகழே மேன்மையானது ஆகவே ஐயமும் அழுக்கும் அகற்றி நன்மையைச் செய்து புகழ் பெறுவாயாக என்று கூறியது தமிழ் உள்ளம்:—

"செய்குவங் கொல்லோ நல்வினை யெனவே
ஐயம் அறாஅர் கசடீண்டு காட்சி
நீங்கா நெஞ்சத்துத் துணிவில் லோரே
யானை வேட்டுவன் யானையும் பெறுமே
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே
அதனால், உயர்ந்த வேட்டத் துயர்ந்திசினோர்க்குச்
செய்வினை மருங்கி னெய்த லுண்டெனின்
தொய்யா வுலகத்து நுகர்ச்சியுங் கூடும்
தொய்யா வுலகத்து நுகர்ச்சி யில்லெனின்
மாறிப் பிறப்பி னின்மையுங் கூடும்
மாறிப் பிறவா ராயினும் இமயத்துக்

கோடுயர்ந் தன்ன தம்மிசை நட்டுத்
தீதில் யாக்கையொடு மாய்தல்தவுத் தலையே.''
(புறநானூறு—214)

நல்வினையால் நன்மை விளைவதையும் தீவினையால் தீமை விளைவதையும் ஐயம் திரிபர ஆய்ந்து கண்டவன் தமிழன். அவற்றை இல்லை என்று மறுப்பவர் என்றும் தீமையே புரிந் தொழுகும் தீத்தொழிலாளராய்த் திரிதர்வர் என்பதையும் உணர்ந்தான். அவர்கள் என்றும் சமூகத்தையே கெடுப்பவர்கள் ஆதலால் அவர்களுடன் கூடுதல் ஆகாது என்றும் எச்சரித்தான் :—

'' நல்லதன் நலனுந் தீயதன் தீமையும்
இல்லை யென்போர்க்கு இனனாகிலியர்.''
புறநானூறு—29)

கைம்மாறு வேண்டாக் கடப்பாடு உடையவர் தமிழர். இப்பிறப்பின்கட் செய்ததொன்று மறுபிறப்பிற்கு உதவும் என்று கருதிப் பொருளை விலையாகக் கொடுத்து அதற்கு அறங்கொள்ளுதல் இழிவான வாணிகம் என்று மதித்தான் தமிழன். தமிழனுக்கு ஈகையும் நற்செயல்களில் நாட்டமும் இயல்பாகவே வந்து பொருந்தின.

இனியவை நாண்டல் :

இதனால், மேலுலக வாழ்க்கையின் பயன்களைக் கருதாது இவ்வுலகத்திலே இன்பம் எய்தும் விதமாய்த் தன் பெயர் என்றும் நிலைத்திருக்கும் முறையில், ஒருவன் நல்லனவற்றைச் செய்தல் வேண்டும் என்பது பெறப்படும். அங்ஙனமாயின், இவ்வுலகத்தின் இயற்கைதான் யாது? இவ்வுலகம் மிகப் பொல்லாததுதான். இன்பமும் துன்பமும் நிறைந்தது இவ் வுலகம். ஒருபக்கம் அழுகையும் இழவும்; ஒருபக்கம் மண மும் விழவும்; ஒருபக்கம் காதல்; ஒருபக்கம் சாதல். ஒரு பக்கம் விருந்தும் எக்களிப்பும்; ஒருபக்கம் பசியும் பட்டினியும். உலகைப் படைத்தவன் சீராகப் படைக்கவில்லை என்பதை

நேராகக் கூறச் சிலர் அஞ்சுவர். ஆனால் அது உண்மை என்பதை எல்லோரும் மனதினுள் உணர்வர். இவ்விதம் உலகைப் படைத்தவன் பண்பில்லாதவன். இவ்வுலகின் இயற்கை கொடிதுதான். ஆனால் நாம் செய்யவேண்டியதென்ன? துன்ப உலகிலே இன்பம் காண்பதுதான் அறிவாளியின் செயல். உலகியலை நன்குணர்ந்தோர் அதன் இன்னாமையை இனிதாகக் கொள்ளுதல் வேண்டும். தீயனவற்றைக் களைந்து நல்லனவற்றையே செய்தல் வேண்டும். ஒவ்வொருவரும் நலத்தையே நாடிப்புரிவார்களாயின் எங்கும் இன்பம் பரவிடும் என்பதில் ஐயமில்லை. வீணாக உலகியற்றியவனைக் குறைகூறிப் பயனில்லை. அவன் படைத்த இன்னா உலகையும் இனிதாகச் செய்வோம், இன்பத்தையே காண்போம் என்று துள்ளி எழுந்தது தமிழன் உள்ளம்:—

"ஓரில் நெய்தல் கறங்க ஓரில்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்
புணர்ந்தோர் பூவணி யணியப் பிரிந்தோர்
பைத லுண்கண் பனிவார் புறைப்பப்
படைத்தோன் மன்றஅப் பண்பி லாளன்
இன்னா தம்மஇவ் வுலகம்
இனிய காண்கிதன் இயல்புணர்ந் தோரே."

(புறநானூறு—194).

**ஊழ் நயத்தல்;**

மனித ஆற்றலையுங்கடந்த ஒரு சக்தி உலகினை ஆட்டி வருவதைத் தமிழன் உணர்ந்தான். அதுவும் ஓர் ஒழுங்கியல் நெறியிலே ஒழுகிவருவதால் அதற்கு ஊழ் என்று பெயர் கொடுத்தான். அவ்வூழானது மலைச்சரிவிலே இறங்கிவருகிற ஆற்று வெள்ளம் போன்றது. அவ்வெள்ளத்திலே அகப்பட்ட புணைபோன்றன உயிர்கள். அவ்வூழை எதிர்த்துப் போராடுதல் மனிதனால் இயலாதது. ஆனால் அவ்வூழோடு நாம் பழகி நட்புக்கொண்டு அதற்கேற்ப ஒழுகினால், அவ்வூழையும் நம் நலத்திற்குப் பயனாக்கிக் கொள்ளலாம். அதற்கு நாம் செய்யவேண்டியதென்ன? உயிர்களின் அறிவு இச்சை

செயல்களுக்கு ஏற்றவாறே ஊழ் என்பதும் இவ்வுலகத்து நுகர்ச்சிகளை உயிர்களுக்கு அமைத்துக் கொடுக்கிறது. ஆதலால் ஒருவரை யொருவர் குற்றம் கூறுவதிற் பயனில்லை. எந்த ஊரும் நமது ஊர்தான். எந்த நாடும் நமது நாடுதான். நாம் ஒருவரிடத்தும் பகைமை கொள்ளுதல் ஆகாது எல்லாரையும் நமது உறவினர்களாகவே மதிக்கவேண்டும். பெரியவன் என்று புகழ்வதும் சிறியவன் என்று இகழ்வதும் கூடாது. ஒருவனை ஒருவன் ஆக்கவும் முடியாது, அழிக்கவும் முடியாது இன்பமும் துன்பமும் ஒருவர் கொடுத்து நாம் பெறுவன வல்ல. நமது செயல்களினாலேயே அவை நமக்கு வருகின்றன. சாவைப்பற்றி நாம் அஞ்சவேண்டியதேயில்லை. என்று பிறந்தோமோ அன்றே இறப்போம் என்பது நிச்சயமாகிவிட்டது. சாவு என்பது புதிதன்று. அது ஒரு சிலருக்கே உரியது மன்று. ஆறிலும் சாவுதான், நூறிலும் சாவுதான். நமக்கு ஓர் இடுக்கண் வந்ததே என்று அல்லற்படுவதால் அது தீர்ந்துவிடப்போவதில்லை அதற்காக நாம் நமது மனதைத் தளரவிடுதல் ஆகாது. வாழ்விலும் தாழ்விலும் நாம் ஒத்த மனத்தராய் ஒழுகப் பயிலுதல் வேண்டும். நமது கடமையை நாம் சரிவரச்செய்து நல்லனவற்றிலேயே நாட்டம் செலுத்தினால் வந்த துன்பம் தானாக மறைந்துவிடும். தடுக்கமுடியாத ஊழையும் நமது ஏவலின் வரையிலே நிறுத்திவிடலாம். இவ்விதம் ஆராய்ந்து தெளிந்தான் பண்டைத் தமிழன். தான்கண்ட உண்மையை உலகுக்கும் எடுத்துக் கூறினான் :—

"யாதும் ஊரே யாவருங் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலுந் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன் றுமிலமே முனிவின்
இன்னா தென்றலு மிலமே மின்னொடு
வானந் தண்டுளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்
முறைவழிப் படூஉ மென்பது திறவோர்

*காட்சியிற் றெளிந்தன மாகலின் மாட்சியிற்*
*பெரியோரை வியத்தலு மிலமே*
*சிறியோரை யிகழ்த லதனினு மிலமே"*

(புறநானூறு—192)

**நான்கு தூண்கள் :**

சுருங்கச் சொல்லுமிடத்து, நாகரிகமும், கலைச் சிறப்பும், பண்பாடும், குணநலனும் செறிந்து கிடக்கும் தமிழ் உள்ளம் ஓர் அழகிய கோயிலாக நமக்குக் காட்சி அளிக்கிறது. அக் கோயிலைத் தாங்கும் தூண்கள் நான்கு. அவை, பொறுமை, ஈகை, வீரம், உயர்வு என்பனவாகும். முதலாவது, தன்னை அடுத்தவர்கள் ஏதோ தவறு செய்துவிட்டாலும் அதை மிகைப்படுத்தாது பொறுத்தருள்வது தமிழனின் இயல்பு. இரண்டாவது ஈகை. அது அவனது பிறவிக்குணம். தலை முறை தலைமுறையாக முன்னோர்வழி ஒழுகியதால் அவன் இரத்தத்திலே ஊறிவந்த இயல்புக்குணம். பிறருடைய வறுமையைக் கண்டு நாணித் தலைகவிழ்வான் தமிழன். "நான் வாழும் உலகிலே ஒருவன் உண்ண உணவின்றி உடுக்க உடை யின்றி இரப்பிலே நின்று வருந்துவதா? பின்னர் நான் உயிர் வாழ்ந்துதான் பயன் என்ன?" என்று விம்முவான் அதை முன்னமே தெரிந்து தான் தீர்த்துவைக்க வில்லையே என்று நாணுவான். உடனே அவ்வறுமையைக் களைவதற்காவன விரைந்து செய்வான். மூன்றாவது வீரம். பகைவனுக்கு அஞ்சிப் புறமுதுகிட்டு ஓடுவது தமிழனுக்குத் தெரியாது. சாவுக்கு அஞ்சான் தமிழன். உயிரைவிட மானமே பெரிதென்று கருதுவான். நான்காவது, உயர்வு அல்லது பெருமை. தமிழன் பெருமித நடையை உடையவன். அவனது ஏறு போன்ற பீடுநடையைப் பழந்தமிழ் ஏடுகள் சலியாது ஓயாது பறை சாற்றுகின்றன. ஒருவனுக்குப் பின்னே தலைகவிழ்ந்து முழங்கையைச் சொறிந்துகொண்டு நடப்பது தமிழ் வழக்கன்று. மாண்புமிக்க மன்னர் அவைக் களத்திலும் அத்தாணி மண்டபத்தும் ஏங்கலித்து அஞ்சி ஒடுங்குவது தமிழன் இயல்பன்று. இக்காலத்திலே அச்சம்